உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 22 வியாழக்கிழமை (05.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 160



02
சென்னை வெற்றி



03
ரென்னிஸ் போட்டிக்கு முன்பாக 'செக்ஸ்'



10
அபிவிருத்திக்காக எல்லோரும் உழைப்போம்



13
ஆதரித்தால் புலிகள்; எதிர்த்தால் சிங்கங்கள்



16
வச்ச குறி தப்பாது

# போர்க்குற்றம் புரிந்தோரை நீதியின் முன் நிறுத்துங்கள்

## கொழும்பில் பிளேக் வலியுறுத்து



கொழும்பு, மே5

இலங்கையில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை நீதியின் முன் நிறுத்துங்கள் என்று வலியுறுத்தியுள்ள அமெரிக்கா, தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறும் கொழும்பு அரசுக்கு அறிவுரை கூறியுள்ளது. அதுவே நீடித்த அமைதியை ஏற்படுத்த வழிவகுக்கும் என்று தெரிவித்தார் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பிரிவின் துணைச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக்.

மூன்று நாள் பயணமாக இலங்கை வந்த பிளேக் நேற்று அமைச்சர் பீரிஸ் மற்றும் பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட அரச பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார். மாலையில் செய்தியாளர்களைச் சந்தித்த பிளேக், தமிழ்ச் சிறுபான்மையினருடன் அரசியல் அதிகாரங்களைக் கொழும்பு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

(29ஆம் பக்கம் பார்க்க)

## பீரிஸ் தலைமையிலான குழு இந்தியா மற்றும் சீனா செல்லும்

### நிபுணர் குழு அறிக்கை குறித்து விளக்க முடிவு

கொழும்பு, மே 05

ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக விளக்கம் அளிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான உயர் மட்டக் குழு இந்த மாத நடுப்பகுதியில் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளது.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் குழு இந்த மாதம் 16ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு அரசின் முக்கிய பிரமுகர்களுக்கு விளக்கம் அளிக்கும். பின்னர் இந்தக் குழு 24ஆம் திகதி சீனாவுக்கு விஜயம் செய்யும்.

இதேவேளை, மற்றும் ஓர் உயர்மட்டக் குழு மே 26, 27ஆம் திகதிகளில் அணிசேரா நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை இந்தோனேஷியாவில் சந்தித்து விளக்கம் அளிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-சி)

## நிபுணர் குழு அறிக்கை தெளிவற்றது; அது ஐ.நா. ஆவணத்தை ஒத்ததல்ல

### பிளேக்குடனான சந்திப்பில் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, மே 5

ஐ.நாவின் செயற்பாடுகள் தெளிவானவை. ஆனால் அதன் செயலாளர் அமைத்த நிபுணர் குழுவின் அறிக்கை தெளிவற்றது - புரிந்துகொள்ள முடியாதது. அந்த அறிக்கை ஐ.நா. ஆவணத்தை ஒத்ததும் அல்ல.

மேற்கண்டவாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக்கிடம் கூறினார்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் ரொபேர்ட் ஓ பிளேக்குக்கும் இடையில் நேற்று கொழும்பில் சந்திப்பொன்று இடம்பெற்றது. அச்சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (29ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழு அறிக்கை: பிரான்ஸின் நிலைப்பாடு விரைவில்

கொழும்பு, மே 05

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை குறித்த பிரான்ஸின் நிலைப்பாடு விரைவில் வெளியிடப்படும் என்று ஐ.நாவுக்கான பிரான்ஸ் தூதுக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கை தொடர்பான நிலைப்பாட்டைக் கூறுமாறு 'இன்னர்சிற்றி பிரஸ்' இணையதளம் ஐ.நாவுக்கான பிரான்ஸ் தூதுக்குழுவின் பேச்சாளரிடம் கேட்டிருந்தது.

இந்த அறிக்கை தொடர்பான பிரான்ஸ் அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு பிரான்ஸ் அரசால் மிக விரைவில் பரிஸ் நகரில் இருந்து வெளியாகும் என்று தூதுக்குழுவின் பேச்சாளர் கூறினார்.

இதேவேளை, சர்வதேச நாடுகளில் உள்ள புலிகளுக்கு ஆதரவான செயற்பாட்டாளர்களால் இலங்கைக்கு எதிராக பனிப்போர் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது என்று

(29ஆம் பக்கம் பார்க்க)

## மகஸின் கைதி உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்

கொழும்பு, மே 05

புதிய மகஸின் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்துவந்த தமிழ் அரசியல் கைதியின் உண்ணாவிரதத்தை நேற்று நீதியமைச்சர் சார்பில் அங்கு சென்ற தூதுக்குழு பால் வழங்கி முடித்துவைத்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (29ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கின் சில பகுதிகளில் ஓரிரு வாரங்களில் மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம்,மே5

வலிகாமம் வடக்கில் மேலும் சில பகுதிகளில் இன்னும் ஓரிரு வாரத்துக்குள் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவர் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

இதற்கான அனுமதியை படைத்தரப்பு வழங்கியுள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதிக்குப் பின்னர் சில பகுதிகளில் மீளக் குடியமர்த்தலாம் என்று யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார். (29ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு இனி கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுக்கப்படும்

### பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் உறுதியளிப்பு

கொழும்பு, மே 05

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக நடைபெறும் மாவட்ட ஒருங்கிணைப்பு மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் கலந்து கொள்ளலாம். உத்தியோக பூர்வமாக அழைப்புகளும் அனுப்பிவைக்கப்படும்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் ஜோன் செனவிரத்ன இதனைத் தெரிவித்தார்.

கடந்த மாதம் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பப்படவேண்டிய அவசியம் இருக்கவில்லை. அரசுடன் இணைந்து செயற்படும் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு மட்டும் அழைப்பு விடப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(29ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன இளைஞரின் சடலம் மாங்குளம் காட்டுப் பகுதியில் மீட்பு

யாழ்ப்பாணம்,மே5

ஏழு நாள்களுக்கு முன்னர் காணாமற்போயிருந்த இளைஞர் ஒருவர் முல்லைத்தீவு மாங்குளம் சந்தியை அண்மித்துள்ள காட்டுப் பகுதியில் கிணறு ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவுப் பொலிஸாரால் மீட்கப்பட்ட இந்தச் சடலத்தைப் பார்வையிட்ட நீதிவான் ஆர்.பிரபாகரன் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அதனை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார்.

மலையகத்தைச் சேர்ந்த இராசையா லக்ஸ்மன் (வயது-35) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். மாங்குளம் சந்தியிலுள்ள கடை ஒன்றில் வேலை செய்து வந்த இவர் ஏழு நாள்களுக்கு முன்னர் காணாமற்போயிருந்தார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் உறவினர்களால் இதுவரை பொறுப்பேற்கப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் உச்சியில் சென்னை


ஹஸி

-டிலீப்-

சொந்த மண்ணில் வீழ்த்த முடியவில்லை சென்னையை. வீறு கொண்டு எழுந்த சென்னையின் வெற்றி வெறித்தனமாய் தொடர்கின்றது. 4 ஆவது தொடர் வெற்றி நேற்று. ராஜஸ்தானை வீழ்த்தியது எட்டு விக்கெட்டுக்களால்.

நாணயச் சுழற்சி வெற்றி ராஜஸ்தானுக்கு. நடந்தது சேப்பாக்கத்தில் 43 ஆவது ஐ.பி.எல் ஆட்டம். மோதின டோனியின் தலைமையில் சென்னை சூப்ப கிங்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் வோர்ன் தலைமையில் களத்துக்கு புகுந்தன.

வொட்ஸன் - ராவிட் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள். மோர்கல் ஆரம்பித்தார் பந்து வீச்சை. உதிரிகளால் முதலாவது ஓவரில் கிடைக்கப் பெற்றது 4 ஓட்டங்கள். நிறைவடைந்தது முதலாவது ஓவர் 9 ஓட்டங்களுடன். ஆட்டத்தின் ஐந்தாவது ஓவர் ஆரம்பித்தது அதிரடிகள். வீசினார் மோர்கல். வெளுத்தனர் மூன்று பவுண்டரிகள். 40 ஆவது பந்தில் ராஜஸ்தான் எட்டினார் அரைச்சதம். ரன்டீவ் வீசினார் எட்டாவது ஓவர். ராவிட் அடித்தார் மூன்று பவுண்டரிகள். சுழல் பந்து வீச்சை சிறப்பாக கவனித்தனர் வொட்ஸன் - ராவிட். பவுண்டரிகள் எல்லைக்கு அடிக்கடி சென்றன. அணியின் ஓட்ட வேகம் ஜெட் வேகத்தில் ஏற்றம். 11 ஆவது ஓவரில் பிரிக்கப்பட்டது இணைப்பு. அதிரடியாய் பெற்றனர் 86 ஓட்டங்கள். வீழ்ந்தார் வொட்ஸன் ஜகாத்தியின் சுழலில். 26 பந்துகளில் பெற்றுக் கொடுத்தார் 32 ஓட்டங்கள். பிரிவுகள் வழிவகுத்தது சரிவுகளுக்கு. மெனேரியா வந்தார் வெளியேறினார் 2 ஓட்டங்களுடன். சென்னையின் ஆதிக்கம் சுழலில் வெளிப்பாடு.

போத்தா நுழைந்தார் களத்துக்கு. பெற்றுக் கொடுத்தார் எட்டு ஓட்டங்கள். முடித்து அனுப்பி வைத்தார் ஜகாத்தி. ராவிட் கடந்தார் அரைச்சதம் 37 பந்துகளில். ரெயிலர் தாக்குப் பிடித்தார் ராவிட்டுடன். விடவில்லை சென்னை. ரன்டீவ்வின் சுழலில் ராவிட் விக்கெட் பறிப்பு. 51 பந்துகள் சந்திப்பு. 66 ஓட்டங்கள் பெற்றுக் கொடுப்பு.

ஆரம்ப ஆட்டம் பின்வரிசையில் இல்லை. இறுதியில் 148 ஓட்டங்கள் நிர்ணயிப்பு சென்னைக்கு. சென்னையால் பறிக்கப்பட்டது ஆறு விக்கெட்டுக்கள். ஜகாத்தி, மோர்கல் வீழ்த்தினர் இரண்டு விக்கெட்டுக்கள்.

ஹஸி - விஜய் சென்னை -ஆட்டத்தை ஆரம்பிக்க களத்துக்குள் புகுந்தனர். ஏமாற்றத்துடன் ஆட்டம் ஆரம்பம். வீழ்ந்தது விஜய் விக்கெட். 8 ஓட்டங்களில் சென்னை இழந்தது முதலாவது விக்கெட். 5 ஓட்டங்களுடன் விஜய் வெளியேற்றம்.

இரண்டாவது விக்கெட்டுக்கு இணைந்தனர் ஹஸி - ரெய்னா. எழுச்சி பெற்றது சென்னையின் ஆட்டம். 40 பந்துகளில் சென்னை கடந்தது அரைச்சதம். பவுண்டரிகள் ஒவருக்கு எல்லைக்கு விரைவு. வீசினார் டொசி 11 ஆவது ஓவர். பவுண்டரி, சிக்ஸர்கள் முழக்கம். ஏறியது சென்னையின் ஓட்ட வேகம். இரண்டாவது விக்கெட்டுக்காய் இணைப்பாட்டம் 38 பந்துகளில் எட்டினர் அரைச்சதம். ஹஸி கடந்தார் அரைச்சதம் 32 பந்துகளில். 66 பந்துகளில் சதம் கடந்தது இரண்டாவது விக்கெட் இணைப்பு. மறு முனையில் ரெய்னா 39 பந்துகளில் அடித்தார் அரைச்சதம்.

வெற்றியை எட்டும் தருணத்தில் வீழ்ந்தது ரெய்னாவின் விக்கெட். 51 பந்துகளில் 61 ஓட்டங்கள். இருந்தும் அதிரடியை அடுத்த பந்தில் காட்டினார் ஹஸி. வந்து சேர்ந்தது வெற்றி. எட்டு விக்கெட்டுக்களால் வீழ்ந்தது ராஜஸ்தான். அதிரடிகளால் முழங்கிய ஹஸி 55 பந்துகளில் 79 ஓட்டங்கள். ஆட்ட நாயகனும் இவரே.

# புனேயின் பயணம் முடிவுக்கு வந்தது

-அருண்மொழி-

ஐ.பி.எல் போட்டியின் 44 ஆவது ஆட்டம் மும்பையில் நேற்று இடம் பெற்றது. இதில் சச்சின் தலைமையிலான மும்பை அணியும் யுவராஜ் தலைமையிலான புனே அணியும் மோதிக் கொண்டன. அடுத்த சுற்று லீக் ஆட்டங்களுக்குள் நுழைய வேண்டுமாயின் புனே நேற்றைய ஆட்டத்தில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் உள் நுழைந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பை தேர்வு செய்தது.

மும்பை தனது ஆரம்பத் துடுப்பாட்டத்தை நேற்று மாற்றியமைத்தது. பிளிசாட் - சச்சின் டெண்டுல்கர் ஆகியோர் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். 18 ஓட்டங்களை.அணி எட்டியிருந்த போது தோமஸ்ஸின் பந்து வீச்சில் பிளிசாட் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். ராயுடு - சச்சின் இருவரும் இரண்டாவது விக்கெட்டுக்காக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். சச்சின் 24 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 24 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் யுவராஜின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். சச்சின் ஆட்டமிழந்து சொற்ப நேரத்திலேயே ராயுடுவும் ஆட்டமிழந்தார். ராயுடு ஆட்டமிழக்கும் போது மும்பை அணி 69 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரோகித் சர்மா - சுமன் இருவரும் 4 விக்கெட் இணைப்பாட்டத்துக்காக இணைந்தனர்.

சுமன் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். மறுமுனையில் ரோகித் சர்மா மிக நிதானமாக ஆடினார். 20 பந்துகளில் 12 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ராகுல் சர்மாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அதிரடியாய் ஆடிக் கொண்டிருந்த சுமனுடன் இணைந்தார் மற்றுமொரு அதிரடி ஆட்டக்காரரான பொலார்ட். 114 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சுமனின் விக்கெட்டை மும்பை இழந்தது. 16 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளாக 36 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ராகுல் சர்மாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். பொலாட் 21 பந்துகளில் 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரெயிலர் ஆட்டமிழந்தார். 2 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளும் அதனுள் அடக்கம். இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

ரெயிலர், யுவராஜ் சிங், ராகுல் சர்மா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். ராகுல் சர்மா 4 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களைக் கொடுத்தே 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட ரைடர் - மனிஷ் பான்டி ஆகியோர் வந்தனர். ஹர்பஜன் சிங் ஆட்டத்தின் முதலாவது பந்தை வீசினார். ரைடர் ஆட்டமிழந்து வெளியேறினார். மனிஷ் பான்டி சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்து வெளிப்படுத்தினார். மறுமுனையில் உள்நுழைந்த கிரேம் சிமித் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார். ஒரு முனையில் விக்கெட் சரிந்த வண்ணமே இருந்தது. இருப்பினும் மனிஷ் பான்டியின் ஆட்டம் தொடர்ந்தது. யுவராஜ் சிங் 20 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்து வெளியேறினார். 16 பந்து களில் 1 பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங் கலாகவே அவர் இந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொண்டார்.


ராகுல் சர்மா

உத்தப்பா - பான்டி இணைந்து ஐந்தாவது விக்கெட்டுக்காக சிறப்பான இணைப் பாட்டத்தை வழங்கினர். அதிரடியாக ஆடிய பான்டி 43 பந்துகளில் அரைச் சதம் பெற்றார். இறுதியில் 47 பந்துகளில் 59 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்துள்ளார். 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அதனுள் அடங்கின. பின் வரிசை வீரர்கள் மலிங்கவின் வேகத் தில் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்து வெளி யேறினர். இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 139 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. இதன் மூலம் 21 ஓட்டங்களால் மும்பை அணி வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக புனே வாரியர்ஸ் ஸின் ராகுல் சர்மா தெரிவா னார்.

# மீண்டும் வருவேன் - அஷிஷ் நெஹ்ரா

கைவிரல் காயத்தில் இருந்து விரைவில் மீண்டு வருவேன். மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான தொடருக்கு முன்பாக தயாராகி விடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது என்று வேகப்பந்து வீச்சாளர் அஷிஸ் நெஹ்ரா தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னணி வீரர் அஷிஸ் நெஹ்ரா (வயது - 32). சமீபத்தில் முடிந்த உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் கடைசி நேரத்தில் பங்கேற்க முடியாமல் போனது. இதுகுறித்து அஷிஸ் நெஹ்ரா கூறியது, கைவிரல் காயத்துக்காக ஆஸ்திரேலியா சென்று அறுவை சிகிச்சை செய்து கடந்த வாரம் தான் இந்தியா வந்தேன். தற்போது காயத்தில் இருந்து கொஞ்சம், கொஞ்சமாக மீண்டு வருகிறேன். இதற்காக பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் தேவையான பயிற்சியில் ஈடுபட்டு வருகிறேன்.

தவிர வலைப்பயிற்சியில் பந்துவீச்சை ஆரம்பித்து விட்டேன். இதில் எந்த சிக்கலும் இல்லை. ஐ.பி.எல் தொடரில் பங்கேற்க முடியாமல் போனது வருத்தம் தான். என்னை தேர்வு செய்த புனே அணிக்காக திறமை வெளிப் படுத்த முடியாமல் போனது ஏமாற்றமாக உள்ளது. ஆனால் காயம் எப்போது, யாருக்கு ஏற்படும் என்பதெல்லாம் முன்னதாக கணிக்க முடியாது. தவிர இந்திய அணி உலகக் கிண்ணம் வென்றதை உடை மாற்றும் அறையில் இருந்தபடி பார்த்துக்கொண்டிருந்தது மிகவும் சிரமமாக இருந்தது. ஆட்டத்தில் பங்கேற்க முடிய வில்லை என்றாலும் அணி சம்பியன் பட்டம் வென்றது மகிழ்ச்சி யாக இருந்தது.

தற்போது களத்தடுப்பு, துடுப்பாட்டம் செய்வதில் சிக்கல் தொடர்கின்றது. ஏனெனில் காயமடைந்த விரலில் இன்னும் லேசான வலி உள்ளது. இந்த நிலையில் எஞ்சிய ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்பது என்ற கேள்வியே தேவையில்லாதது. என்று அவர் தெரிவித்தார். (15)

## இன்றைய ஆட்டம்

- கொச்சி ருஸ்கேர்ஸ் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (மாலை 4 மணி)
- டெக்கான் சார்ஜஸ் எதிர் டெல்லி டெயாடெவில்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- சச்சின் – மும்பை (9 ஆட்டங்கள் 351 ஓட்டங்கள்)
- ஹஸி – சென்னை (7 ஆட்டங்கள் 327 ஓட்டங்கள்)
- சேவாக் – டெல்லி (9 ஆட்டங்கள் 303 ஓட்டங்கள்)


## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (9ஆட்டங்கள் 22 விக்கெட்டுக்கள்)
- இக்பால்அப்துல்லா– கொல்கத்தா (9 ஆட்டங்கள் 12 விக்கெட்டுக்கள்)
- அல்பின் மோர்கல் – சென்னை (8 ஆட்டங்கள் 12 விக்கெட்டுக்கள்)

## DLF Indian Premier League அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 09 | 07 | 02 | 0 | 0 | + 0.635 | 14 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 09 | 06 | 03 | 0 | 0 | + 0.588 | 12 |
| சென்னை சூப்ப கிங்ஸ் | 09 | 06 | 03 | 0 | 0 | + 0.292 | 12 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 10 | 05 | 04 | 0 | 1 | - 0.194 | 11 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 08 | 04 | 03 | 0 | 1 | - 0.052 | 09 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 09 | 04 | 05 | 0 | 0 | - 0.542 | 08 |
| டெக்கான் சார்ஜஸ் | 09 | 03 | 06 | 0 | 0 | - 0.070 | 06 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 09 | 03 | 06 | 0 | 0 | - 0.262 | 06 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 07 | 03 | 04 | 0 | 0 | - 0.398 | 06 |
| புனே வாரியர்ஸ் | 09 | 02 | 07 | 0 | 0 | - 0.199 | 04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ.பி.எல்லிலும் ஐ.சி.சியின் நடைமுறை தேவை

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் 42 ஆவது லீக் ஆட்டம் ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் கம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 20 ஓட்டங்களில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வென்றது.

கொல்கத்தா அணி 6 ஆவது வெற்றியை பெற்றது. வெற்றி குறித்து கொல் கத்தா அணியின் தலைவர் கம்பீர் கூறியதாவது:-

தொடர்ந்து வெற்றி பெறுவது முக்கியமானதாகும். அனைத்து வீரர்களின் ஒருங்கிணைப்பான ஆட்டத்தால் வெற்றியை பெற முடிந்தது. துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாடி 170 ஓட்டங்கள் எடுத்தனர். பந்துவீச்சாளர்களும் அபாரமாக பந்து வீசினார்கள். ஒவ்வொரு போட்டிக்கும் இடையே இடைவெளி உள்ளது. இதனால் அடுத்த ஆட்டத்தில் நல்ல கவனம் செலுத்த முடிகின்றது.

அணித்தலைவர் பதவியில் நான் எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்கின்றேன். இந்திய அணியாக இருந்தாலும் சரி டெல்லி அல்லது கொல்கத்தா அணியாக இருந்தாலும் சரி அணித்தலைவர் பதவி என்பது பொறுப்பானது. பல்வேறு பாடங்களை கற்றுக் கொள்ள முடிகின்றது. தொடர்ந்து வெற்றி பெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது.

டானியல் கிறிஸ்டியனுடன் நான் வாக்குவாதத்தில் ஈடுபட்டது ஆட்டத்தின் இயல்பான ஒன்று தான். எங்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை. நடுவரின் முடிவை மறு பரிசீலனை செய்யும் முறை (யூ.டி. ஆர்.எஸ்.) தேவை. சரியான எல்.பி. டபிள்யூவை நடுவரால் கணிக்க முடிவதில்லை. இதனால் தொழில் நுட்ப உதவி தேவை. யூ.டி.ஆர்.எஸ். முறையால் தவறு திருத்தப்படுகின்றது. இவ்வாறு அவர் கூறினார். (15)

# ரென்னிஸுக்கு முன் 'செக்ஸ்'; துடிப்புடன் விளையாட முடியுமாம்



அண்டி முர்ரே



பிரான் செஸ்காவும்

ரென்னிஸ் போட்டிக்கு முன்பாக 'செக்ஸ்' உறவு வைத்துக்கொள்வதில் தவறு இல்லை என்று பிரபல இத்தாலி ரென்னிஸ் வீராங்கனை பிரான்செஸ்காவும் ஸ்கொட்லாந்து வீரர் அண்டி முர்ரேவும் தெரிவித்துள்ளனர்.

இத்தாலி வீராங்கனை பிரான் செஸ்கா சியாவோன் நடப்பு பிரான்ஸ் திறந்த போட்டி சம்பியன் ஆவார். அவரிடம் போட்டிக்கு முன்னர் 'செக்ஸ்' உறவு இருக்கலாமா என்ற கேள்வி எழுப்பப்பட்டபோது அதனை அவர் ஆதரித்தார்.

போட்டிக்கு முந்தைய செக்ஸ் உடலின் 'ஹோர்மோன்' அளவை அதிகரிக்கின்றது. இதனால் விளையாடும் போது துடிப்புடன் செயற்பட்டு புள்ளிகளை குவிக்க முடிகின்றது. சமீப ஆண்டுகளாக நான் வளர்ந்துள்ளேன் என்று அவர் தெரிவித்தார்.

இதே கருத்தை ஸ்கொட்லாந்து வீரர் அண்டி முர்ரேவும் பிரதிபலித்தார். குத்துச் சண்டை வீரர்கள் போட்டிக்கு முன்னதாக 'செக்ஸ்' உறவை தவிர்த்து விடுகின்றனர். இதே முறையைக் கடைபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் ரென்னிஸ் வீரர்கள் அடிக்கடி போட்டிகளில் ஆட வேண்டி உள்ளது. போட்டிக்கு முன்பாக 'செக்ஸ்' உறவு வைத்துக் கொள்ளவில்லை என்று எந்த வீரரும் கூறமாட்டார்கள் என்று அண்டி முர்ரே தெரிவித்தார். (15)

# சகீர் விருதுக்கு பரிந்துரை



இந்திய வீரர் சகீர்கானுக்கு, அர்ஜுனா விருது வழங்க வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பரிந்துரை செய்துள்ளது. இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான். கடந்த சில ஆண்டுகளாக பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்டு வரும் இவர், சமீபத்திய உலகக் கிண்ண தொடரில் 21 விக்கெட்டுக்கள் கைப்பற்றி அசத்தினார்.


இவருக்கு விளையாட்டு பிரிவில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு வழங்கப்படும் அர்ஜுனா விருது வழங்க பி.சி.சி.ஐ மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. இதற்கு முன்னர் இந்த விருதை முன்னாள் வீரர்கள் சலீம் துரானி, மன்சூர் அலிகான் பட்டோடி, விஜய் மஞ்ச்ரேக்கர், தற்போதைய சச்சின், சேவாக், கம்பீர், ஹர்பஜன்சிங் போன்ற வீரர்கள் பெற்றுள்ளனர். (15)

# புகார் தெரிவிக்கவில்லை

மும்பை- ராஜஸ்தான் அணிகள் மோதிய ஆட்டம் ஜெய்ப்பூரில் நடந்தது. இதில் மும்பைஅணி 90 ஓட்டங்களில் சுருண்டு தோற்றது. இந்த ஆடுகளம் குறித்து மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவர் டெண்டுல்கர் கடுமையாக விமர்சித்து இருந்தார்.

இதற்கு ராஜஸ்தான் அணித்தலைவர் வோர்ன் பதிலடி கொடுத்திருந்தார். இந்த நிலையில் ஜெய்ப்பூர் ஆடுகளம் குறித்து மும்பை இந்தியன்ஸ் புகார் தெரிவித்திருப்பதாக ராஜஸ்தான் குற்றம் சாட்டியது. இதை மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் மறுத்துள் ளது. (15)

# ஓய்வைக் கட்டாயப்படுத்தினர்



கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவிக்க தன்னை மேற்கிந்தியத்தீவுகள் அணி தேர்வாளர்கள் கட்டாயப்படுத்தினார்கள் என்று மூத்த வீரர் சந்தர்போல் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அந்த நாட்டு கிரிக்கெட் வாரியத் தலைவர் ஏர்னஸ்ட் ஹில்லாரிக்கு அவர் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், உலகக் கிண்ண கிரிக்கெட் முடிந்த உடனேயே கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துவிடுங்கள் என்று அணியின் தேர்வாளர்கள் என்னை கட்டாயப்படுத்தினர். ஆனால் அவ்வாறு அறிவிக்க முடியாது என்றவுடன் அவர்கள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தனர்.

இப்போது பாகிஸ்தானுக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் என்னை அணியில் சேர்க்கவில்லை. கடந்த ஓராண்டாக அணிக்காக நான் எதையும் செய்யவில்லை இதுவே என்னைத் தேர்வு செய்யாததற்கு காரணம் என்று பயிற்சியாளர் தெரிவித்துள்ளார். ஆனால், உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணியில் பங்கேற்ற வீரர்களில் சராசரியாக அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் மூன்றாவது இடத்தில் உள்ளேன். அப்படியிருக்கும் போது என்னை ஏன் அணியில் சேர்த்துக் கொள்ளவில்லை என்றும் சந்தர்போல் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியில் இருந்து முன்னணி வீரர்கள் கிறிஸ் கெய்ல், சர்வான் ஆகியோரும் ஏற்கெனவே நீக்கப்பட்டுள்ளனர். இவர்களும் உலகக் கிண்ண போட்டியில் விளையாடினர். அணியில் சேர்க்காததன் மூலம் தேர்வாளர்கள் தன்னை அவமதித்து விட்டதாக கிறிஸ் கெய்ல் ஏற்கெனவே குற்றம் சாட்டியிருந்தார். (15)



பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் 2018ஆம் ஆண்டு இலங்கையில் அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளன. இதற்கான விலைகோரல் புத்தகத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் நேற்று அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

# நிரூபித்துக் காட்டவேண்டும்





இலங்கை வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டி வரும் திலகரட்ன அதை நிரூபிக்க வேண் டும். இல்லையென் றால் தொடர்ந்து குறைகூறுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இலங்கையின் சுழற்பந்து ஜாம்பவான் முரளிதரன் கூறியுள்ளார்.

கொச்சி அணிக்காக விளையாடி வரும் அவர் இது குறித்து மேலும் கூறியதாவது:

திலகரட்ன ஏன் இவ்வாறு குற்றம்சாட்டி வருகிறார் என்பது எனக்கு தெரியாது. அவர் கூறுவதுபோல் யாராவது சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தால் அது தொடர்பான ஆதாரங்களை அளிக்க வேண்டும். அப்போதுதான் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க மு[illegible]

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் ஐ.சி.சி ஊ[illegible]தடுப்புப் பிரிவிடம் நான் தெரிவித்திருப்பேன். அதுதான் விதிமுறையை வகுத்துள்ளது. அனைத்து வீரர்களும் அதைத்தான் கடைப்பிடித்து வருகின்றனர் என்றார்.

திலகரட்னவின் இந்தக் குற்றச்சாட்டால் இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் புகழுக்கு பங்கம் ஏற்பட்டுள்ளதா என்று கேட்ட போது, அதை மறுத்த முரளிதரன், திலகரட்ன கூறி வரும் குற்றச் சாட்டுக்கு அவர்தான் பதிலளிக்க வேண்டும். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. குற்றச்சாட்டு இன்னும் நிரூபிக்கப்படவில்லை என்றார்.

திலகரட்னவின் இந்தக் குற்றச்சாட்டு இலங்[illegible]கெட் வட் டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது குறி[illegible] கது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
05 மே 2011 வியாழக்கிழமை

# ஆசிரியர் இடமாற்றத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தக் கோரிக்கை

## வடமாகாண ஆளுநருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,மே5

வன்னியிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் தங்களுக்குரிய தங்குமிட வசதிகளை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

அத்துடன் தமது பிள்ளைகளை யாழ்ப்பாணப் பாடசாலைகளிலும் இணைத்துள்ளனர்.

இந்த நிலைமையில் அனைத்து இடமாற்றங்களும் இரத்துச் செய்யப்பட்டமை ஆசிரியர்களைப் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

எனவே, ஆசிரியர் இடமாற்றத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக்கிளை, வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இரத்துச் செய்யப்பட்டுள்ள வன்னிப் பகுதியிலிருந்து யாழ்.மாவட்டத்துக்கான ஆசிரியர் இடமாற்றத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு வேண்டி ஆசிரியர் சங்கம் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறிக்கு நேற்று மகஜர் ஒன்றை அனுப்பி வைத்தது.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு:

ஆசிரியர் இடமாற்றங்கள் அனைத்தும் தங்களால் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்பதைப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம்.

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்களைத் தங்களின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

* தங்களுக்கும் ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் 10.05.2010 இல் இடம்பெற்ற சந்திப்பின் போது ஆசிரியர் இடமாற்றங்கள் எதுவும் இடமாற்றச் சபைத் தீர்மானங்களுக்குப் புறம்பாக மேற்கொள்வதில்லை என சகல கல்வி அதிகாரிகளினாலும் எமக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

* இந்த உறுதிமொழி முற்றுமுழுதாகப் பின்பற்றப்படாவிட்டாலும் வன்னிப் பிரதேச ஆசிரியர்கள், மாணவர்கள் நலன்கருதி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு எமது ஒத்துழைப்பை நல்கி வந்தோம்.

* 2010 இல் இடம்பெற்ற ஆசிரியர்கள் இடமாற்றம் தொடர்பில் நிகழ்ந்த சில ஒழுங்கீனங்கள் பற்றிய எமது நிலைப்பாட்டை மாகாணச் செயலாளருக்குத் தெரியப்படுத்தியிருந்தோம்.

* 2011 ஆம் ஆண்டுக்கான இடமாற்றப் பட்டியல் (யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பாடசாலைகளுக்கானது) தொழிற்சங்கத்தின் சம்மதத்துடன் தயாரிக்கப்படாவிடினும் அது வெளியிடப்பட்ட சூழ்நிலையின் தன்மையும் வன்னி மாவட்ட மாணவர்களின் கல்வி, அங்கு நீண்டகாலம் கடமையாற்றிய ஆசிரியர்களின் நலன்கருதியும் மாகாணக் கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து நடைமுறைச் சாத்தியமான சில முடிவுகளை எடுத்திருந்தோம்.

* வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களில் பலர் தங்களுக்குரிய இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொண்டது மட்டுமல்லாது, தமது பிள்ளைகளை யாழ்ப்பாணப் பாடசாலைகளில் இணைத்து நிலைய மாற்ற ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

* இந்தச் சமயத்தில் அனைத்து இடமாற்றங்களும் இரத்துச் செய்யப்பட்டமை ஆசிரியர்களைப் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

* இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு முன்னர் மேற்கொண்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.- என்றுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-14-ரி)

## நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

கொழும்பு,மே5

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன் தலைமையில் நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ம-7)

## எரிகாயங்களுடன் சிகிச்சை பெற்ற இளம் பெண் சாவு

யாழ்ப்பாணம்,மே 5

எரிகாயங்களுக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் பெண் ஒருவர் 42 நாள்களின் பின்னர் நேற்று முன்தினம் மரணமானார்.

வேலணையைச் சேர்ந்த ரஞ்சித் கவிதா (வயது-22) என்ற இரண்டுபிள்ளைகளின் தாயே மரணமானவர் ஆவார். (ஒ-15-4)

## நுளம்புகள் பெருகும் இடங்களில் வைத்தே சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அபராதம்

கொழும்பு,மே5

நுளம்புகள் பெருகுவதற்குக் காரணமாகும் இடங்கள் கண்டறியப்படின் அதே இடத்தில் வைத்து சம்பந்தப்பட்ட நபருக்கு அபராதம் விதிக்கும் நடைமுறையொன்றைச் சுகாதார அமைச்சு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இது தொடர்பாக நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கும் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

நுளம்புகள் பெருகும் இடங்களை எந்தவொரு அனுமதியும் பெறாது பரிசீலனை செய்வதற்கும் அதே இடத்தில் வைத்துக் குற்றவாளிகளுக்கு எதிராக அதிகபட்சமாக 2 ஆயிரம் ரூபா வரையில் அபராதம் விதிப்பதற்கும் புதிய திருத்தச் சட்டத்தின் மூலம் பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளன.

டெங்கு நோயைத் தடுத்து நிறுத்துவதற்கு நுளம்புகள் பெருகும் இடங்களை அழித்துவிடுவதுதான் ஒரே வழி என்று சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது. (எ-22)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஓம் சாயிராம்



தோற்றம்
06 - 03 - 1923

மறைவு
05 - 05 - 2010

அமரர்
### ஆறுமுகம் இரத்தினவடிவேல் (ஐயா)

பக்திப் பேரொளியாய் பகவானின் வழி நின்று
பாரெங்கும் பணிகண்ட பாசமிகு ஐயாவே
பண்பாளன் நீவிர் பயன் அறியா தொண்டாளன் நீவிர்
சீராளன் நீவிர் சீர் கொண்ட சிறப்பாளன் நீவிர்
பேராளன் நீவிர் பெயர் நிலைத்த குணவாளன் நீவிர்
பற்றாளன் நீவிர் இறை கண்ட நெறியாளன் நீவிர்
பாரினிலே உறைந்து பாரதனைச் சிறப்பித்தீர்- இன்று
சாயிநாதன் திருவடியில் சங்கமித்து சாந்தியுற்றீர்.
ஐயா என ஓங்கி எம் ஆழ் மனதில் உறைந்துற்றீர்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய சாயிசனை வேண்டி நிற்கும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## மேசன், மரவேலை பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, மே,5

தென்மராட்சி பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான மேசன் மற்றும் மரவேலை பயிற்சி வகுப்புகள் விரைவில் பிரதேச செயலகத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்புவோர் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)


### தவறிவிட்டது

மாவிட்டபுரம், 10ஆம் கட்டையைச் சேர்ந்த வயிரவப்பிள்ளை தேவகி என்பவருடைய இரண்டு உறுதிகள் நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் கோயிலுக்கும் இராமால் வீதி, பவளம் ஸ்ரோஸிற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும்.

பவானி ஸ்ரோர்ஸ்,
இராச வீதி, 4ஆம் கட்டை.
0214902565.

கண்ணன் ஸ்ரோர்ஸ்,
அச்செழு, நீர்வேலி.
0775103482

### தவறிவிட்டது

ஸ்ரான்லி றோட்டுக்கும் கல்லுண்டாய் வெளிக்கும் இடையில் (12ஸ்ரீ-0857) கார் புத்தகம், மோட்டார் சைக்கிள் புத்தகம் (NP-GY 9975) ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு-0779370255

### தவறிவிட்டது

கடந்த 31.03.2011 வியாழக்கிழமை கொடிகாமத்துக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் கைலேஞ்சியினால் சுற்றப்பட்ட நிலையில் தாலிக் கொடி உட்பட தங்க நகைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு-0750482155

### எழுதுவினைஞர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு ஆண், அல்லது பெண் எழுதுவினைஞர் (Clerk)தேவை. A/L Accounts படித்த வரும், ஆங்கிலம் பேசக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். உடனடியாகத் தொடர்புகொள்ளவும். -0773427843

### தவறிவிட்டது

பெரிய தம்பிரான் கோயிலடி அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி இரத்தினதாஸ் சசிகலா தேவியின் தேசிய அடையாள அட்டையும் (இல 637844687 V) ஒரு தொகைப் பணமும் கொண்ட கைப்பை யாழ். சிறைச்சாலைக்கும் நீதிமன்றத்திற்கும் இடையில் 02.04.2011 அன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P: 0770869209

(3836)(46,20,25)

### அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1290 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மீனம் 12 27 47 51 03-05-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 4,899,400/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 235,909 | 20/- | 4,718,180/- |
| 2 இலக்கங்கள் | 21,754 | 40/- | 870,160/- |
| 1 இல. + லக்கினம் | 21,329 | 60/- | 1,279,740/- |
| 2 இல. + லக்கினம் | 1,929 | 200/- | 385,800/- |
| 3 இலக்கங்கள் | 584 | 1000/- | 584,000/- |
| 3 இல. + லக்கினம் | 58 | 10,000/- | 580,000/- |
| 4 இலக்கங்கள் | 02 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 01 | 4,899,400/- | 4,899,400/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 13,717,280/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 637 | | 517,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 282,203 | | 14,234,780/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

04 18 24 55 ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 635 | 500/- | 317,500/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 300,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 637 | | 517,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 400,000/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சமரசத்தின் மணம் மிகத் தொலைவில்

உலகளாவிய ரீதியில் அறியப்பட்ட அல் - குவைதா இயக்கத்தின் தலைவரும் இயக்குநருமான ஒஸாமா பின்லேடன் கொலை செய்யப்பட்டு விட்டார் என்று அமெரிக்காவால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. அது சர்வதேச மட்டத்தில் பெரும் பரபரப்பை உண்டாக்கிய செய்தியாக மாறியுள்ளது.

பின்லேடன், அமெரிக்காவையும் இஸ்லாத்தின் எதிரிகளையும் நிர்மூலம்செய்வது என்ற இலக்குடன் மிக நீண்டகாலமாகச் செயற்பட்டு வந்தவர். மேற்கு நாடுகளை மிகக் குறிப்பாக அமெரிக்காவை பெரும் எதிரியாகப் பார்த்துப் போராடியவர். தாம் இஸ்லாம் மீது கொண்ட பற்றுறுதியுடனேயே இந்தப் புனிதப் போரில் ஈடுபட்டிருப்பதாக ஊடகங்களுக்கு வழங்கிய செவ்விகளில் இடைவிடாது தெரிவித்து வந்தவர்.

முன்னாள் அமெரிக்க விசுவாசியாக இருந்த பின்லேடன், ஆப்கானிஸ்தானில் இருந்து ரஷ்ய ஆதிக்கத்தை விரட்டிய தலிபான்களின் நண்பராக இருந்த வேளையிலேயே, அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலின், 2011 செப்ரெம்பர் 11, சூத்திரதாரியாக விளங்கினார். மூவாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் அந்தத் தாக்குதலில் கொலையுண்டனர்.

அதன் பின்னர் அமெரிக்காவின் பரம எதிரியானார் பின்லேடன். ராஜீக வட்டகையில், அதன் சங்கிலிப் பின்னலில் பாகிஸ்தானால் இவர் மறைமுகமாக பாதுகாக்கப்பட்டுவந்தார் என்ற கருத்து நிலவியது. அமெரிக்கா இதனை மணந்து பிடித்துச் செயற்பட்டு, தனது இலக்கை - பத்து வருடத் தேடுதலை - இப்போது முடித்திருப்பதாகக் கொள்ளலாம்.

2008 ஆம் ஆண்டின் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போது, பின்லேடனையும் அல்-குவைதா இயக்கத்தையும் தாம் இல்லாமற் செய்துவிடுவார் என்று ஒபாமா தமது தேர்தல் பரப்புரையில் முன்னுரிமை கொடுத்துப் பேசிவந்தார். அவரது வாக்குறுதி என்றும் அதனைக் கொள்ளலாம்.

பாகிஸ்தான் அரசு அமெரிக்காவுக்கு நெருங்கிய ஒன்றாக இருந்த போதிலும் அதற்குத் தெரியாமலே, அறிவிக்காமலே, அந்த நாட்டின் நிலைகொண்டிருந்த ஒஸாமா பின்லேடனைக் கொன்றிருக்கிறது அமெரிக்கா.

பாகிஸ்தானில் உள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகள் மூலம் தமது இரகசியத் திட்டம் பரகசியமாகிவிடலாம் என்று கருதி அமெரிக்கா அதனைத் தவிர்த்திருக்கும் என்று கொள்ளலாம். எனினும் அமெரிக்கா தனது நோக்கையும் இலக்கையும் அடைவதற்கு நண்பர்களையும் பொருட்படுத்தாது, தனது சுயநலத்தை நாடும், என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்று நோக்கர்கள் கருதுகின்றார்கள்.

எப்படியோ-

அல்-குவைதா தீவிரவாத அமைப்பை நிறுவி, மேற்கத்தைய நாடுகளுக்கு எதிராக ஜிகாத் புனிதப் போரை அறிவித்து, அந்த இயக்கத்தை வளர்த்த பின்லேடனுக்கு, அவரின் வாரிசுகளுக்கு இல்லாமிய அடிப்படைவாதிகளின், இஸ்லாமிய நாடுகளின், எண்ணெய் வள நாடுகளின் ஆதரவு தொடரவும் மேலும் அதிகரிக்கவும் பெரும் வாய்ப்புண்டு.

" பின்லேடன் கொல்லப்பட்டமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சாதனை " என்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். பயங்கரவாதத்துக்கு எதிரான போர் தொடரும். பின்லேடன் சுட்டுக்கொல்லப்பட்டதன் மூலம் அமெரிக்கா உலக நாடுகளுக்கு இந்தச்செய்தியை அனுப்பி உள்ளது - என்றும் அவர் எச்சரிக்கைத் தொனியில் கூறியுள்ளார்.

இதேவேளை-

ஒஸாமா பின்லேடன் கொல்லப்பட்ட நடவடிக்கையில் பாகிஸ்தானின் இறைமையை அமெரிக்கா மீறிவிட்டது. பாகிஸ்தான் எல்லையைக் கடந்து, அபோதாபாத்வரை அமெரிக்கச் சிப்பாய்கள் சென்று இராணுவ நடவடிக்கை மேற்கொண்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது பாகிஸ்தானின் இறையாண்மையை மீறிய செயல். அந்நியப் படைகள் பாகிஸ்தான் எல்லையைக் கடப்பதை எமது நாட்டு மக்கள் விரும்பமாட்டார்கள் - என்று பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் கண்டித்திருக்கிறார்.

பின்லேடன் அபோதாபாத்துக்குச் சென்றாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் உள்ளூர் மக்கள் அவருடன் தொடர்பு வைத்திருக்கக் கூடும் - என்று அவர் கூறியிருப்பது அல்-குவைதாவின் செல்வாக்கு இஸ்லாமிய நாடுகளில் பெருகி இருப்பதை உணர்த்துகிறது.

மேற்குலக நாடுகளுக்கும் அல்-குவைதாவுக்கும் இடையிலான பனிப்போர் இலகுவில் முடிவுக்கு வருவது சாத்தியமில்லை என்ற குறியீட்டை இது எடுத்து விளம்புகிறது.

அமெரிக்காவின் நடவடிக்கைக்கு பாகிஸ்தானில் பதிலடியான சம்பவங்கள் நிகழக்கூடும் என்ற எதிர்பார்ப்பில், அங்குள்ள பிரதான நகரங்களான இஸ்லாமாபாத், பெஷ்வார், லாகூர், கராச்சி ஆகியவற்றில் உள்ள அமெரிக்க உப தூதரகங்கள் மூடப்பட்டுவிட்டன.

மத நம்பிக்கை உடையவர்களுக்கும் மத நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் இடையிலான போரையே தாம் நடத்தி வருவதாக பின்லேடன் ஒருமுறை சுட்டிக்காட்டியதையும்-

தனது நாட்டின் பக்கம் நில்லாதவர்கள், பயங்கரவாதிகளின் பக்கமே நிற்பவர்களாகக் கருதப்படுவார்கள் என்று அர்த்தப்படும் விதத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கருத்துக் கூறியிருப்பதையும்-

ஒரு சேரப் பார்க்கும் போது, பகுத்தாயும் போது-

பிராந்தியவாத, மதவாத அடிப்படைகளின் ஊற்றுக் கண்களை அடைத்து,பூமிப் பந்தின் நான்கு திசைகளிலும் சமரசம் உருவாக வழிகோல இயலும் என்பது மிகத் தொலைவிலும் தென்படவில்லை. இவ்விவகாரத்தில் யதார்த்தமும் அதுவே.

### மணவாளன்பட்டமுறிப்பு கிராமம் உட்பட

## முல்லையில் 10 ஆம் திகதி மீள்குடியமர்வு ஒட்டுசுட்டான் செயலகம் வருமாறு அழைப்பு

முல்லைத்தீவு, மே 5

முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மணவாளன்பட்டமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களில் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியுள்ளவர்கள் மீளக்குடியமர ஏற்பாடாகியுள்ளது.

அதேசமயம் ஏற்கனவே மீளக் குடியமர்வு இடம்பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமசேவையாளர் பிரிவுகளில் இதுவரை காலமும் செல்லாத குடும்பங்களும் அங்கு சென்று குடியேறலாம்.

இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் மீளக்குடியமரக் கூடிய ஆயத்தங்களுடன் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப குடும்பங்கள் இது வரை காலமும் தங்கியிருந்த கிராம சேவையாளர் பிரிவின் கிராம அலுவலர்களிடம் விடுப்புக் கடிதம் சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு முல்லை மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் அறிவித்துள்ளார். (ஒ-எ)

## இலங்கை நிர்வாக சேவைக்கு தமிழ்மொழி மூல விசேட பரீட்சை

### அமைச்சர் ஜோன் செனவிரத்ன உறுதி

கொழும்பு, மே 5

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இலங்கை நிர்வாக சேவை தரத்துக்கு தமிழ் மொழி மூல விசேட பரீட்சை நடத்தப்படும் என்று உறுதியளித்துள்ளார் பொது நிர்வாக உள்ளூராட்சி அதிகார சபைகள் அமைச்சர்.

அமைச்சுக்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று நடந்தது. அதில் கலந்துகொண்ட பிரசைகள் முன்னணி செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான ஸ்ரீரங்கா கேட்ட ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் ஜோன் செனவிரத்ன இந்த உறுதி மொழியை வழங்கினார்.

கடந்த வருடம் இடம்பெற்ற இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் தெரிவுப் பரீட்சையில் தமிழ் பரீட்சார்த்திகள் எவரும் சித்தியடையவில்லை. இதனால் நிர்வாக சேவைக்குத் தமிழ் அதிகாரிகள் நியமிக்கப் படவில்லை என்று கூறப்பட்டது.

"இவ்வாறான சந்தர்ப்பங்களில் தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகளுக்கு விசேடமாகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகளுக்கு விசேட பரீட்சைகள் நடத்தி நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று ஸ்ரீரங்கா அமைச்சரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் ஜோன் செனவிரத்ன தமிழ் மொழிமூல பரீட்சார்த்திகளுக்கான வினாத்தாள்கள் விசேடமாக தயாரிக்கப்பட்டு மீண்டும் பரீட்சை நடத்தப்படும் என உறுதியளித்துள்ளார். (உ-2)

## ரணில் நேற்று பூட்டான் விஜயம்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று மாலை பூட்டான் சென்றார் என அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூட்டான் அரசின் விசேட அழைப்பை ஏற்று அங்கு விஜயம் செய்துள்ள ரணில் விக்கிரமசிங்க அந்த நாட்டுப் பிரதமர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பும்வரை கட்சியின் தலைவராக கரு ஜயசூரிய செயற்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## பிரதேச செயலகங்களை கண்காணிக்க மூன்று பரிசீலனைக் குழுக்கள்

கொழும்பு,மே 5

பிரதேசசெயலகங்கள்மூலம் மக்களுக்கு முறையான சேவைகள் வழங்கப்படுகின்றனவா என்பதைக் கண்டறிவது தொடர்பாக மூன்று பரிசீலனைக் குழுக்களை நாடுமுழுவதும் செயற்பட வைப்பதற்கு அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அமைச்சின் அதிகாரிகள் ஐவர் உள்ளடங்கும் விதத்தில் அமையும் இக்குழுக்கள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் இந்த மாதத்திலிருந்து திடீர் சோதனைகளை மேற்கொள்ளவுள்ளன.

சில பிரதேச செயலகங்களில் மக்களின் தேவைகள் முறையான விதத்தில் நிறைவேற்றப்படுவதில்லை என்று கிடைத்துள்ள முறைப்பாடுகளை அடுத்தே அரச நிர்வாகம் மற்றும் உள்நாட் டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டீ.ஜே. செனவிரத்ன இக்குழுக்களை நியமிக்குமாறு பணித்துள்ளார்.

கிராமப்புறங்களில் அமைந்துள்ள சில பிரதேச செயலகங்கள் வாரத்தின் வெள்ளிக்கிழமை பிற்பொழுதில் கடைமைகளை மேற்கொள்வதில்லை என்று கிடைத்துள்ள முறைப்பாடுகளும் இவற்றில் அடங்குவதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மக்களின் தேவைகளை நிறைவேற்றாத பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (எ-22)

## யாமிருக்கப் பயமேன்?

" நான் உங்களிடம் கேட்பதெல்லாம் என்ன? முற்றிலும் துறவு, அல்லது சிறிதும் பிழையில்லாத தியானம் - இவை இரண்டுமே அல்ல. உங்களிடம் நான் கேட்பதெல்லாம் அன்பும், பக்தியும் தான். உங்களைச் சுற்றியுள்ள எல்லா ஜீவன்களிலும் நான் இருக்கின்றேன் என்பதை உணர்ந்து என்னிடம் அன்பும் பக்தியும் செலுத்துங்கள். நான் உங்களிடம் எதுவும் பெரிதாகக் கேட்கவில்லை. உங்கள் மனங்களில் துக்கம் பொங்கும் போதும் பொறாமை அல்லது கோபம் பொங்கும் போதும் நீங்கள் என்னை நினையுங்கள் என்று சொல்கிறேன். அந்தச் சமயத்திலாவது உங்களது ஆழமான மனத்தை என் மீது செலுத்துங்கள். நீங்கள் எவ்வளவு கொடூரமானவர்களாகவும் இருந்தாலும் சரி, பல விதத்தில் நீங்கள் வாழ்க்கையில் ஏமாந்தவர்களாகவும் இருந்தாலும் சரி, நான் உங்களை எப்படி நடத்தவேண்டும் என்று எனக்குத் தெரியும். நான் உங்களைத் தவிக்கவிட மாட்டேன். நீங்கள் எங்கே சென்றாலும் நான் அங்கே இருப்பேன். நான் உங்களுக்காக உதவுவேன். நான் இருக்க நீங்கள் பயப்பட வேண்டியதில்லை!"

*(பாபா)*



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 8 இல் குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்தியா

## துலாம்



உங்கள் ராசிக்கு புகழ், தைரிய, விவகார, பணி ஸ்தான அதிபதியாகிய குருபகவான் 7 ஆம் இடமான மேடத்திற்கு பெயர்ச்சியாகி உள்ளார். இந்த அமர்வு வளம் பல பெற உதவியாக இருக்கும். மேலும், குரு தனது 5, 7, 9 பார்வைகளால் முறையே ஆதாயஸ்தானம், ராசி, புகழ் ஸ்தானத்தைப் பார்க்கிறார். குருவின் நேரடிப் பார்வை ராசியில் பதிவதால் மனதில் புத்துணர்வும், அன்பு நிறைந்த சிந்தனைகளும் அதிகரிக்கும். எவரிடத்திலும் அன்புடன் பேசி நட்புக் கொள்வீர்கள். தைரியமாகச் செயல்புரிந்து புகழ் பெறும் வாய்ப்புண்டு. சகோதரர் வகையில் தடைப்பட்ட சுபநிகழ்வு சிறப்பான முறையில் நிறைவேறும். வீடு, வாகன வகையில் வளர்ச்சி மாற்றம் செய்து மகிழ்வீர்கள். தாயின் தேவைகளை நிறைவேற்றி அவரது ஆசியைப் பெறுவீர்கள். புத்திரர்கள் நல்லவிதமாக நடந்து படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் பெறுவர். பூர்வீக சொத்தில் பெறுகிற வருமானம் உயர்ந்து சேமிப்பை உருவாக்கும். கருத்து மாற்றங்களால் விலகிப்போன உறவினர்கள், நண்பர்கள் விரும்பி வருவர்.

உடல்நிலை நன்றாக இருக்கும். வம்பு, விவகாரம் விலகும். அதனால் மனநிம்மதியும் சந்தோஷமும் ஏற்படும். கடன்களை விரைவில் அடைத்து விடுவீர்கள். புதிய செயல் திட்டங்களை உருவாக்கி உரிய பாதுகாப்புடன் நடைமுறைப்படுத்துவதால் வளர்ச்சியும் எதிர்பார்த்த பணவரவும் கிடைக்கும். கணவன், மனைவி பாசத்துடன் நடந்துகொள்வர். நண்பர்கள் உதவுவதும் உதவி பெறுவதுமான சிறப்பான நிலைமை ஏற்படும். திட்டமிட்ட மற்றும் திடீரென ஏற்பாடு செய்யப்படும் திருமணம் உள்ளிட்ட சுபநிகழ்ச்சிகள் கூட நடந்தேறும். தந்தைவழி உறவினர்கள் தேவையான உதவி வழங்குவர். மூத்த சகோதர, சகோதரிகளின் ஆலோசனை உங்கள் வாழ்வு சிறக்க நல்வழி காட்டும். பயணங்களால் நன்மை உண்டு.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் பணியில் கூடிய கவனம் செலுத்தி முன்னிலை பெறுவர். பதவி உயர்வு, விரும்பிய சலுகை எளிதாக கிடைக்கும். சக பணியாளர்களிடம் மதிப்பு ஏற்படும். குடும்பப் பெண்கள்,கணவரின் சொல்லை வேதவாக்காக மதித்து நடப்பர். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். நிறைந்த பணவசதி பெற்று ஆடை, ஆபரணம் வாங்குவர்.

சுயதொழில் புரியும் பெண்களுக்கு உற்பத்தி அதிகரித்து விற்பனை சிறந்து தாராளமான பணவரவு கிடைக்கும்.

**மாணவர்கள்:** பொறியியல், மருத்துவம், சட்டம், விவசாயம், வணிகவியல், கணினி, ஆசிரியர், இதழியல், ஆகிய துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் ஞாபகத்திறன் அதிகரித்து சிறப்பாகப் படிப்பர். ஏனைய துறை மாணவர்கள் இவர்களையும் விட நன்றாகப் படிப்பர். படிப்புக்கான பணவசதி நிறைவாகக் கிடைக்கும். பெற்றோர் தரும் பணத்தை மீதப்படுத்திச் சேமிப்பீர்கள். சக மாணவர்கள் அன்பு கொள்வர். பாராட்டு, விருதுபெறுவதற்கு உகந்த காலம். படித்து முடித்தவர்களுக்கு தரமான வேலை கிடைக்கும்.

**விவசாயிகள்:** பயிர் வளர்க்கத் தேவையான வசதிகள் தாராளமாகக் கிடைக்கும். விளைச்சல் உயர்ந்து மன நிறைவுபெறுவீர்கள். புதிய நிலம் வாங்க யோகம் இருக்கிறது.

## விருச்சிகம்



உங்கள் ராசிக்கு தன, குடும்ப, பூர்வீக புண்ணிய, புத்திர ஸ்தான அதிபதியாகிய குருபகவான் 6ஆம் இடமான மேடத்திற்கு பெயர்ச்சியாகி உள்ளார். இந்த அமர்வு சில எதிர்மறையான பலன்களைத் தரும். இருப்பினும் குருபகவானின் 5, 7, 9 ஆகிய பார்வை பெறுகிற ஸ்தானங்களான தொழில், வெளியூர் வேலைவாய்ப்பு, குடும்பவளர்ச்சி ஆகிய ஸ்தானங்களின் வழியாக நற்பலன் கிடைக்கும். எந்த செயலையும் நிதானமாகச் செய்வது அவசியம். இனிய பேச்சால் முக்கிய செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள். தாராளமான பணவரவு கிடைக்கும்.

சகோதரர்கள் உங்கள் எண்ணங்களுக்கு உரிய மதிப்புத் தருவதால் அவர்களுடான உறவு பலப்படும். வீடு, வாகன வகையில் இப்போது இருக்கிற நிலை நீடிக்கும். அபிவிருத்திப் பணிகளை இன்னும் ஓராண்டு செய்ய வேண்டாம். இதனால் குளறுபடியும் தேவையற்ற செலவும் ஏற்படும். இதுவரை உங்களுடன் ஒத்துழைத்த புத்திரர்களுடன் இனி கருத்து வேறுபாடு ஏற்படலாம். உங்கள் நலனை விரும்புபவர்களைக் கொண்டு அவர்களுக்கு ஆலோசனை சொல்லுங்கள். பூர்வீக சொத்தில் அளவான வருமானம் உண்டு. சொத்து தொடர்பான ஆவணங்களை ஏனையோர் பொறுப்பில் விடக்கூடாது.

உடல்நலம் பேணுவதில் கூடுதல் கவனம் வேண்டும். சிறு உபாதைக்கும் சிகிச்சை பெறுவது சிக்கலைத் தவிர்க்கும். வழக்கு விவகாரங்களில் தீர்வுபெறுவதில் தாமதம் ஏற்படும். சமாதானமாகப் போக வேண்டிய நிலை உருவாகும். கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு உண்டாகும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையே குடும்ப ஒற்றுமையை வளர்க்கும். நண்பர்களிடம் பேசுவதிலும், கொடுக்கல், வாங்கலிலும் நிதானம் பின்பற்றுவது நல்லது. பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

சுபநிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடக்கும். ஆனால், அதிக செலவாகும். சேமிப்புக் குறையவும், கடன் வாங்கவும் வாய்ப்புண்டு.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் சுறுசுறுப்பாகச் செயற்படுவதால் மட்டுமே பணி இலக்கை திறம்பட நிறைவேற்ற இயலும். சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும். குடும்பப் பெண்கள் கணவருடன் கருத்து வேறுபாடு கொள்ளலாம். குடும்பச் செலவுக்கான பணம் தட்டுப்பாடின்றி இருக்கும். சுயதொழில் புரியும் பெண்கள் போட்டியைச் சமாளித்து உற்பத்தி, விற்பனையைத் தக்கவைத்துக் கொள்வர். உபரி வருமானத்தால் குடும்பத் தேவைகளை பெருமளவில் நிறைவேற்றுவர்.

**மாணவர்கள்:** பொறியியல், மருத்துவம், விவசாயம், சட்டம், வணிகவியல், ஆசிரியர் பயிற்சி, இதழியல், கணினி, ஆகிய துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் அக்கறையுடன் படித்தால் மட்டுமே தேர்ச்சி கிடைக்கும். ஏனைய துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் இவர்களை விட நன்றாகப் படிப்பர். படிப்புக்கான பணவசதி சீராகக் கிடைக்கும். படித்து முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் ஓரளவு அனுகூலம் உண்டு.

**விவசாயிகள்:** பயிர் வளர்க்க முயற்சியுடன் செயற்படுவது அவசியம். சுமாரான விளைச்சல் கிடைக்கும். இருப்பினும், விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும். கால்நடைவளர்ப்பில் ஓரளவு பணவரவு உண்டு. நிலப்பிரச்சினைகளை நீதிமன்றத்துக்கு இழுக்காமல் பேசித் தீர்ப்பது நல்லது.


# கேள்வி அறிவித்தல்

கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம்

1.கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட கட்டட நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்ய வலயக் கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகிறது.
2.ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகம் உள்ளவராகவும் பதிவுப் புத்தகம் 2011 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
3.கேள்விப் பத்திரங்கள் 05.05.2011 ஆம் திகதியிலிருந்து 13.05.2011 ஆம் திகதி பிற்பகல் 2 மணி வரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தால் 16.05.2011 ஆம் திகதி முற்பகல் 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் வலயக் கல்வி அலுவலகத்தில் முற்பகல் 10.30 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.
4.மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் ஒப்பந்தகாரர் இருக்கலாகாது.
5.கேள்விப் பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்க முடியாத வைப்புப் பணங்களை யாழ்ப்பாண கல்வி வலய நிதிக்கிளையில் செலுத்தி கேள்விப் பத்திர படிவங்களைப் பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும். மேலதிக தகவல் தேவைப்படின் பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும்.

| பாடசாலையின் பெயரும் வேலையின் விவரமும் | மீளளிக்க முடியாத வைப்புப் பணம் | மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இல | மொத்த மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| தேசிய கல்வியியற் கல்லூரி விடுதிகளுக்கான திருத்த வேலை | 1000.00 | 14,000.00 | M8\C9 | 1,700,000.00 |

6.கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கை பத்திரங்களின் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றையதனை பிரதியாகவும் கொள்ள வேண்டும்.
7.கேள்வியாளர் பூர்த்தி செய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறு பிரதியை வேறு கடித உறையிலும் இட்டு இரண்டு கடித உறைகளையும் வேறு ஒரு பெரிய கடித உறையிலிட்டு மேல் மூலையில் வேலையின் விவரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு தலைவர், கேள்விச் சபை, வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம் என விலாசமிட்டு வலயக் கல்வி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 16.05.2011 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன் இடல் வேண்டும்.
8.குறித்த நேரத்துக்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படுகையில் கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்க முடியும்.
9. தங்களால் முன்னர் மேற்கொள்ளப்பட்டவையும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருபவையுமான கட்டட வேலைகள் தொடர்பான விவரங்கள் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

திருமதி அ.வேதநாயகம்.
யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

(சி/578189) (40-20-24)


## புனர்வாழ்வுக்குழுவின் கலந்துரையாடல்

வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றப் புனர்வாழ்வுக் குழுவின் விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

குழுவின் தலைவர் ஆ.சி.நடராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் இந்தப் பிரதேசத்தில் இதுவரை மீள்குடியமர அனுமதிக்கப்படாத மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அனுமதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும். (ம-313)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426,(302), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.

தொ.பே: 077 6751649

**வீடும் காணியும் விற்பனைக்கு**

திருநெல்வேலி மேற்கு, அரசடி அம்மன் வீதிக்கு அருகில் பகுத்தறிவக ஒழுங்கையில் 1 ¾ (ஒன்றே முக்கால் பரப்பு) காணியுடன் வீடும் கிணறும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0774011256

**The World great Opportunity**

எதிர்காலச் சவால்களை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளத் துடிக்கும் துடிப்புள்ள இளைஞர் யுவதிகளே உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். சர்வதேச அங்கீகாரம் பெற்ற எமது நிறுவனத்துக்கு வேலை வாய்ப்புக்கான வெற்றிடம் காணப்படுகிறது.நீங்கள் O\L,A\L சித்திபெற்றவராயின் தொடர்பை மேற்கொள்ளவும். சம்பளம் 15,000/= முதல் வழங்கப்படும்.

Contact: V.Udaya - 0777227688
S.Sri - 0770771377

**புதிய வீடு உடன் விற்பனைக்கு**

கோண்டாவில் கிழக்கு, இருபாலை வீதியில் பழனி முருகன் ஆலய முன் ஒழுங்கையில் [illegible] வசதியான வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 021 222 1164, 077 8290088


# மரண அறிவித்தல்கள்



### திருமதி பார்வதிதேவி நாகராசா

முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வட்டு.தெற்கு, காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பார்வதிதேவி நாகராசா (முல்லைச் சகோதரிகளில் ஒருவர்) கடந்த (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் நாகராசா (சின்னத்தம்பி) அவர்களின் அன்பு மனைவியும் மகராஜன் (விவசாயக் கல்லூரி, வவுனியா), பிரசாந்தன் (மருத்துவபீடம், யாழ்.பல் கலைக்கழகம், 4ஆம் வருடம்), தயானந்தன், குகதாசன் (பொறியியல் பீடம், மொறட்டுவ, 2ஆம் வருடம்), சிவதாசன் (யாழ்.வட்டு இந்துக் கல்லூரி, கணிதப் பிரிவு 2011) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2011) வியாழக்கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
வட்டு தெற்கு.

தகவல்: தி. நாகராசா
(சின்னத்தம்பி-கணவர்),
பிள்ளைகள்.

### திருமதி சதாசிவம் அப்பாச்சி



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் அப்பாச்சி நேற்று (04.05.2011) புதன்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தெனியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் மத்தி,
சிவன் கோயிலடி,
சாவகச்சேரி.

(1667)

தகவல்:
மகள் - கலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பிலுள்ள பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள் கண்ணீர் மல்க பிளேக்கிடம் கோரிய மக்கள்

யாழ்ப்பாணம்,மே5

தடுப்பில் உள்ள எமது பிள்ளைகளை எம்மிடம் மீட்டுத் தாருங்கள் என்று கிளிநொச்சி மக்களை தனியே சந்தித்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்குப் பொறுப்பான துணைச் செயலாளர் ரெபேர்ட் ஓ பிளேக்கிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பயணத்தை பிளேக் நேற்று முன்தினம் மேற்கொண்டிருந்தார். இதன்போது கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் வைத்துப் பொதுமக்களை தனியே சந்தித்தார் பிளேக்.

ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் தனியே பிளேக்கைச் சந்தித்து தமது குறைகளை எடுத்துக் கூறினர். இந்தச் சந்திப்பின் போது அரச அதிகாரிகள் கூட உடனிருக்க அனுமதிக்கப்படவில்லை.

இந்தச் சந்திப்பில் பிளேக் ஆண்களிடமும் பெண்களிடமும் சில கேள்விகளை எழுப்பியுள்ளார்.

" நீங்கள் தற்போது எவ்வாறான பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றீர்கள்?, விவசாயம் மேற்கொள்ள ஏதுவான சூழ்நிலைகள் இருக்கின்றனவா? தற்போது நீங்கள் ஏதாவது வகையான அச்சுறுத்தல்களை எதிர் நோக்குகின்றீர்களா? போன்ற கேள்விகளே எழுப்பப்பட்டன.

அத்துடன் பெண்களிடம் நீங்கள் எவ்வாறான சமூக இடர்பாடுகளைச் சந்திக்கிறீர்கள்?, வாழ்வாதார உதவிகள் கிடைக்கின்றனவா?, யுத்தத்தில் எவ்வாறான நெருக்கடிகளைச் சந்தித்தீர்கள்? இவ்வாறு பிளேக்கினால் கேள்விகள் எழுப்பப்பட்டன.

பிளேக்கை சந்தித்த பெண்கள், தமது பிள்ளைகள் தடுப்பில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவித்துத் தாருங்கள் என்று கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் இறுதி யுத்தத்தில் தமது கண் முன்னாலேயே தமது கணவர் மற்றும் பிள்ளைகள் ஷெல்லுக்குப் பலியான கோர நிகழ்வுகளையும் எடுத்துக் கூறினர்.

இந்தச் சந்திப்பில் பிளேக் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் எந்தவிதக் கருத்தையும் பகிரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-15-06)

## வாராந்த சொற்பொழிவுகள்

வடமராட்சி,மே5

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையால் வாரம் தோறும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டுவரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'ஆன்மிக ஈடேற்றம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

யாழ். சின்மயா நிறுவனத்தின் பிரமச்சாரி ஜாக்கிரத் சைதன்ய சுவாமி இந்தச் சொற்பொழிவை நிகழ்த்துவார். (ம-236)

* * *

வடமராட்சி,மே5

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் இடம்பெற்று வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 'ஸ்ரீ மகா பக்தவிஜயம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

இச்சொற்பொழிவை இளைப்பாறிய நில அளவையாளர் வ.ஆ.தங்கமயில் நிகழ்த்துவார். (ம-236)

## புலோலி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளைத் தேர்தல்

வடமராட்சி,மே5

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் குழுத் தேர்தல் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தின் ஒவ்வொரு கிளைக்கும் குறிப்பிட்ட இடங்களில் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் நியமிக்கப்பட்ட கூட்டுறவு உத்தியோகத்தர்கள் தலைமையில் இடம்பெறும் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானோர் பங்குபற்றி ஒத்துழைப்புத் தருமாறு புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கோரியுள்ளது.(ம-236)

## பொன்சேகாவை அழைத்து வர தாமதம் ஏன்?

கொழும்பு,மே,5

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை உரிய நேரத்தில் நீதிமன்றில் ஆஜர் படுத்தத் தவறியமை தொடர்பில் விளக்கம் அளிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றம் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு நேற்றுமுன் தினம் முன்னறிவித்தல் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது தொடர்பில் சரத் பொன்சேகா நீதிமன்றில் தாக்கல் செய்த மனு நேற்று முன்தினம் பகல் 1.30 இற்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சரத் பொன்சேகாவை சிறைச்சாலை அதிகாரிகள் உரிய நேரத்தில் நீதிமன்றில் ஆஜர்படுத்தத்தவறி இருந்தனர்.

இதனையடுத்தே, எதிர்வரும் 9ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-சி)

## அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியோருக்கு அபராதம்

காப்புறுதிப் பத்திரமின்றியும் சாரதி அனுமதிப்பத்திரமின்றியும் வாகனத்தைச் செலுத்திய இரண்டு பேருக்கு யாழ்.நீதிமன்றம் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது.

யாழ்.நகரில் போக்குவரத்துப் பொலிஸார் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமும் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ம-9)

## ஓய்வூதியச் சம்பள முறைமைக்கு விவசாயிகளை இணைப்பது நிறுத்தம்

கொழும்பு,மே5

விவசாய உற்பத்தி மற்றும் விவசாயிகள் காப்புறுதிச் சபையின் வசமிருந்த நிதி தீர்ந்து போயுள்ளதால் விவசாயிகள் ஓய்வூதியச் சம்பள முறைமைக்கு விவசாயிகளைச் சேர்த்துக் கொள்வது நிறுத்தப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் பத்து லட்சத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் ஓய்வூதியச் சம்பள முறைமைக்குப் பங்களிப்பு வழங்கியுள்ளனர்.

அவர்களுள் தற்போது 86 ஆயிரத்து 500 பேருக்கு மேற்பட்ட விவசாயிகள் ஓய்வூதியச் சம்பளங்களைப் பெற்று வருகின்றனர்.

ஓய்வூதியச் சம்பளங்களை வழங்குவது தொடர்பாக மாதமொன்றில் 91 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது அண்மைக்காலம் வரையிலும் மேற்படி சபையின் வசமிருந்த 300 கோடி ரூபா நிதியிலிருந்தே இந்த ஓய்வூதியச் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன.

ஆனால் தற்போது மேற்படி சபையின் அந்த நிதித்தொகை தீர்ந்துபோயுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து விவசாய உற்பத்தி மற்றும் விவசாயிகள் ஓய்வூதியச் சம்பளப் பணிப்பாளர் கூறுகையில்:

தற்போது நடைமுறையிலுள்ள விவசாயிகள் ஓய்வூதியச் சம்பள முறைமை பொருத்தமற்றது என்பதால் அது அரசுக்கு பெரும் சுமையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே எதிர்காலத்தில் புதிய முறைமை ஒன்று அறிமுகப்படுத்தும் வரையில் விவசாயிகள் ஓய்வூதியச் சம்பள முறைமையில் இணைந்து கொள்ளுமாறு விவசாயிகள் ஊக்குவிக்கப்படமாட்டார்கள்.

இந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையில் விவசாயிகள் ஓய்வூதியச் சம்பள கொடுப்பனவுக்கு மட்டும் 908 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-22)

## கலைவாணி ச.ச.நிலைய ஆண்டு விழா

நாவாந்துறை, மே 5

யாழ். நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலையத்தின் 36ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.

ஆண்டுவிழாவை முன்னிட்டு அன்றைய தினம் சைக்கிள் ஓட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 10 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு நிலையத்துக்கு வந்து பதிவுசெய்து கொள்ள முடியும். (எ)

## சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் தகவல்களை கணினி மயப்படுத்த ஏற்பாடு

கொழும்பு,மே5

சிறைச்சாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ள கைதிகள் சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல்களையும் கணினிமயப்படுத்த சிறைச்சாலைகள் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தீர்மானித்துள்ளது. ஏற்கனவே சிறைக்கைதிகளின் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

வெகு விரைவில் அத்தகவல்களை கணினிமயப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று சிறைச்சாலைகள் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

கைதிகள் இழைத்துள்ள குற்றங்கள், தண்டனைக் காலம், குடும்பத் தகவல்கள், முன்னைய குற்றங்கள், சிறைச்சாலைகளில் அவர்களது நடத்தைகள் போன்ற அனைத்துத் தகவல்களும் அதில் உள்ளடக்கப்படும். - என்றார். (எ-22)

# பிரபாகரனுக்கு ஒரு நியாயம் பின்லேடனுக்கு இன்னொரு நியாயமா?

### இப்படிக் கேட்கிறார் அலவி மௌலானா

கொழும்பு,மே,5

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் பிரபாகரனுக்கு ஒரு நியாயமும் பின் லேடனுக்கு இன்னொரு நியாயமும் காட்டுவது ஏன்?

மேற்கண்டவாறு மேல் மாகாண சபை ஆளுநர் அலவி மௌலானா கேள்வி எழுப்பி உள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

1967ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் பிறந்த சிவில் என்ஜினியரும் பொருளியல் பட்டதாரியுமான ஒஸாமா பின்லேடன் ஏகாதிபத்திய நாடுகளினால் இஸ்லாத்துக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட அக்கிரமங்களை பொறுத் துக் கொள்ள முடியாத நிலை யில் 1979 ஆம் ஆண்டு அல்- குவைதா இயக்கத்தை ஆரம் பித்தார்.

இவர் இஸ்லாமிய மார்க்கப் பற்று மிக்கவர். இவரது தீவிரவாத செயல்கள் யாவும் இஸ்லாத்துக்கு முரணானவர்களுக்கு எதிராகவே இருந்தன. இவரது இந்த இயக்கம் இல்லாது இருந்தால் இன்று முஸ்லிம் நாடுகளை ஏகாதிபத்திய நாடுகள் ஒடுக்கியிருக்கும்.

பின்லேடன் பயங்கரவாதியா? இஸ்லாமிய [illegible] தீவிரவாதியா? என்பதை ஏகாதிபத்திய நாடுகள் தீர்மானிக்க முடியாது. அதைத் தீர்மானிக்கும் சக்தி, படைத்த அல்லாஹ் ஒருவனுக்கே உரியது.

இன்று இஸ்லாமிய நாடுகள் ஏகாதிபத்திய நாடுகளினால் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கின்ற இந்த வேளையில் அதைப்பற்றி குரல் கொடுப்பார் எவருமில்லை.

ஆனால், பின்லேடனோ இஸ்லாத்துக்காக இஸ்லாமிய கொள்கைகளைப் பேணுவதற்காக தனது சொத்துகளை, சுதந்திரத்தைக் கூட இழந்து போராடியவர். இவர் இஸ்லாமிய கொள்கைகளுக்காகப் போராடாமல் தன் பாட்டில் வாழ்ந்திருந்தால் இன்று உலகில் மாபெரும் செல்வந்தராக விளங்கியிருப்பார்.

அமெரிக்காவினதும் ஐக்கிய நாடுகள் சபையினதும் ஏகாதிபத்தியம் எவ்வாறானது எனில், பிரபாகரனைக் கொலை செய்தது மனித உரிமை மீறலாகவும் பாகிஸ்தானில் பின்லேடனைக் கொலை செய்தது தீவிரவாத ஒழிப்பாகவும் காட்டப்படுகின்றது. இதன் விளக்கம்தான் என்ன?

ஐ.நா. சபையின் செயலாளர் பான் கீ - மூன் பிரபாகரனுக்கு ஒரு நியாயமும் பின்லேடனுக்கு வேறு நியாயமும் காட்டுவது ஏன்?

பின்லேடன் இஸ்லாம் எங்கே பாதிக்கப்படுகின்றதோ அங்கே அதற்கெதிரான போராட்டங்களை மேற்கொண்டார். இவரது படுகொலை தீவிரவாதத்துக்கு எதிரான ஏகாதிபத்திய நாடுகளின் போராட்டமா, அல்லது இஸ்லாத்துக்கு எதிரான ஏகாதிபத்தியத்தின் போராட்டமா என்பது சிந்தனைக்குரியது.

இ[illegible]திபத்திய நாடுகளின் [illegible]சியினால் இன்று உலக முஸ்லிம் நாடுகள் யாவும் பிரச்சினைக்கு உட்பட்டு இருக்கின்ற இந்த வேளையில், முஸ்லிம்களாகிய நாம் சிந்தனையுடன் செயற்பட வேண்டும் என உலக வாழ் முஸ்லிம்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன். எ[illegible]ிவிக்கப்பட்டுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்குவாய்க்காலில் மீன்பிடித்தலை தடை செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 5

யாழ்.குடா கடல் நீரேரிப் பகுதியை நோக்கி கடல் உணவுகள் நகர்வதற்குப் பிரதான இடமாக விளங்கும் சங்குவாய்க்கால் பகுதியில் நீரோட்டத்தை இடைமறித்து வலை பாய்தல் மூலம் மீன்பிடிக்கும் முறையைத் தடைசெய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குடாக்கடல் நீரேரிப் பகுதியில் தொழில் புரியும் மீனவர்களே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற மீனவர்களுடனான சந்திப்பின்போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

சங்குவாய்க்கால் சுழிபுரத்துக்கும் காரைநகருக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ளது. யாழ். குடாக்கடல் நீரேரிப் பகுதியின் ஆரம்பமாக சங்கு வாய்க்கால் விளங்குகிறது.

இந்த ஏரி சாவகச்சேரி வரையான கடல் பகுதியை உள்ளடக்கியுள்ளது. இந்த ஏரியில் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இந்த நிலையில் ஏரியில் தொழிலில் ஈடுபடுவதற்கு ஏதுவாக சங்குவாய்க்காலின் ஊடாகவே பிற இடங்களிலிருந்து அதிகளவான கடல் உணவுகள் குடாக்கடல் நீரேரியை வந்தடைகின்றன.

ஆனால் சங்குவாய்க்காலில் நீரோட்டத்தை இடைமறித்து அங்குள்ள ஒரு பகுதி மீனவர்கள் வலைபாய்கின்றனர்.

இதனால் குடாக்கடல் நீரேரிக்கு கடல் உணவுகள்செல்வது தடைப்படுவதோடு, எண்ணிக்கையிலும் குறைவடைகின்றன.

இதனால் அங்குள்ள 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் பாதிக்கப்பட வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர்.

ஒக்ரோபர் 15 ஆம்திகதி தொடக்கம் ஜனவரி 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மட்டும் சங்குவாய்க்காலில் நீரோட்டத்துக்குக் குறுக்காக வலைபாய மீனவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தது.

இந்தக் காலப்பகுதியில் வழமையைவிட அதிகமானதாக பரந்துபட்ட பிரதேசத்தினூடாக நீரோட்டம் காணப்படுவதால் பாதிப்பு ஏற்படுவதில்லை.

இந்தக் காலப்பகுதியில் நீரோட்டத்தை குறுக்கறுத்து வலைபாயலாம் என்று மீனவர்கள் தமக்கிடையே உடன்பட்டிருந்தனர். ஆனால் அவர்கள் தற்போது குறித்த வரையறைக் காலத்தையும் தாண்டி நீரோட்டத்தை இடைமறித்து வலைபாய்வதனாலேயே இந்தமுறையைத் தடைசெய்யுமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4)

## வன்புணர்வுச் சம்பவம்; சந்தேக நபர் மறியலில்

யாழ்ப்பாணம்,மே 5

கைதடி- நாவற்குழிப் பகுதியில் 13 வயதுச் சிறுமி ஒருவர் வன் புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் சம்பந்தப் பட்ட நபரைக் கைது செய்து திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)

## வலிகாமத்தில் தொடர் மழை; சிறுதானியச் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம்,மே 5

வலிகாமத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையால் சிறுதானியச் செய்கையாளர்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெரும்போகநெல் அறுவடையைத் தொடர்ந்து விவசாயிகள் வலி.மேற்கு, வலி.தென் மேற்கு, வலி. தெற்கு பகுதிகளில் எள், பயறு, கௌபி, உழுந்து என்பன செய்கை பண்ணியிருந்தனர்.

தற்போது பெய்து வரும் தொடர்ச்சியான கடும் மழையால் முழுமையாக பாதிக்கப் பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பாதிப்பின் தன்மைக்கு ஏற்றவாறு நஷ்ட ஈடுவழங்க யாழ்.அரச அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை-

யாழ்.குடாநாட்டில் சிறுதானிய செய்கையில் ஈடுபட்டு மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமது விவரங்களை பதிவு செய்து வருகின்றனர். (ம-302)

## ஒத்திகை...



கலைவளர்ப்போம்: கலாசார பண்பாடு திணைக்களத்தின் இலக்கிய விழாவை முன்னிட்டு வீரசிங்கம் மண்டபத்தில் ஒத்திகை பார்க்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. விழாவில் கலந்து கொள்பவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. (311)

## கோப்பாயில் திருடர் கைவரிசை

கோப்பாயில் வெல்டிங் கராஜ் ஒன்றில் பெறுமதிமிக்க பொருள்கள் மற்றும் பணம் என்பன திங்கட்கிழமை இரவு திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

இதன்போது கராஜ்ஜில் இருந்த கிறைண்டர் இரண்டு, றில்லர், றிவெக்கர் ஆகிய 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெல்டிங் உபகரணங்களும், எட்டாயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-313-72)

யாழ்.ஆஸ்பத்திரி சிற்றூழியர்கள்

# கடமை நேரம் மதுபோதையிலிருந்தால் அவர்கள் பணிநீக்கம் செய்யப்படுவர்

யாழ்ப்பாணம்,மே 5

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிற்றூழியர்கள் கடமையில் இருக்கும் போது மதுபோதையில் இருப்பார்களேயானால் அவர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்று பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்துள்ளார்.

கடமையில் உள்ள சிற்றூழியர்கள் மதுபோதையில் இருப்பதில்லை என்று கூறிய பணிப்பாளர் மேற்படி தகவலையும் தெரிவித்தார்.

வைத்திய சாலையில் கடமையிலுள்ள சிற்றூழியர்களில் ஒரு சிலர் மதுபோதையில் காணப்படுவதாகவும் அவர்கள் சிசிச்சைக்கு வரும் நோயாளர்களை உரிய முறையில் பராமரிப்பதில்லை எனவும் எமக்குக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாகக் கேட்டபோதே பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

வைத்தியசாலையில் குறிப்பாக நோயாளர்களைப் பதிவுசெய்யும் பகுதியில் கடமையிலுள்ள சிற்றூழியர்களில் ஒரு சிலரே மதுபோதையில் காணப்படுவதாகக் கூறப்பட்டது.

இதனால் அங்கு வரும் நோயாளர்களை உரிய முறையில் பராமரிப்பதில்லை எனவும் நோயாளர்களுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுவருவதாகவும் நோயாளர் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து பணிப்பாளரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

கடமை நேரத்தில் அவ்வாறான நிலைமைகளில் யாராவது காணப்படுவார்களாயின் அவர்கள் பற்றி நிர்வாகத்துக்கு அறிவிக்கும் படி பணிப்பாளர் சிகிச்சைக்கு வரும் நோயாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-4)

## திருத்தப்படாத வீதியால் சிரமம்

தென்மராட்சி மே5

கைதடி -கோப்பாய் வீதியில் உள்ள பாலத்துக்கும் கோப்பாய் சந்திக்கும் இடையில் உள்ள வீதி சுமார் அரை கிலோ மீற்றர் தூரம் வரை நீண்ட காலமாகத் திருத்தப்படாததால் வாகனங்களில் செல்வோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கோப்பாய்ச் சந்தியை அண்மித்த பகுதியில் திருத்த வேலை மேற்கொள்ளப்படவில்லை. வலிகாமம் பகுதி மக்கள் தென்மராட்சி பிரதேசத்துக்குச் செல்வதற்கு இந்தவீதிகிட்டியபாதையாகும் இதனை புனரமைக்க உரிய அதிகாரிகளை நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர். (ம-207)

# பெரிய அளவில் விவசாயக் கண்காட்சி ஒகஸ்டில் நடத்துவதற்கு ஏற்பாடு

மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் இந்த முறை விவசாயக் கண்காட்சி கடந்த காலங்களிலும் பார்க்க பெயரிய அளவில் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக யாழ்ப்பாணம் விவசாய திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்

இது குறித்து மேலும் தெரிவிக்கையில்:

கண்காட்சியை மிகவும் சிறந்த முறையிலும் புதிய உத்திகளைக் காட்சிப்படுத்தக் கூடியதுமாக அமையக்கூடியதாக மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நிதி ஒதுக்கீட்டை வழங்கியுள்ளார்.

இதுதொடர்பாக கடல் நிலையத்தில் பிரதி விவசாயப் பணிப்பாளர் தனது குழுவினருடன் யாழ்.நகருக்கு வருகை தந்து தேவையான ஆலோசனைகளையும் தமது முழுமையான பங்களிப்பையும் வழங்கி கண்காட்சியைப் பெரிய அளவில் நடத்த முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

மாவட்ட விவசாய திணைக்களம், யாழ்பல்கலைக்கழக விவசாய பீடம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், பனை அபிவிருத்திச் சபை, தெங்கு பயிர்ச் செய்கைசபை, சுதேச வைத்திய திணைக்களம், விவசாய ஆராய்ச்சி நிலையம், விவசாய சம்மேளனங்கள் என்பவற்றுடன் இணைந்து இந்தக் கண்காட்சியை விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. ஒகஸ்ட் மாதத்தில் கண்காட்சி இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெதுப்பகங்களின் அனுமதிப்பத்திரப் பிரதியை விற்பனையாளர்களும் வைத்திருக்க வேண்டும்

## யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 5

வெதுப்பகஉற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் வியாபார நிலைய உரிமையாளர்கள் அனைவரும் குறித்த வெதுப்பக நிறுவனத்தினுடைய அனுமதிப் பத்திரத்தின்பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என்று யாழ்.மாநகர பொதுச் சுகாதாரப் பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் வெதுப்பக உற்பத்திகளை விற்பனை செய்யும் வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு சுகாதாரப் பிரிவினரால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் இயங்கிவரும் வெதுப்பகங்கள் உட்பட அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள வெதுப்பகங்கள் சிலவற்றிலும் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் வெதுப்பக உற்பத்திகள் இடம்பெற்று வருகின்றமை திடீர்ப் பரிசோதனைகளினூடாகக் கண்டறியப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை மற்றும் கொய்யாத் தோட்டப் பகுதியில் இயங்கி வந்த இரண்டு வெதுப்பக நிலையங்கள் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டு அந்த நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக இந்த நடவடிக்கை மாநகர எல்லையினுள் அமுல்படுத்தப்படுவதாகவும் தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் இந்த நடைமுறை அமுல்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்மூலம் பேக்கரி உற்பத்தி நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் முடிந்தளவு சுகாதாரத்தைப் பேண முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது என்று சுகாதாரப் பிரிவினரால் தெரிவிக்கப்படுகின்றது.(எ-4)

# சர்வ மதக் குழு யாழ். வருகை



யாழ்ப்பாணம்,மே 5

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக வட பகுதி மக்கள் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர் என்பதைப் பதிவுசெய்யும் நடவடிக்கையில் தென்னிலங்கையைச்சேர்ந்த சர்வமத சமாதானக்குழு, இறங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்த இந்தக்குழு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களைப் பதிவு செய்தது.

நேற்றுமாலை யாழ்.நகர் பொம்மைவெளிப் பகுதிக்கும் இந்தக் குழு சென்றிருந்தது. சுமார் இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாக முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடியது.

தொடர்ந்து தமிழ் மக்கள் பிரதிநிதிகள் சிலரையும் இந்தக் குழுவினர் நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர் என்று தெரியவந்தது.

இன்றும் யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்து சர்வமதத் தலைவர்கள் மற்றும் மக்கள் குழுக்களைச் சந்தித்துக் கலந்துரையாட இந்தக் குழு தீர்மானித்துள்ளது.

எனினும், இந்தக் குழுவினர் ஊடகங்களுக்கு விவரம் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.(ஓ-14)

## ஆதரவு வழங்கல்...




உதவி: செரண்டிப் சிறுவர் இல்லத்தால் துணை இழந்த பெண்களுக்குத் தொழிற்பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனத்தின் தலைவர் எ.கந்தசாமி இந்தப் பயிற்சிகளை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், வலி.கிழக்கு முறைசாராக் கல்வி விரிவுரையாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் உரையாற்றுகின்றனர். கந்தசாமி தம்பதியினர் அமர்ந்துள்ளனர்.

# கைத்தொலைபேசியில் உரையாடியவாறு மோ.சைக்கிள் செலுத்திய நால்வருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மே 5

கைத்தொலைபேசியில் கதைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிள் செலுத்திய 4பேருக்கு யாழ்.நீதிமன்றம் 8ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பொலிஸார் நேற்றுமுன்தினம் நண்பகல் யாழ். ஆடியபாதம் வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது கைத்தொலைபேசியில் கதைத்தவாறு மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நான்கு பேரைக் கைது செய்தனர்.

கைது செய்த நால்வரையும் பொலிஸார் யாழ். நீதிமன்றில் நேற்று பிற்பகல் ஆஜர்படுத்தினர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகளை மேற் கொண்ட யாழ்.நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா மூன்றுபேருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபாவும் ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார்.

தற்போது வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ள நிலையில் விபத்துக்களுக்கு வழிகோலும் வகையில் கைத்தொலைபேசியில் உரையாடியவாறு இவர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம- 9)

# தேசவள விவசாயிகள் சம்மேளன கொள்வனவு- விற்பனை நிலையம்

தென்மராட்சி,மே 5

யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள்சம்மேளன கொள்வனவு-விற்பனை சேவை நிலையம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புன்னாலைக் கட்டுவனில் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் தலைமையில் திறப்பு விழா இடம்பெறும்.

பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திர சிறி, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் பற்றிக் நிறைஞ்சன், பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், சீ.ஐ.சீ. வடக்கு- கிழக்கு அபிவிருத்தி ஆலோசகர் ஏ.சற்குணநாதன் உட்படப் பலர் கலந்து கொள்வர். (ம-302)

# கோடாலி வெட்டுக்கு இலக்காகிக் காயம்

தென்மராட்சி,மே 5

தம்பியின் கோடரி வெட்டுக்கு அக்கா இலக்காகி படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை பளை முல்லையடியில் இடம்பெற்றது.

இதேஇடத்தைச் சேர்ந்த விநாயகமூர்த்தி பிரியதர்சினி (வயது-22) என்பவர் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ம-207)

# உரிய நேரம் சேவையில் ஈடுபடாத பேருந்தால் பயணிகள் நெருக்கடி

காரைநகர்,மே 5

யாழ்ப்பாணம்,சித்தன்கேணி 789 இலக்கப் பேருந்துச் சேவை உரிய நேரத்தில் சேவையில் ஈடுபடாததால் பொதுமக்கள் உட்படப் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

குறித்த பேருந்துச் சேவை கடந்த 3 தினங்களாக உரிய நேரத்தில் சேவையில் ஈடுபடவில்லை என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பருவகாலச் சீட்டைப் பெற்றுக் கொண்டுள்ள மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் தனியார் பேருந்துகளில் பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகப் போக்குவரத்துச் சபை அதிகாரிகள் கவனம் எடுத்து உரிய நேரத்தில் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கு ஆவன செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

# தேசிய விஞ்ஞான மன்றத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையே போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே 5

தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான விஞ்ஞான ஆராய்ச்சித் திட்டங்களுக்கான போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் 14 வயது முதல் 19 வயது வரையிலான மாணவர்கள் பங்கு பற்றலாம்.

இதேவேளை போட்டிகள் தொடர்பான ஆரம்ப வழிகாட்டல் கருத்தரங்கை எதிர்வரும் ஜூன் மாதம் சிறந்த வளவாளர்களைக் கொண்டு நடத்த தேசிய விஞ்ஞான மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும்15 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய விஞ்ஞானமன்றத்துக்கு அனுப்பி வைக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை nsf.ac.lk எனும் இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லது தேசிய விஞ்ஞான மன்றத்தினது விஞ்ஞானப் பரப்புதல் கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

இதுதொடர்பான மேலதிக விவரங்களை இயக்குநர், தேசிய விஞ்ஞான மன்றம், 47/5, மெயிற்லாண்ட் பிளேஸ், கொழும்பு-7 எனும் தபால் முகவரிக்கோ அல்லது 011 2696771 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

இந்தப் போட்டியில் தெரிவு செய்யப்படும் 10 திட்டங்களை வரைவோருக்கு தேசிய விஞ்ஞான மன்றமும் இலங்கை பொறியியலாளர் மன்றமும் இன்ரெல் நிறுவனமும் கல்வி அமைச்சும் இணைந்து நடத்தவிருக்கும் இலங்கை விஞ்ஞான மற்றும் பொறியியல் கண்காட்சியில் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

அத்துடன் அதிசிறந்த 3 ஆராய்ச்சித் திட்டங்கள் 2012 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் இன்ரெல் உலகளாவிய விஞ்ஞான மற்றும் பொறியியல் கண்காட்சியிலும் பங்குபற்ற தெரிவு செய்யப்படும் என்று யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தலைவர் பேராசிரியர் கு.மிகுந்தன் அறிவித்துள்ளார். (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் இணைந்து அபிவிருத்திக்காக உழைப்போம்

## கூட்டமைப்பு பிரதேசசபை உறுப்பினர் வேண்டுகோள்

கிளிநொச்சி,மே 5

''எந்த அபிவிருத்தியினையும் இதுவரை கண்டிராத இந்தப் பிரதேசத்தினை எதிர்காலத்தில் நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து அபிவிருத்தி செய்து முன்னேறிய ஒரு பிரதேசமாக மாற்றுவோம்'' என முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சிவலோகநாதன் செந்தூரன் தெரிவித்தார்.

கடந்த பல ஆண்டுகளாக எந்தவொரு அபிவிருத்தியும் இல்லாமல் இந்தப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக முல்லைத்தீவு, வன்னி விளாங்குளம், முதல் மூன்று முறிப்பு, விநாயகபுரம், பாலிநகர் வரையான ஒரு நீண்ட பிரதேசங்களைத் தன்னகத்தே கொண்டு அமைந்துள்ள பிரதேச சபையினது எந்தக் கிராமத்துக்கும் ஒரு சீரான வீதி இல்லை. எத்தனையோ இடங்களில் குடிதண்ணீருக்காகத் தினமும் மக்கள் அலைந்து திரிகின்றனர்.

தமிழ் மக்களாகிய நாங்கள் எமக்குச் சொந்தமான இந்தப் பிரதேச சபையைப் பொறுப்பேற்றுக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன் முதலாக ஜனநாயக வழிகள் மூலம் எமது மக்கள் இந்தப் பிரதேச சபைக்கான தீர்ப்பினை வெளிப்படுத்தி எங்களை வெற்றி பெறச் செய்து அவர்களின் பிரதிநிதிகளாக அனுப்பி வைத்துள்ளனர்.

நடந்து முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஒரு பெண் வேட்பாளரை இந்தப் பிரதேசம் தான் தெரிவு செய்துள்ளது என்ற பெருமையினையும் பெற்றுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக இந்தப் பெண் உறுப்பினர் உட்பட ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றோம். எதிர்க்கட்சியின் சார்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூன்று உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர்.

இந்த நிலையில் நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து கட்சி வேறுபாடுகள் இன்றி அபிவிருத்திகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் முற்று முழுதாகத் தமிழ் மக்கள் தான் வசித்து வருகின்றனர். ஆனால் தமிழர்களாகிய நாங்கள் இப்பிரதேச சபையினைக் கைப்பற்றுவதற்குப் பல நெருக்கடிகளையும் துன்பங்களையும் சந்தித்தோம். தமிழ் மக்களின் அரசியல் சக்தியை மாற்றுச் சக்திகள் அற்ப சொற்ப ஆசைகளையும் அதிகாரங்களையும் அச்சுறுத்தல்களையும் முன்னிறுத்தி பல வீனப்படுத்த முயல்கின்றன.

நாங்கள் எத்தனையோ இழப்புக்களையும் துன்பங்களையும் சுமைகளாகச் சுமந்து கொண்டு நிற்கின்றோம். எங்களின் உடன்பிறப்புக்களையும் இழந்து எந்தத் தீர்வும் இல்லாமல் எந்த அபிவிருத்தியும்இல்லாமல் நிர்க்கதியான நிலையில் இருக்கின்றோம்.

இந்த நிலையில் எங்களுடைய பிரதேசங்களிலே கடமையாற்றுகின்ற குறிப்பிட்ட சில அரச அதிகாரிகள் அரசியல் கட்சிகள் காட்டுகின்ற சில அற்ப சொற்ப ஆசைகளுக்காக எமது பாரம்பரிய கலை, கலாசாரம் மற்றும் அதன் புனிதத் தன்மை மேம்படுவதைத் தடுத்து வருகின்றனர்.

எங்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்து அதனூடாக எமது சொத்துக்களையும் உரிமைகளையும் சூறையாடுகின்றனர். அத்துடன் ஒரு குடும்பமாக சிறுபராயம் முதல் பாடசாலை விளையாட்டுக்கழகம் பொது வேலைகள் என ஒன்றாக ஈடுபட்ட எங்களில் சிலரை



அச்சுறுத்தி அற்ப ஆசைகளைக் காட்டி கட்டாயத்தின் பேரில் அரசியலில் இறக்கி எங்களுக்கு எதிராக அவர்களை எங்களுடன் போட்டியிட வைத்தனர்.

ஆனால் இந்த மக்கள் தமது அசைக்க முடியாத ஜனநாயக உரிமையின் மூலம் தமது தீர்ப்புக்களைத் தெளிவாக வழங்கியுள்ளனர்.

எதிர்காலத்தில் இங்கே காணப்படுகின்ற வளங்களையும் எமக்குக் கிடைக்கின்ற நிதியையும் கொண்டு எமது பிரதேசத்தினை நாம் எல்லோரும் ஒன்றிணைந்து அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-6)

# உவரடைந்து பாழாகும் குடிதண்ணீர்க் கிணறுகள்

வவுனியா,மே 5

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் குடிதண்ணீர்க் கிணறுகள் உவரடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா, செட்டிகுளம் முதலாம் பண்ணை, இரண்டாம் பண்ணை, முகத்தான்குளம், முதலியார்குளம், கிறிஸ்தவகுளம் ஆகிய பகுதிகளில் உள்ள குடிதண்ணீர்க் கிணறுகள் உவரடைந்து வருகின்றன. இதனால் இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் பல்வேறு இடங்களுக்கும் சென்று குடிதண்ணீரைப் பெற்று வருகின்றனர்.

முகத்தான் குளம் கிராமத்தில் உள்ள குறிப்பிட்ட இடங்களில் குடிதண்ணீர் விநியோகம் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. (க-6)

# நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பு

தொடர்ந்து பெய்த கோடை மழை காரணமாக நீர் தேங்கியுள்ளதால் முல்லைத்தீவில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளும் பெருகுவதற்கு வாய்ப்பிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

(க-500)

# பேசாலை மருத்துவமனை பணியாளர்கள் மூன்றாவது நாளாகப் பணிப் புறக்கணிப்பு

மன்னார்,மே 5

மன்னார் பேசாலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் மற்றும் காவலாளி ஆகியோர் கடந்த, ஞாயிற்றுக்கிழமை மாலை மது போதையில் வந்த ஒருவரினால் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவத்தினைத் தொடர்ந்து அதனைக் கண்டித்து பேசாலை வைத்தியசாலையின் பணியாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மூன்றாவது நாளாக நேற்று முன்தினமும் பேசாலை வைத்தியசாலையில் பணிப் புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி சம்பவத்தினைக் கண்டித்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணியாளர்களும் நேற்று முன்தினம் காலை 8 மணிதொடக்கம் 10.30 மணிவரையும் புறக்கணிப்பினை மேற்கொண்டனர்.

இதனால் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

மு.ப. 10.30 மணிக்குப் பிறகு வைத்தியசாலையின் பணிகள் வழமைக்குத் திரும்பின.

(க-601)

**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2011 PHYSICS
PAPER CLASS
Sat, Sun 6 P.m.
S.சசி, B.sc.(Edu)
2013, 012, நடைபெறுகின்றது.

**Eye Centre**
(ஐ சென்ரர்)
**கண் சிகிச்சை நிலையம்**
230, நாவலர் வீதி,
(இலுப்பையடிச் சந்திக்கும்
ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)
யாழ்ப்பாணம்.
கண் சத்திர சிகிச்சை நிபுணர் ஆலோசனையும், சிகிச்சையும் நடைபெறுகின்றன. வெகு விரைவில் நவீன முறையில் சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.
மேலதிக விவரங்களுக்கு
இ.கோபிதரன்
0779231710
0213202199
(3826)

**எவரெஸ்ட் தாளங்காய்த் தைலம்**



★ வாதம், மூட்டுவீக்கம், மூட்டு வேதனை என்பவற்றுக்குச் சிறந்த நிவாரணி
★ யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய சித்த மருத்துவர்களின் கையாட்சி முறைப்படி தயாரிக்கப்பட்டது.
★ யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லா மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
எவரெஸ்ட் மருந்தகம்
(பதிவு Ay/MF/JA/295)
உசன், மிருசுவில்.

**காணி தேவை**
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் கனரக வாகனப் போக்குவரத்து மேற்கொள்ளக் கூடிய வீதி கொண்ட 4 பரப்புக் காணி தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் மாவட்ட அலுவலகத்துக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது.
தொடர்புகளுக்கு:-
மாவட்ட முகாமையாளர்
தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
மாவட்ட அலுவலகம்
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 0212222383
(3838) (46, 20, 25)

**தேவை**
ROOM BOY, STEWARD. இருவர் தேவை. 5,6 ஆம் திகதிகளில் உடன் நேரில் வரவும். தங்குமிட வசதியுண்டு.
கிறின் இன் ரெஸ்ரோரன்ட்
60, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே:0212223898, 0772719039

**மணமகன் தேவை**
இத்தாலியில் சகோதரருடன் வாழும் இந்து கௌரவ குடும்பம், 38 வயது, 8 இல் செவ்வாய், கிரக பாவம் 87, அழகிய மணமகளுக்கு ஐரோப்பிய நாடுகள், லண்டன், கனடாவில் தொழில் புரியும் 42-44 வயது பொருத்தமான மணமகனைத் தேடுகின்றனர்.
தொடர்பு:00390916883146

**காணி விற்பனைக்கு**
மூளாய் மேற்கு, விளாப்புலம் நெற்பரப்பு 6½ பொன்னாலை இறை, விசுவ கிணற்றடி நெற்பரப்பு 2குளி 1 3/7 வயற்காணி விற்பனைக்குள்ளது.
தொடர்புகளுக்கு:
0779116402

**கண்ணீர் அஞ்சலி**

றோயல் பேக்கரி உரிமையாளர்
திரு.கா.சுரேஸ் (பவா) அவர்களின்
அன்புத் தாய்

*அமரர் கார்த்திகேசு மீனாட்சி*

அவர்கள் 02.05.2011 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ ஐங்கரன் பேக்கரி,
உரிமையாளரும்,
ஊழியர்களும்.
டச்சு வீதி,
சாவகச்சேரி. (1666)

**துயர்பகிர்கின்றோம்**



எமது ஆருயிர் நண்பன் நாகராசா குகதாசனின் அன்புத் தாயார்

திருமதி பார்வதிதேவி நாகராசா

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மொறட்டுவப் பல்கலைக்கழக பொறியியல் பீட
2 ஆம் வருட மாணவர்கள்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது நிறுவனத்தில் பணியாற்றும்
வெ.கோகுலன் அவர்களின்
அன்புத்தந்தை
*அமரர் சுந்தரம் வெற்றிவேலு*
அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.57, K.K.S. வீதி,
சுன்னாகம். (3822)
உரிமையாளரும், ஊழியர்களும்,
தேவன் சன்-எலக்ரிக்கல்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம் புறக்கணிக்கப்படுகின்றனர் என தட்டுவன்கொட்டி விவசாயிகள் விசனம்

கிளிநொச்சி,மே 5

கிளிநொச்சி தட்டுவன்கொட்டிப் பகுதியில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் பல்வேறு விதத்திலும் தாம் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் என்று கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி ஊரியான் குளத்தின் கீழ் தட்டுவன்கொட்டியைச் சேர்ந்த 56 விவசாயிகளுக்கு வயல் காணிகள் உள்ளன. இதில் 20 செய்கையாளர்கள் உள்ளனர்.

ஊரியான்குளத்தின் அலைகரைப் பகுதிகளை விவசாயிகள் வயல்களாக மாற்றிக் குளத்தின் நீர்க் கொள்ளளவைக் குறைத்துள்ளனர். இதனால் வயல் நிலங்களின் கீழான செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது ஒரு புறமிருக்க, விவசாய உள்ளீடுகள் வழங்குவதிலும் தாங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர். ஊரியான் கமக்கார அமைப்பின் கீழ் தங்களின் காணிகள் உள்ளடங்கியுள்ளமையால் தங்களுக்கான சிறுபோகச் செய்கைக் காணிகளை ஒதுக்கித் தருவதற்குக் குறித்த கமக்கார அமைப்பு முன்வரவில்லையெனவும் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக இதுதான் நடைபெறுகின்றது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

காலபோக நெற்செய்கையின் போது தமக்குரிய மானிய விதை நெல்லைச் சரியான முறையில் வழங்கவில்லையெனத் தெரிவித்த அவர்கள், பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்களின் பின்னரே பல்வேறு சிரமங்களின் மத்தியில் உரமானியங்களைப் பெற்றுக் கொண்டோம் என்றும் தொடர்ந்து மேற்படி அமைப்பால் தாங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவகின்றனர் என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-6)

# இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக விவசாயம் துரிதம்

கிளிநொச்சி,மே 5

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக விவசாயச் செய்கை வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின்கீழ் இவ்வாண்டு சுமார் பத்தாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிறுபோகச் செய்கைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட நிலப்பரப்புகளில் செய்கைகளை மேற்கொள்ளவுள்ள விவசாயிகள் தமது விவசாயச் செய்கைகளைத் துரிதகதியில் மேற்கொண்டு வருகின்றனர்.

இரணைமடுக் குளத்தின்கீழ் சுமார் பத்தாயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலும் கிளிநொச்சி, கரியாலை, நாகபடுவான் குளத்தின்கீழ் ஐந்நூறு ஏக்கர் நிலப்பரப்பிலும் புதுமுறிப்புக் குளத்தின் கீழ் அறுநூறு ஏக்கர் நிலப்பரப்பிலும் நெற்செய்கைகளை மேற்கொள்ள அனுமதித்துள்ளதுடன் கிளிநொச்சி, பிரமந்தனாறு குளத்தின் கீழ் சுமார் இருநூறு ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாண்டு சிறுபோகச் செய்கையில் சிறுதானியச் செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

போதிய நீர் உள்ளதால் விவசாயிகள் சிறுபோக விவசாயச் செய்கையில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றமையைக் காண முடிகின்றது. (க-6)

# மீளக்குடியமர்வதில் தாமதம்; துயரத்தில் புதுக்குடியிருப்பு மக்கள்

முல்லைத்தீவு,மே 5


இறுதிக்கட்டப் போரால் இடம்பெயர்ந்த புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த மக்களில் பெரும்பாலானோர் இன்னமும் மீளக் குடியமர்த்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை 7 ஆயிரத்து 666 பேர் மட்டுமே 6 கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்துள்ளனர். இன்னமும் 13 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 23 ஆயிரத்து 948 பேர் மீளக்குடியமரவில்லை.

முல்லைத்தீவு வளமானதொரு பிரதேசம் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். பல பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமராமையால் அவர்களின் வாழ்விடங்களில் எஞ்சி நின்ற வான்பயிர்களும் அழிவடைந்து வருகின்றன. ஆள்களில்லாத வீடுகளில் காணப்படும் கதவு, யன்னல், நிலை போன்றன சமூக விரோதிகளால் கழற்றிச் செல்லப்படுகின்றன. வேதனையையே தமது வாழ்வாகக் கொண்ட இந்த மக்களுக்கு இந்தச் சம்பவங்கள் மூலமாக மேன்மேலும் துயரமே அதிகரிக்கின்றது.

எனவே, தங்களை மேலும் துன்பத்தில் ஆழ்த்தாது தமது சொந்த இடங்களில் தம்மைக் குடியமர்த்துவதற்கு ஆவன செய்யுமாறு இவர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். (க)

## பணியாளர் ஒற்றுமை...



காத்திருக்கும் கணங்கள்: பேசாலை வைத்தியசாலையில் வைத்தியர் மற்றும் காவலாளி தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மன்னார் பொது வைத்தியசாலைப் பணியாளர்கள் அடையாள பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாத நிலையில் காத்திருக்கின்றனர். (601)

# கொள்ளையர் அட்டகாசம்; மக்கள் அச்சத்தில்

கிளிநொச்சி,மே 5

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை, பெரியகுளம் பகுதியிலுள்ள வீடுகளுக்குள் புகுந்த கொள்ளையர்கள் தங்க நகைகளை அபகரித்துச் சென்றதால் கிராம மக்கள் பயத்துடன் பொழுதைக் கழிப்பதாகத் தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் இரவு வேளையில் வெவ்வேறு நேரங்களில் இடம்பெற்றுள்ளது. முதலில் இரவு 7.30 மணியளவில் இராணுவச் சீருடையை ஒத்த உடைகளை அணிந்த 5 பேர் கொண்ட கொள்ளைக் கும்பல் வீடொன்றினுள் புகுந்துள்ளது. வீட்டிலிருந்தவர்களைக் கொச்சைத் தமிழில் அழைத்த கொள்ளையர்கள், தாம் படையினர் எனவும் வீட்டைச் சோதனையிட வேண்டும் எனவும் கூறி அவர்களை வீட்டு முற்றத்தில் இருத்தினர். பின்னர் வீட்டுக்குள் நுழைந்து பெறுமதி வாய்ந்த தாலிக்கொடியைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளையர்கள் இரும்புக் கம்பிகள், கத்திகள் போன்ற ஆயுதங்களை வைத்திருந்தனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இரண்டாவது சம்பவம் நள்ளிரவு ஒரு மணியளவில் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரின் வீட்டில் இடம்பெற்றுள்ளது. உள்ளாடை மட்டுமே அணிந்து வந்த கொள்ளையர், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரின் முகத்தில் மிளகாய்ப் பொடியை அள்ளித் தூவிவிட்டு அவர் அவஸ்தைப்படுவதைச் சாதகமாக்கி அவரது மனைவியின் தாலிக் கொடியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவங்களால் பீதியடைந்த கிராம மக்கள் செய்வதறியாது பயத்துடன் பொழுதைக் கழிக்கின்றனர் என்று தெரிய வருகின்றது.

தற்போது இந்தச் சம்பவங்கள் தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளன. (க)

## பாடசாலை கையளிப்பு

ஓமந்தை மத்திய மகாவித்தியாலயம் பாடசாலை நிர்வாகத்திடம் நேற்றுமுன்தினம் காலை இராணுவத்தினால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் பாவனையில் மிக நீண்ட காலமாக இருந்து வந்த இந்தப் பாடசாலை நேற்று முன்தினம் மு.ப.11 மணியளவில் வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜிடம் கையளிக்கப்பட்டது. மிக விரைவில் இந்தப் பாடசாலை இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-15)

### வட்டக்கச்சிக்கு வெளியே

# காளைகளைக் கொண்டுசெல்ல இராணுவம் அனுமதி மறுப்பு

முல்லைத்தீவு,மே 5

காளைமாடுகளை வட்டக்கச்சியிலிருந்து கிளிநொச்சிக்குக் கொண்டு செல்வதற்கு படையினர் அனுமதி வழங்க மறுத்தனர் எனக் கூறப்படுகின்றது.

சிறுபோக நெல்விதைப்பு வேலைகளின் பொருட்டு விவசாய நிலங்களைப் பண்படுத்துவதற்காகவே காளைமாடுகளை விவசாயிகள் வட்டக்கச்சியிலிருந்து கிளிநொச்சிக்குக் கொண்டு செல்ல முற்பட்டனர்.

ஆனால் படையினர் இதனைத் தடை செய்ததுடன் வட்டக்கச்சியை விட்டுக் காளைகளை வெளியே கொண்டு செல்ல வேண்டாமெனவும் கேட்டுள்ளனர். இதனால் விவசாயிகள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலவியதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை இந்தப் பிரதேசத்தில் கால்நடைகளைக் களவாக இறைச்சிக்காக வெட்டும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் இதைக் கட்டுப்படுத்துவதற்காகவே படையினர் இத்தகைய தடைகளை விதித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க)

# மன்னார்,மடு வலயப் பாடசாலைகளுக்கு இராணுவத்தால் கற்றல் உபகரணங்கள்

மன்னார்,மே 5

மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகள் மற்றும் அங்கு கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்வொன்றை இராணுவத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இராணுவத்தின் 542 ஆவது படைப்பிரிவினர் சர்வோதயம் அமைப்புடன் இணைந்து ஏற்பாடு செய்த மேற்படி நிகழ்வு முருங்கன் மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வு இராணுவத்தின் 542 ஆவது படைப் பிரிவின் கட்டளையிடும் அதிகாரி கேணல் விக்கும் லியனகே தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா கலந்து கொண்டார்,

மன்னார் மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆபேல் ரவல், சர்வோதய நிறைவேற்றுப் பணிப்பாளர் சுபசேன த சில்வா, மன்னார் சர்வோதய அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் யுகேந்திரன், இராணுவத்தின் வடமத்திய தளபதி பிரிகேடியர் லலித் அதிகாரி, விக்கும் லியனகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேற்படி நிகழ்வில் மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களைச் சேர்ந்த 57 பாடசாலைகளுக்கான பாடசாலை விளையாட்டு உபகாணங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு தெரிவு செய்யப்பட்ட 110 மாணவ மாணவிகளுக்குப் பாதணிகளும் வழங்கப்பட்டன.

சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என்று மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எ.ஆபேல் ரவல் தெரிவித்தார். (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு முதல்வருடன் ஐரோப்பிய ஒன்றியக் குழு சந்திப்பு

மட்டக்களப்பு,மே 5

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுப் புதன் கிழமை சந்தித்தது.

கிழக்கு மாகாணத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது, ஆராயப்பட்டதாக கிழக்கு மாகாண முதலமைச்சரின் ஊடக இணைப்பாளர் தேவராஜன் தெரிவித்தார்.



ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான திட்டத்தின் தலைவர் மில்லி வண்டனின் தலைமையில் இந்தக் குழு முதலமைச்சரைச் சந்தித்துள்ளது. (ச)

# கிழக்கு மாகாண பிரதம செயலரின் அலுவலகம் இடம் மாற்றப்பட்டது

திருகோணமலை,மே 5

கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் அலுவலகம் கடந்த திங்கட்கிழமை முதல் திருகோணமலை கிண்ணியா வீதி, வரோதய நகரில் அமைந்துள்ள கட்டடப் பிரிவுக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாக அலுவலகம், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் என்பனவும் அந்தக் கட்டடத் தொகுதியிலேயே இயங்கி வருகின்றன.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் ஏனைய பிரதிச் செயலாளர் அலுவலகங்களும் கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகமும் அங்கு இடமாற்றப்படவுள்ளன என கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் வீ.பி.பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த அலுவலகங்கள் யாவும் இதற்கு முன்னர் திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மேதினக் கூட்டங்களால் தொழிலாளருக்கு நன்மையில்லை; அரசியல்வாதிகளின் அபிலாஷைகளுக்கே முன்னுரிமை

## தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் தெரிவிப்பு

நுவரெலியா,மே 5

மலையகத்தில் நடைபெறுகின்ற மேதினக் கூட்டங்களால் தொழிற்சங்கவாதிகளுக்கோ, தொழிலாளர்களுக்கோ, தொழிற்சங்கங்களின் குரலுக்கோ முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. அரசியல்வாதிகளின் அபிலாஷைகளுக்கேற்பவே மேதினப் பேரணிகளும், கூட்டங்களும் நடத்தப்படுகின்றன.

இந்த உண்மையை தொழிலாளர்கள் எப்போது உணர்ந்து உரிமைக்கு குரல் கொடுக்கும் மேதினமாக முன்னெடுக்கின்றார்களோ அன்றுதான் உண்மையான மேதினமாகும். இவ்வாறு தெரிவித்தார் தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் டி.அய்யாத்துரை .

ஹற்றன் தலைமைச் செயலகத்தில் உத்தியோகத்தர்கள், அமைப்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மலையகத்தில் நடைபெறுகின்ற மேதினக் கூட்டங்களில் மேதினத்தின் மகிமை, வரலாறு, தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிப் பேசப்படுவதில்லை. தொழிலாளர்களின் உணர்வுகளை - உணர்ச்சிகளை மழுங்கடிக்கும் விதத்தில் அரசியல்வாதிகள் தங்களுடைய அதிகார பலத்தை - சக்தியை வெளிபடுத்தும் விதமாகவே மேதினக் கூட்டத்தை நடத்துகின்றனர்.

இன்றைய மலையக மேதினக் கூட்டங்களில் இரண்டு விதமான உறுதிமொழிகளை அரசியல்வாதிகள் வழங்குகின்றனர். தொழிலாளர்களின் உணர்வுகளுக்கேற்ப கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் நியாயமான சம்பள உயர்வைப் பெற்று கொடுப்போம் என்று ஒரு சாராரும்,

நியாயமான சம்பள உயர்வு கிடைக்காவிட்டால் போராடுவோமென்று இன்னொரு சாராரும் மேடைகளில் முழக்கமிடுகிறார்கள். இந்த உறுதி மொழிகளால் நியாயமான சம்பள உயர்வு கிடைக்குமென்று தொழிலாளர்கள் நினைத்திருப்பார்கள்.


கடந்த வருடம் மேதினத்திலும் இத்தகைய உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. அந்தச் சமயத்தில் கூட்டு ஒப்பந்தம் செய்யுமுன் தொழிற்சங்கங்களோடு கலந்துரையாடி சம்பள உயர்வைத் தீர்மானிக்க வேண்டும் என்ற கோரிக்கையை கூட்டு ஒப்பந்த அணியினர் புறக்கணித்துவிட்டு தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சு நடத்தினர்.

இறுதியில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் மூன்று அணியினரும் வெவ்வேறு வகையான முடிவோடு இறுதிமுடிவை எடுக்க முடியாமல் தனித்தனியாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இதனால் ஏற்பட்ட பலவீனத்தை தோட்ட நிர்வாகங்கள் தங்களுக்கு சாதகமாக்கி கூட்டு ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் மாறுப்பட்ட கொள்கையைக் கடைப்பிடித்து கூட்டு ஒப்பந்தத்தைப் பலவீனமடையச் செய்தார்கள்.


இந்த முறையும் கூட்டு ஒப்பந்தம் செய்யும் முன்பு சகல தொழிற்சங்கங்களோடும் ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டு ஒருமித்த சம்பளத் தீர்மானத்தை முன்னெடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளைப் புறக்கணித்து சம்பளப் பேச்சு நடைபெறுகிறது.

எனவே, தொழிற்சங்கங்களின் கோரிக்கையான, நிபந்தனைகள் இல்லாத சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். ஒப்பந்தம் செய்யும் முன்பு சகல தொழிற்சங்கங்களோடும் கலந்துரையாடி நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க வழிகான வேண்டும் என்ற கோரிக்கைகளை இந்தத் தருணத்தில் விடுக்கின்றேன் - என்றார். (ச)


இம்முறை போகத்தை சிறப்பாக உழுவதற்கு
டிமோவிடமிருந்து
தரமான உழவு உபகரணங்கள்.



தட்டைக் கலப்பை
ரு.65,000/-



ஒன்பது கொக்கியுடைய கலப்பை
ரு.55,000/-



சேற்றுச் சில்லு
ரு.32,500/-

மூன்று உபகரணங்களுக்கு மேல் கொள்வனவு செய்யும் போது விசேட தள்ளுபடி!

(இப்புகைப்படங்களில் காண்பிக்கப்பட்டுள்ள உபகரணங்கள் மாதிரிகளேயாகும்.)

dimo TECHNOLOGY
உன்னத எதிர்பார்ப்பு
கிறுவன பதிவிலக்கம்: PQ146

வரையறுக்கப்பட்ட டீசல் மற்றும் மோட்டார் என்ஜினியரிங் பகிரங்க கம்பனி
உழவு உபகரணப் பிரிவு, கிரிந்தவலை வீதி, வெளிவேரிய. தொ.பே / பக்ஸ்: 033 4674616 வெப்: www.dimolanka.com

வட மாகாணம் - வவுனியா / மன்னார் / கிளிநொச்சி / யாழ்ப்பாணம் தொ.பே: 0773 540966, 0772 011545
கிழக்கு மாகாணம் - மட்டக்களப்பு தொ.பே: 0777 373683, அம்பாறை தொ.பே: 0772 011552, திருகோணமலை தொ.பே: 0773 633867
வடமேல் மாகாணம் - குருநாகல் / புத்தளம் தொ.பே: 0777 373768

mel ads

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.அறிக்கையை ஆதரித்தால் புலிகள்; எதிர்த்தால் சிங்கங்களா

## அரசின் கொள்கை இதுதான் என்கிறார் அரியநேத்திரன்

மட்டக்களப்பு, மே.5

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கையை ஆதரித்தால் புலிகள்; எதிர்த்தால் சிங்கங்கள் என்ற நிலைப்பாட்டில் தான் இன்று இலங்கை அரசு மக்களைப் பார்க்கின்றது. நியாயத்தின் பக்கம் நிற்பவர்களைப் புலிகள் என்றுதான் அரசு பார்க்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் .

மட்டக்களப்பு தேத்தாத்தீவு உதயன் விளையாட்டுக் கழகம் நடத்திய கலாசார விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:

அண்மையில் இலங்கை அரசின் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளின் ஆதரவுச் சக்தி என்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை ஆதரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டதன் காரணமாகவே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

தற்போது ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை ஆதரித்தால் புலிகள்; எதிர்த்தால் சிங்கம் என்ற அடிப்படையிலேயே அரசு மக்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் ஒரு கடப்பாடு இருக்கின்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலாக இருந்தாலும் சரி அல்லது இரண்டு மாதங்களுக்கு முதல் நடந்த உள்ளூராட்சித் தேர்தலாக இருந்தாலும் சரி வடக்கு, கிழக்கு மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத்தான் ஆதரித்திருக்கின்றார்கள்.

இவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களுக்கு ஓர் அரசியல் தீர்வைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையில் தான் வாக்களித்திருக்கின்றார்கள். இந்த அடிப் படையில்தான் ஐந்து சுற்றுப் பேச்சுக்களை அரசுடன் நடத்தியுள்ளோம். ஆனால், இந்த ஐந்து சுற்றுப் பேச்சுக்களின் விவரங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிடவில்லை என்கின்ற விமர்சனங்களும் வெளிவரத் தான் செய்கின்றன.

உண்மையில் நாங்கள் இந்தப் பேச்சுக்களின் ஊடாக ஓர் அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும் தமிழ் மக்களுக்கு நிரந்தர சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையிலும்தான் அரசுடன் பேச்சு நடத்தி வருகின்றோம்.



வெறுமனே தமிழ் மக்களின் உரிமைகளையோ அல்லது தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய ஆதரவையோ உதாசீனம் செய்து செயற்படுவதற்கு நாங்கள் எந்தவகையிலும் தயாராகவில்லை என்பதைக் கெஹலிய ரம்புக்வெல போன்ற அமைச்சர்கள் புரிந்து கொள்ள வேண்டும் -என்றார். (ச)

# பொதுக் கழிவறைகளில் தண்ணீர் இல்லை; மக்கள் அவதி

நுவரெலியா,மே 5

நுவரெலியா நகரிலுள்ள பொதுக் கழிவறைகளில் போதிய தண்ணீர் வசதியில்லை என விசனிக்கப்படுகின்றது.

தற்போது நுவரெலிய வசந்த காலக் கொண்டாட்டங்களை முன்னிட்டு பெருந்திரளான உள்ளூர், வெளியூர் உல்லாசப் பயணிகள் வருகை தருகின்றனர்.

இரவு நேரங்களில் இங்குள்ள பொதுக்கழிவறைகளுக்குச் செல்வோர் அங்கு தண்ணீர் வசதியில்லாததால் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து சீரான தண்ணீர் விநியோகத்தை வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (ச)

# நோர்வூட் நகரின் குறைபாடுகள் தீர்க்கப்படுமா?

நுவரெலியா,மே 5

புதிய அம்பேகமுவ பிரதேச சபை நோர்வூட் நகரில் நிலவும் பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த பத்து வருடகாலங்களாகமாக நோர்வூட் நகரின் பொது வசதிகள் கவனிக்கப்படாமல் இருந்துவந்தமை குறித்து விசனம் தெரிவிக்கும் மக்கள் புதிய சபையின் தலைமைத்துவம் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோருகின்றனர்.

நகரிலுள்ள மலசலகூடம், வீதிகள், பாலங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள் ஆகியவற்றை விருத்தி செய்வதுடன், வெள்ள அபாயநிலையைக் கட்டுப் படுத்தும் வண்ணம் நகரின் வடிகான் அமைப்பைப் பராமரிப்பதும் அவசியம்.

இந்த வேலைகள் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர்களினூடாகத் தகவல் பெற்று அதற்கான சிறந்த நிவாரணங்களைப் பெற்றுத் தருமாறு மக்கள் கோருகின்றனர். (ச)

# சிவனொளி பாத மலையில் பொலித்தீன் தடை உதாசீனம்

நுவரெலியா,மே 5

சிவனொளிபாதமலையிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் யாத்திரிகர்கள் அதனை உதாசீனம் செய்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


இதனால் சுற்றுச் சூழல் மாசடைந்துள்ளதுடன் தொற்று நோய்கள் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் சிவனொளிபாதமலையின் ஒரு பகுதியில் மண் சரிவு ஏற்பட்டது. அதற்கு காரணம் பொலித்தீன் பாவனையே எனக் கூறப்பட்டது.

அதன் பின்னர் சிவனொளிபாதமலைக்கு பொறுப்பான தேரர் ஹந்தபான்ஹொடவும், நுவரெலியா அரச அதிபர் டி.பி.ஜீ.குமாரசிறியும் மேற்கொண்ட தீர்மானப்படி பொலித்தீன் பாவனையை முற்றாக இல்லாதொழிக்கும் வகையில் பல இடங்களிலும் அறிவுறுத்தல் பதாகைகள், அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப் பட்டன. இவை நடைமுறைக்கு சாத்தியமில்லாது போயுள்ளதாக விசனிக்கப்படுகின்றது.

எனவே, இவ்வாறு சூழலுக்கு மாசு ஏற்படுத்துவோரைக் கண்டறிந்து சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என இங்குள்ள வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

## ஆர்ப்பாட்டம்.....



ஐ.நா.பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் அறிக்கைக்கு எதிராக திருகோணமலை மொரவெவ பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக கையெழுத்து வேட்டையிலும் ஈடுப்பட்டனர். (ச)

# வடிகான்களைத் துப்புரவு செய்யாத முதல்வர் மீது நடவடிக்கை எடுங்கள்

## மட்டு. மாநகரசபை ஐ.தே.உறுப்பினர் வலியுறுத்து

மட்டக்களப்பு, மே 5

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் வீதிகளில் குப்பை போடும் பொதுமக்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கும் பொலிஸார், வடிகான்களைத்துப்புரவு செய்யாது டெங்கு நுளம்பு பெருகக் காரணமாக இருக்கும் மாநகர முதல்வரையும் உறுப்பினர்களையும் எப்போதாவது கைது செய்து சட்ட நடவடிக்கை எடுப்பார்களா? என ஐக்கிய தேசியக் கட்சியின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ரி.மாசிலாமணி கேள்வி எழுப்பி யுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு :

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் வீதியில் குப்பை போட்டவர்கள் பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். குப்பை போட்டமைக்காக பொது மக்களைக் கைது செய்ய முடியுமென்றால் மாநகரசபை எல்லைக்குள் நுளம்பு பெருகக் காரணமாக இருக்கும் மாநகர முதல்வரையும் உறுப்பினர்களையும் ஏன் பொலிஸார் கைது செய்ய முடியாது?

மட்டக்களப்பு மாவட்டத்தின் வீதி அபிவிருத்திப் பணியின் போது வடிகான்கள் அமைக்கப் பட்டன. மாநகர எல்லைக்குள் அமைக்கப்பட்ட வடிகான்களில் அவை அமைக்கும்போது போடப் பட்ட கல், மண், ஏனைய பொருள்கள் இதுவரை மாநகர சபையால் துப்புரவு செய்யப்படவில்லை. இதனால் வடிகான்களில் இருந்து நீர் வடிய முடியாமல் தேங்கியுள்ளது. இதனால் நுளம்புகள் பெருகிக் காணப்படுகின்றன. துர்நாற்றமும் வீசுகின்றது.

இவ்வாறு டெங்கு நுளம்பு பெருகவும் சூழல் மாசடையவும் காரணமாக இருக்கும் மாநகர மேயரையும் அதன் உறுப்பினர்களையும் கைது செய்து முதலில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை பொலிஸார் செய்வார்களா? - என்று அவர் கேள்வி எழுப்பினார். (ச)

# கிழக்கில் தெங்கு உற்பத்தி விஸ்தரிக்கப்பட வேண்டும்

திருகோணமலை,மே5

கிழக்கில் தெங்கு உற்பத்தி விஸ்தரிக்கப்பட வேண்டும். இந்த வருடம் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் எமது மாகாண மக்களின் அன்றாட தொழில்களான மீன்பிடி, விவசாயம், சிறு கைத் தொழில் ஆகியன முற்றாகப் பாதிப்படைந்த நிலையில் எமது மாகாணத்தின் பொருளாதாரமும் பின்னடைவைச் சந்தித்துள்ளது .

இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண விவசாய, கால் நடை அமைச்சர் து.நவரெட்ணராஜா.

விவசாய அமைச்சின் இணைப்புச் செயலாளர் எஸ்.சசிகுமார் தலைமையில் திருகோணமலை அமைச்சின் கேட்போர் கூடத்தில் கிழக்கு மாகாணத்தில் தெங்கு உற்பத்தியை விருத்தி செய்யும் திட்டமிடல் கலந்துரையாடலில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்த வருடம் ஏற்பட்ட வெள்ள அழிவின்போது எமது மாகாண மக்களின் நாளாந்த வருமானம் முற்றாகப் பாதிப்படைந்துள்ளது. இனிவரும் காலப் பகுதியில் ஏற்படும் இவ்வாறான அனர்த்தங்களுக்கு நாம் எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றோம்? என்ற கேள்வியையும் சபைமுன் அமைச்சர் எழுப்பினார்.

இன்று கிழக்கு மாகாணத்தில் தேங்காய் ஒன்று 40 ரூபா முதல் 50 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் தெங்கு உற்பத்திக்குச் சாதகமான மண் வளம் அதிகமாக உள்ளது - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவின் வழக்கைக் கண்காணிக்க சர்வதேசக் குழு இலங்கைக்கு அனுப்பப்படும்

## ஐ.தே.கட்சி நம்பிக்கை

கொழும்பு, மே 5

சரத் பொன்சேகாவின் வழக்கு விசாரணைகளைக் கண்காணிப்பதற்காக சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியம் சர்வதேச கண்காணிப்புக் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பும் - என்று ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த மாதம் பனாமாவில் இடம்பெற்ற சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்களின் 124 ஆவது கூட்டத்தில் நானும், திஸ்ஸ அத்தநாயக்கவும் கலந்து கொண்டோம்.

சரத் பொன்சேகாவின் மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பான விவரங்களை நாம் அந்தக் கூட்டத்தில் முதலில் சமர்ப்பித்தோம்.

இங்கு சரத் பொன்சேகாவுக்கு எதிராக இடம்பெற்றுக்கொண்டிருக்கும் வழக்கு விசாரணைகளைக் கண்காணிப்பதற்காக சர்வதேச குழு ஒன்றை இங்கு அனுப்புமாறு நாம் சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்திடம் கோரிக்கை விடுத்தோம். அந்தக் கோரிக்கைக்கு இணங்க அக்குழு இங்கு அனுப்பப்படும் என்று நாம் நம்புகிறோம்.

இதைவிட நாடாளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹந்துன்நெத்தி யாழ்ப்பாணத்தில் தாக்கப்பட்டமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் துப்பாக்கித் தாக்குதலுக்கு உள்ளானமை, விஜித ஹேரத் மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் தாக்கப்பட்டமை தொடர்பான விவரங்களையும் நாம் அங்கு சமர்ப்பித்தோம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மகேஸ்வரன் மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரின் கொலைகள் தொடர்பான விசாரணைகள் மந்தமாக இடம்பெறுகின்றமை தொடர்பாகவும் நாம் அங்கு முறைப்பாடு செய்தோம் - என்றார். (சி)

# அடுத்து மின் கட்டணமும் உயரும் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, மே 5

எரிபொருள்கள், கோதுமை மா மற்றும் பால்மா ஆகியவற்றின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து மின் கட்டணமும் அதிகரிக்கப்பட உள்ளது என்று கூறினார் ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:

எரிபொருள்களின் விலையேற்றத்தைத் தொடர்ந்து கோதுமை மாவின் விலையும் அதிகரிக்கப்பட்டது. ஆனால், விலையை அதிகரித்த நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடர உள்ளதாக அரசு கூறியது. ஆனால் இதுவரையும் அவ்வாறு செய்யவில்லை.

இப்போது பால் மா வகைகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் பால் மா நிறுவனங்கள் கேட்டதைவிடக் குறைவாகவே விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் ஜோன்ஸன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

அமைச்சரின் இந்தக் கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. அனைத்தையும் மக்களின் மீது திணித்து அரசு விடுதலை பெற முயற்சிக்கின்றது. இதனைத் தொடர்ந்து மின் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளன. இதன்மூலம் பெறப்படும் பணத்தை அரசு தனது வீண் விரயத்துக்குப் பயன்படுத்துகின்றது. எந்தப் பணமும் மக்கள் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படுவதில்லை- என்றார். (ச)

## மேதினப் பேரணி.....



மேதினத்தன்று கொழும்பு மாநகரசபை வளாகத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேரணியில் கட்சியின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் அங்கஜன் இராமநாதன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (வ)

# ஐ.தே.கவின் தேசிய அமைப்பாளராக ரவி கருணாநாயக்க எம்.பி.நியமனம்

கொழும்பு, மே 5

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளராகக் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

புதிய யாப்பின் பிரகாரம் ஐ.தே.கவின் முதலாவது செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவில் கூடியது.

தேசிய அமைப்பாளர் பதவி உட்பட மேலும் சில பதவிகளுக்காக உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் நோக்குடனேயே செயற்குழு நேற்று முன்தினம் கூடியது. இதன்போதே தேசிய அமைப்பாளராக ரவி கருணாநாயக்கவை கட்சிச் செயற்குழுவினர் தெரிவு செய்தனர்.

அத்துடன், மகளிர் மற்றும் இளைஞர் பிரிவுகளுக்கான தலைவர்களும், மாவட்ட அமைப்பாளர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச)

# எழுத, வாசிக்கத் தெரியாத கைதிகளுக்கு வகுப்புக்களை நடத்துவதற்குத் தீர்மானம்

கொழும்பு, மே 5

சிறைக்கைதிகளில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு பாட வகுப்புக்களை நடத்துவதற்கு சிறைச்சாலைகள் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கு கல்வி அமைச்சின் ஒத்துழைப்புக் கிடைத்துள்ளது என சிறைச்சாலைகள் புனரமைப்பு மற்றும் புனருத்தாரன அமைச்சர் சந்திரசிரி கஜதீர கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார்.

அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு :

சிறைக்கைதிகளில் 15 சதவீத மானவர்களுக்கு அறவே கல்வி அறிவு இல்லை. எனவே அவர்களுக்கு அடிப்படைக் கல்வியைப் போதிக்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கைதிகளில் பலர் வெவ்வேறு துறைகளில் வல்லமை கொண்டவர்கள். அவர்களைத் தேர்ந்தெடுத்துத் தொழில் பயிற்சிகளையும் வழங்கவுள்ளோம்.

அம்பேபுஸ்ஸ, பள்ளன்சேன, ஆணையிறவு முகாம்களில் உள்ள இளைஞர் - யுவதிகளின் திறமைகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். எமது இந்தத் திட்டத்திற்கு இளைஞர் விவகார அமைச்சின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது -என்றார். (ச)

# இம் முறை 22,500 மாணவர்களுக்கு பல்கலை அனுமதி வழங்கத் திட்டம்

கொழும்பு, மே 5

இந்த முறை சுமார் 22 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு பல்கலைக் கழக அனுமதி வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மீள் திருத்தத்திற்கான பெறுபேறுகள் கிடைக்கப்பெற்ற இரண்டு வாரங்களுக்குள் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியை வழங்கிய பின் காணப்படும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய முடியாமையால் சிக்கல்கள் தோன்றுகின்றன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலதாமதத்திற்குப் பின்னர் பல்கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிக்க விரும்பாமை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் பல்கலைக்கழகங்களின் நாட்டம் காணப்படாமை ஆகியவையே இந்தப் பிரச்சினைக்கு முக்கிய காரணங்கள் என்றும் பேராசிரியர் தெரிவித்துள்ளார். (ச)

# திட்டமிடலின்றி அப்பியாசப் புத்தகங்கள் அச்சடிப்பு; அரச கூட்டுத்தாபனத்துக்கு ரூபா 2 கோடி நஷ்டம்

## கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, மே 5

சரியான நிர்வாகம் இன்றியும் திட்டமிடலின்றியும் அப்பியாசக் கொப்பிகளை அச்சடித்ததன் மூலம் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்துக்கு 2009ஆம் ஆண்டில் சுமார் இரண்டு கோடி ரூபா வரை நட்டம் ஏற்பட்டுள்ளது என கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தக அச்சடிப்புகளுக்காகக் கொள்வனவுக் கட்டளைகளைச் சமர்ப்பித்திருந்த சில நிறுவனங்களுக்குச் சரியான முறையில் சேவை செய்யத் தவறியதால் சுமார் 4 லட்சம் ரூபா தண்டப் பணமாகச் செலுத்தப்பட்டுள்ளது.

அதே வருடத்தில் விநியோகிக்கப்பட்ட 29 லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்களில் பதிக்கப்பட்டிருந்த கம்பிகள் கறல் பிடித்திருந்ததால், அவை திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

பொலிஸ் திணைக்களம் ஒப்படைத்த வேலையை நிறைவேற்றுவதற்குத் தாமதம் ஏற்பட்டதால், ஒரு லட்சத்து 31ஆயிரத்து 955 ரூபாவைத் தண்டப் பணமாகச் செலுத்த வேண்டியும் ஏற்பட்டது எனவும் கணக்காய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பான் கீ மூனை பகைக்க பிரயத்தனம் செய்யாதீர்

## பேராசிரியர் தயான் ஜயத்திலக எச்சரிக்கை

கொழும்பு, மே 5

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தைப் பகைத்துக் கொள்வதற்குப் பிரயத்தனம் செய்ய வேண்டாம் என பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவரும், யுனெஸ்கோ அமைப்பின் நிரந்தர பிரதிநிதியுமான பேராசிரியர் தயான் ஜயத்திலக அரசை எச்சரித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கைக்கே எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நிபுணர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பொய்யானவை எனவும், நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவன எனவும் அது தொடர்பில் விரிவாக ஆராய்ந்து அதனை நிராகரிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும், தற்போது நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஊடாகச் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை தனிமையாக்கப்படக் கூடுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தூர் பஞ்ஞசீக வித்தியாலயத்தில் அண்மையில் யாழ். கல்வி வலய முறை சாராக் கல்விப் பிரிவினரால் மனை முகாமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் மாணவி ஒருவர் மங்கள விளக்கேற்றுகிறார். பாடசாலை அதிபர் கு.ரவீந்திரன், செயற்றிட்ட உத்தியோகத்தர் எஸ்.சிவானந்தன், அபிவிருத்திச் சங்கச் செயலர் ஆர்.ரவீந்திரன் ஆகியோர் நிற்கின்றனர்.

# விவசாயத் துறையின் அபிவிருத்தியை புறக்கணித்து வருகின்றது அரசு

யாழ்ப்பாணம்,மே 5

விவசாயிகளது பிரச்சினைகளைக் கருத்தில் எடுக்காமலும் அந்தத் துறையின் அபிவிருத்தியைப் புறக்கணித்து வருகிறது அரசு என்று விவசாயக் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் செயலாளர் இலகுநாதன் தெரிவித்தார்.

யாழ். நகரில் தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்த மேதினக் கூட்டத்தில் வடபகுதி விவசாயிகள் சார்பாக உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:

உள்ளூர் உற்பத்திகள் சார்ந்த துறைகள் அனைத்தும் இந்த அரசால் திட்டமிட்ட முறையில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் விவசாயிகள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பிரச்சினைகளுக்கு அரசால் உரிய முறையில் தீர்வைப் பெற்றுத் தர முடியவில்லை. இதன் காரணமாகவே விவசாய அபிவிருத்தி பாதிக்கப்பட்டுள்ளது- என்றார்.

கூட்டுறவு ஊழியர் சமாசத் தலைவர் செல்வக்குமார் உரை நிகழ்த்தும் போது தெரிவித்தவை வருமாறு:

சங்கங்கள் நட்டத்தில் இயங்குவதாகக் காரணம் கூறி அரசின் வேதன அதிகரிப்பு கூட்டுறவுப் பணியாளர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் சங்கங்களில் பணியாற்றும் நிரந்தரப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வேதனம் போதுமானதாக இல்லை. எனவே, சங்கப் பணியாளர்களுக்கு அரசு உதவ வேண்டும்.-என்றார்.

இந்தக் கூட்டத்தின் போது பல்வேறு துறைகளைச் சார்ந்த அரச பணியாளர்கள் பலரும் உரைகளை நிகழ்த்தினர். அவர்கள் அரசுடன் சேர்ந்து இயங்கும் அரசியல் கட்சிகளுடன் தொடர்புள்ளவர்களுக்கே பதவி உயர்வுகள், சலுகைககள், முன்னுரிமைகள் அளிக்கப்படுகின்றன. இதன் காரணமாகத் தாம் பாதிக்கப்படுகிறோம் என்று தெரிவித்தனர்.

அண்மையில் பாடசாலை ஒன்றின் அதிபர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களது வீடுகளுக்குச் சென்று அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் அந்த விண்ணப்பத்தை வாபஸ் பெறுமாறும் மிரட்டியுள்ளனர். இவ்வாறான அசிங்கமான செயல்கள் பல அரங்கேறியுள்ளன எனவும் அரச பணியாளர்கள் தெரிவித்தனர்.(எ-14-4)

# தமிழினப் படுகொலையை சீனா, ரஷ்யா நியாயப்படுத்துவதை ஜீரணிக்க முடியாது

யாழ்ப்பாணம்,மே 5

அடக்குமுறைக்கு உட்பட்ட மக்களின் நலன்கருதி போராட்டங்களை முன்னெடுத்த சோசலிச நாடுகளான சீனா,ரஷ்யா போன்ற நாடுகள் இலங்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலையை நியாயப்படுத்த முயல்கின்றமை மனவேதனையை அளிக்கின்றது எனத் தமிழரசுக் கட்சியின் இணைப் பொருளாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித் தார்.

யாழ். நகரில் தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்த மேதினக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வன்னியில் இறுதி யுத்தத்தின் போது படையினரின் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் அதிகம் இடம்பெற்றமையை ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கை தெளிவுபடுத்தி உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், இலங்கை அரசுக்கு ஆதரவாக- இலங்கை அரசைப் பாதுகாக்கும் விதமாக- இந்தியா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் நடந்துகொள்கின்றன.

அடக்கப்படும், ஒடுக்கப்படும் சமூகம் ஒன்றுக்காகப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த இந்த இரண்டு சோசலிச நாடுகளும் இலங்கையில் அடக்கி ஒடுக்கப்படும் தமிழினத்துக்கு நேர்ந்த அநீதியை நியாயப்படுத்தும் விதமாக நடந்து கொள்வது ஜீரணிக்க முடியாதுள்ளது.

தமிழினப் படுகொலை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு அவசியமானது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச மத்தியஸ்தத்துடன்- தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன்- இலங்கை அரசு பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதனையே ஐ.நா. சபையின் நிபுணர் குழு அறிக்கை தெளிவுபடுத்துகிறது.

மே தினத்தைக் கொண்டாடும் உரிமை தமிழரசுக் கட்சிக்கே உரியது. தமிழரசுக் கட்சியின் அடிப்படையே சோசலிச பொருளாதாரக் கொள்கை ஆகும். கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்திலேயே இந்த விடயம் தெளிவுபடுத்திக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய இனத்தின் அழிப்பை நியாயப்படுத்தும் விதமாக ஐ.நா அறிக்கைக்கு எதிராக மே தினத்தை அரசு கொண்டாடு வது கண்டிக்கப்பட வேண்டும்.- எனவும் கூறினார். (எ-14-04)

# மக்களுக்கு வழங்கும் சேவைகளுக்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்

யாழ்ப்பாணம்,மே 5

சமூகத் தொண்டு நிறுவனங்கள் பொதுமக்களுக்காக வழங்கும் சேவைகளுக்குச் சகல தரப்பிலும் ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டும். அத்துடன் அதனை ஊக்குவிக்க வேண்டியதும் அவசியமானதாகும்.

தனிப்பட்ட ஒருவரின்நிதி அல்லது அனைவரதும் ஒத்துழைப்புகளுடன் சமூகத் தொண்டு நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் பாராட்டப்படக் கூடியவையாகும்.

இவ்வாறு யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் கண் சிகிச்சை பெற்ற பயனாளிகள் தெரிவித்தனர்.

யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற கண்சிகிச்சை முகாமில் கட்றக் அறுவைசிகிச்சைக்காகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் புத்தளம் வைத்திய சாலைக்குச் சென்று சிகிச்சை முடித்துத் திரும்பினர்.

அவர்களுக்கான வரவேற்பு நிகழ்வை யாழ்.வணிகர் கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் பயன்பெற்ற பயனாளிகள் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

அனைத்து இன மக்களும் பயன்பெறவேண்டும் என்னும் நோக்கில் சவூதி அரேபியாவிலிருந்து இந்தக் கண் சிகிச்சையை ஒழுங்கு செய்த நிறுவனத்துக்கு எமது நன்றிகள்.

இவ்வாறு மக்களுக்குப் பயனுள்ளதாக மனிதாபிமானமிக்க உதவிகள் வழங்கும் தொண்டு நிறுவனங்கள் எப்போதும் வரவேற்கப்பட வேண்டியவை.

தமது வருமானங்களைக் கருத்தில் கொண்டு யாழ்.மாவட்டத்தில் நோய்களின் தாக்கங்களுக்கு உட்பட்டு சிகிச்சை பெற முடியாமல் இருக்கும் பயனாளிகளுக்கு இது பெரிதும் கை கொடுக்கும்- என்றார். (ம-313)

## நிர்வாகிகள் தெரிவு

வண்ணை,மே5

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கப் பொதுக் கூட்டம் கடந்த மாதம் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது இந்த வருட நிர்வாகிகளும் தெரிவு செய் யப்பட்டுள்ளனர்.

காப்பாளர்- த.பரமலிங்கம், தலைவர்- அ.அல்பேட், உபதலைவர்- வீ.சிறிராசன், செயலாளர்- செ.ஸ்ரீராஜன், உபசெயலாளர்- கி.இரத்தினராசா, பொருளாளர் சி.அ.சிவலிங்கம்.

நிர்வாகசபை உறுப்பினர்கள்- த.இராசதுரை, யோ.ராஜா, ந.பிரபா, பொ.செல்வம், மா.ரமேஸ், தே.நிரோ, ச.குணம், க.சதீஷ், சி.சிவநேசன், நோ.கணேசரெட்ணம், தி.சுதன், ப.உதயன், வே.குமார், க.ஜீவகன். (ஐ-160)

* * *

வரணி,மே5

வரணி வடக்கு கும்பிட்டான் புலம் ஆலயத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த மாதம் இந்து சமய விவகார இணைப்புச் செயலாளர் இராமச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது புதிய நிர்வாக சபையின் தலைவராக சி.குமாரகுலசிங்கம், உபதலைவராக க.முத்துச்சர்மா, செயலாளராக க.தியாகராசா, உபசெயலாளராக மு.நடேசன், பொருளாளராக வீ.கிருபானந்தமூர்த்தி ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக க.நடராசா, கா.காங்கேசு, பொ.பரமேஸ்வரன், ந.பஞ்சாட்சரலிங்கம், இ.குமாரசாமிக்குருக்கள், த.யோகேஸ்வரன், க.நாகராசா, சி.சின்னயா, ந.ஸ்ரீஸ்கந்தராசா, தா.பாலசுப்பிரமணியம், க.சிவபாலசற்குணம், மு.கிருஸ்ணர், ந.செல்வநாயகி, சி.மகேஸ்வரி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-313-122)

## மாணவர் கௌரவிப்பு

வடமராட்சி,மே5

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களில் 5 ஆம் தரப் புலமைப்பரிசில், ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை ஆகிய வற்றில் சித்தியடைந்தோருக்கும் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவானோருக்கும் ஊக்குவிப்பு, பாராட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நெல்லயடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத் திருமண மண்டபத்தில் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்ஜ பணிப்பாளர் வ.செல்வராசாவும் கலந்து கொள்வர். (ம-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:**
பிறரின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலரிடம் வம்பு பேசி அவர்களுக்கு எரிச்சல் உண்டாக்கலாம். பொழுதுபோக்கு விடயங் களுக்காக கணிசமான பணத்தை செலவு செய்வீர் கள். மற்ற வர்களைப் பார்த்து சில விடயங்களில் ஆதங்கம் அடைவீர்கள்.

**இடபம்:**
சோர்வின்றி, சுறுசுறுப்பு உற்சாகமாகச் செயற்படு வீர்கள். பல நாள்களாக நிறுத்தி வைத்த வேலை ஒன் றைச் செய்வீர்கள். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்கள் மூலம் முடித்துக் கொள்வீர்கள். கையில் பணப்புழக்கம் அதி கரிக்கும்.

**மிதுனம்:**
மற்றவர்கள் செய்த தவறு ஒன்றால், நீங்கள் சிர மங்கள், அலைச்சல்களுக்கு ஆள்படலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சொந்த பந்தங்களிடம் கௌரவம் பார்த்து நடந்து கொள்வீர்கள். புதியவர்கள் சிலர் உங்களைத் தேடி வரலாம். தர்ம, புண்ணிய காரியம் செய்வீர்கள்.

**கடகம்:**
மனதிற்கு சந்தோஷம் தரும் செய்தியைக் கேட்கலாம். உறவுப் பெண்கள் சிலர் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். நண்பர்கள் மூலம், அவர்களுக்குத் தெரிந்த ஒருவர் அறிமுகமாகலாம். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். சில வேலைகளைத் தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள்.

**சிங்கம்:**
எதிர்ப்புகளை முறியடித்து எதிலும் வெற்றி பெறும் நாள். ஓய்வு எடுக்க நினைத்தாலும் முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகளை எதிர்கொள்ளலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கடந்த காலத் தில் ஒருவர் செய்த உதவியை நினைத்துப் பார்ப்பீர்கள். பிள்ளை களின் நீண்ட நாள் ஆசை ஒன்றை நிறைவேற்றி வைப்பீர்கள்.

**கன்னி:**
உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் நீங்கள் சொல்வதை கேட்காமல் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படலாம். நண்பர்களுடன் சேர்ந்து வெளி யிடங்களுக்குச் செல்லலாம். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். மருத்துவச் செலவுகள் நேரலாம்.

**துலாம்:**
ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். அயலாரின் விமர்சனங்களுக்கு ஆள் படலாம். உறவினர்களுடன் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தைக் கழிப்பீர்கள். பேராசையால் சில விடயங்களில் பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். கடனாக வாங்கிய பணத்தை உடனே திருப்பிக் கொடுக்க நேரிடலாம். மறதியால் அவதியுண்டு.

**விருச்சிகம்:**
மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும் நாள். வெளியூர் பயணங்கள் செல்ல திட்டமிடுவீர்கள். நண்பர்களுடன் பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். உடன் பிறப்புக்கள் விடயங் களில் நினைத்தது நடக்கலாம். விரும்பிய பொருள் ஒன்றை வாங்க கணிசமான பணத்தைச் செலவழிப்பீர்கள். வேலைப்பளு அதிகரிக்கும்.

**தனுசு:**
பெற்றோர், பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்கள் செலவில் உங்களின் சில தேவைகள் நிறைவேறலாம். பிடித்தமான உறவினர் ஒருவரைச் சந்திக்கலாம். அதிக செலவாகும் என நினைத்த வேலை ஒன்று குறைந்த செலவில் முடியலாம். சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். இனிமையான நாள்.

**மகரம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந் திக்கலாம். உங்களுக்கு உதவி செய்வதாகச் சொன்ன ஒரு வர் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் கவனம் அவசியம். பிரபலமான கோவில்களுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.

**கும்பம்:**
உறவினர் ஒருவருடன் வெளியூர் பயணம் செல்ல லாம். மற்றவர்களின் நிர்பந்தங்களுக்கு ஆள்பட்டு சில வேலைகளைச் செய்யலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவுகள் ஏற்படலாம். கணவன் , மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். அஜாக்கிரதையை தவிர்க்க வேண்டும்.

**மீனம்:**
தொடங்கிய காரியங்கள் துரிதமாக நடக்கும் நாள். நண்பர்கள் வழியில் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். நேற்று எதிர்பார்த்த பணவரவு ஒன்று இன்று கைக்குக் கிடைக்கலாம். குடும்ப உறுப்பி னர்களுக்குத் தெரியாமல் சில காரியங்களைச் செய்வீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். நட்பு வட்டம் விரிவடையும்.

# வச்ச... தப்ப...

மாயாவியாகிப் போன மனிதனைத் தேடுவது அமெரிக்கர்களுக்கு அவ்வளவு ஒன்றும் சுலபமானதாக இருக்கவில்லை. நவீன தொடர்பாடல் நுட்பத்தில் எதனைப் பயன்படுத்தினாலும் தன்னை அமெரிக்கர்கள் இலகுவில் கண்டறிந்துவிடுவார்கள் என்பதை ஒஸாமா நன்கு அறிந்திருந்தார். அதனால் தனது பழைமைவாத மதக் கொள்கை போன்றே தொடர்பாடலுக்கும் மிகப் பழைய முறையைத் தேர்ந்தெடுத்தார்.

அவரிடம் இருந்து முக்கிய தளபதிகளுக்கு செய்திகளைக் காவ மிகச் சிலர் மட்டுமே இருந்தார்கள். அவர்கள் யார் என்பது தலிபான் மற்றும் அல்-குவைதாவின் முக்கிய தளபதிகளுக்கே தெரியாது. ஒவ்வொருவரும் ஒன்று அல்லது இரண்டு செய்தித் தொடர்பாளர்களை மட்டுமே அறிந்து வைத்திருந்தார்கள்.

ஒரே செய்தித் தொடர்பாளரை அனைத்துத் தளபதிகளுடனும் தொடர்பில் ஈடுபடுத்துவது தன்னைக் கண்டறிவதற்கான சாத்தியங்களை அமெரிக்கர்களுக்கு அதிகரித்துக் கொடுக்கும் என்பது ஒஸாமாவின் தகர்க்க முடியாத நம்பிக்கை. எனவே ஒவ்வொரு தகவல் காவியையும் அவர் மூடுமந்திரமாகவே வைத்திருந்தார். இந்த இறுக்கமான தொடர்பாடல் முறைதான் ஒஸாமா பற்றி அமெரிக்கப் படையினர் தகவல்களைப் பெற முடியாமல் போனமைக்கான முக்கிய காரணம்.

நியூயோர்க்கிலும், வோஷிங்டனிலும், இஸ்லாமாபாத்திலும் காபூலிலும் இருந்த சிஐஏ ஏஜென்ட்கள் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டார்கள்; தலையைச் சுவரில் மோதினார்கள். என்ன செய்தும் ; எந்த வாலைப் பிடித்து தலை நோக்கி முன்னேறுவது என்று அவர்களுக்குப் புரியவில்லை.

இறுதியில், நான்கு வருடங்களுக்கு முன்னர் ஒஸாமாவுக்காக செய்தி காவும் நபர்களில் ஒருவர் பற்றி அமெரிக்கர்கள் ஒருவாறு துப்புத் துலக்கினார்கள்.

### குவாண்டனாமோ தகவல் சுரங்கம்

ஒஸாமாவை நெருங்குவதற்கான வழியை அமெரிக்கர்களுக்குக் காட்ட குவாண்டனாமோ சிறை உதவியது. இந்தத் திறந்தவெளிச் சிறைச்சாலையில்தான், ஆப்கானிஸ்தானிலும் ஈராககிலும் ஏன் அமெரிக்காவிலும் கைது செய்யப்பட்ட பல இஸ்லாமியத் தீவிரவாதிகளை அமெரிக்கா அடைத்து வைத்துள்ளது.

இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை அமெரிக்க அதிகாரிகள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். எப்படி வேண்டுமானலும் சித்திரவதைக்கு உட்படுத்தலாம். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் தகவல்கள், தகவல்கள், தகவல்கள் மட்டுமே.

சாம, தான, பேத, தண்டம் என அனைத்து வழிகளையும் பயன்படுத்த குவாண்டனாமோவில் சிஐஏக்கும் எவ்பிஐக்கும் அனுமதியுண்டு. ஆனால் அந்த முறைகளில் ஒரு சதவீதத்தைக்கூட அமெரிக்காவுக்குள் பயன்படுத்த முடியாது. அப்படிச் செய்வது சட்டப்படி குற்றம் அங்கு.

உலக அரசியல் விவகாரங்களில் இரட்டை வேடத்தை எந்த வெட்கமும் இன்றி வெளிப்படுத்தும் அமெரிக்கா, குவாண்டனாமோவில், மனித உரிமை விடயத்திலும் அதேபோக்கை வெளிப்படுத்த தயங்கவில்லை. முக்கியமாக இஸ்லாமியத் தீவிரவாதிகள் விடயத்தில் அது எவ்வளவு தூரமும் இழிசெயல்களைப் புரியத் தயாராக இருந்தது. ஏனெனில் 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்று அது அறிவித்த தாக்குலுக்கான தகவல் சுரங்கமாக குவாண்டனாமோ ஒன்றுதான் இருந்தது.

அங்கிருந்துதான் அமெரிக்க உளவாளிகளுக்கு ஒஸாமா விடயத்திலும் வெளிச்சக் கீற்று பிறந்தது.

செப்டெம்பர் 11 தாக்குதலினைத் திட்டமிட்டு வழிநடத்தியவரான காலித் ஷேக் மொஹமட் மற்றும் அல்-குவைதாவின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கான தலைவர் அபு பராஜ் அல் - லிபி ஆகியோர் ஒரு கட்டத்தில் பின் லேடனின் செய்தி




1979களில் ஆப்கானிஸ்தானில் விடுதலைப் போராளியாக ஒஸாமா...

காவி யார் என்பதை அமெரிக்க அதிகாரிகளிடம் சொல்லிவிட்டார்கள்.

தெரியப்படுத்தினார்கள் என்பதைவிட அவர்களின் வாய்களில் இருந்து அமெரிக்கா தகவல்களைக் கக்க வைத்தது, கறந்தது என்பதுதான் சரியானது.

அவ்வளவுக்குக் கொடூர சித்திரவதைகள், துன்புறுத்தல்கள், உளவியல் தாக்குதல்கள் வகைதொகையின்றி நடந்தன. குவாண்டனாமோவில் அடைத்து வைக்கப்பட்டிருந்த அல்-குவைதாவின் முக்கிய நபர்கள் குடைந்தெடுக்கப்பட்டார்கள். இருப்பதைவிடச் சாவதே மேல் என்பதுதான் அவர்கள் நிலை. ஆனால், தெரிந்ததைச் சொல்லாமல் வாழவோ சாகவோ அவர்களை விடுவதற்கு அமெரிக்கர்கள் தயாராக இல்லை. சகல வழிகளையும் பயன்படுத்தி அவர்களிடம் இருந்து தகவல்களைக் கறந்தது அமெரிக்கா.

அந்தப் பணி இலேசுப்பட்டதாக இருக்கவில்லை. ஒவ்வொரு விசாரணையாளருக்கும் வாழ்க்கை வெறுத்துப் போகுமளவுக்கு, துப்புத் துலக்கும் பணி கடினமாக இருந்தது. ஏனெனில், ஒஸாமாவின் செய்திகாவி பற்றி அல்-குவைதாவின் முக்கிய உறுப்பினர்களுக்கே சொற்பமாகத்தான் தெரிந்திருந்தது. அவரைப் பற்றித் தகவல் தந்தவர்களுக்கு அவரது இயக்கப் பெயர் மட்டுமே தெரிந்திருந்தது. சொந்தப் பெய...




(அமெரிக்க இராணுவ தகவல் மையத்தின் படம்)

பின்னே...
லில் கக்கி...
கிறார்கள்...
அங்க அ...
ஒருவாறு...
சிஐஏ. அ...
பராஜ் அ...
குறித்...
களில் மு...
தியதும் அ...
கள் முழு...
கள், ஒட்டு...
அந்த செ...
சுற்றி டசி...
ஆனா...
தேகம் இ...
நபர் ஒஸ...
னவர்? இ...
மாவை நெ...
அவர்கள்...
தோண்டு...
றைய செ...
ஒரு வ...
நபர், பின்...
டிய செய்...
திக் கொ...
தரும் என்...
அதை...
தீவிரப்ப...
செய்தி கா...
அவரது...
அங்குலடு...
ஆனா...
காவி திற...
அவரது...
எங்களால்...
தங்கள் தே...
ரிக்க அதி...
குறித்...
இரண்டு...
பகுதியில்...
கிறார் என்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுறி
# யாது

ரேணுபிரேம்
renuprem06@gmail.com



வில்லை. எவ்வளவோ முட்டி மோதிப் பார்த்தார்கள். தகவல்கள் தூசுகளாகவும் துகள்களாகவும் தான் வந்து சேர்ந்தன. அவற்றை ஒன்றிணைத்து ஒரு வடிவம் கொடுப்பதற்குள் அமெரிக்கர்களுக்கு முழி பிதுங்கி, மூளை வெதும்பிப் போயிற்று.

ஒரு வழியாக 2010 ஒகஸ்ட் மாதம்தான், இப்போது பின் லேடன் மீது தாக்குதல் நடத்தப்பட்ட மறைவிடத்தை அவர்கள் கண்டறிந்தார்கள். ஆனால், தாக்குதல் நடத் தப்படும் வரைக்கும் அதற்குள் பின் லேடன் இருக்கிறார் என்று 100 சத வீதம் அமெரிக் கர்களுக்கு உறுதியாகத் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் அந்த சுற்றுச் மதில்களுக்கு உள்ளே, அல்-குவைதாவுடன் தொடர்புடைய மிக முக்கியமான ஒரு நபர் இருக்கிறார் என்பது மட்டும்தான். அவர் பின்லேடனாக இருக்கலாம் என்று அவர்கள் பலமாக ஊகித்தார்கள்; ஆனால் முழுது மாக உறுதிப்படுத்த முடியவில்லை.

### மர்ம வீடு

பின்லேடனின் மறைவிடமாக விளங்கிய அந்த வீடு மிகப் பெரியதாக இருந்தது. பாகிஸ்தானின் இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்கு வெகு அருகாக அமைந்திருந்தது. இங்கிருந்து கல்லெறிந்தால் அங்கு போய் விழும் என்கிறார்கள். அது பிரிட்டிஷ் பாணியில் அமைந்ததொரு பயிற்சிக் கல்லூரி. அங்கு இளநிலை அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்தன.

''தனது தலையணைக்கு கீழே யாரும் தேடுவதில்லை'' என்பது போல், இராணுவ முகாம் ஒன்றுக்கு அருகில் என்பதால் எவருக்கும் சந்தேகம் வராது, பாதுகாப்பான மறை விடமாக பின்லேடன் கூட நினைத்திருக்கலாம். எனினும் அந்தப் பகுதியில் இருந்த மற்றைய வீடுகளிலும் பார்க்க அளவுக்கதிக மாக இந்த வீட்டின் பாதுகாப்பில் காட்டப்பட்டிருந்த அக்கறைதான் அமெரிக்க அதிகாரிகளை அந்த வீட்டின் மீது கவனத்தைக் குவிக்க வைத்தது.

அந்த வீட்டை முதன் முதலில் கண்காணித்த போது அமெரிக்கர்கள் அதிர்ந்து போனார்கள். பலத்த பாதுகாப்பு முன்திட்டமிடல்களோடு வீடு கட்டப்பட்டிருந்தது. உள்ளே இருந்தவர்களும்கூட மிக எச்சரிக்கையாகவே நடமாடி வந்தார்கள்.

அந்தப் பகுதியில் இருந்த ஏனைய வீடுகளைவிட இந்த வீடு 8 மடங்கு பெரியதாக இருந்தது. 4 முதல் 6 மீற்றர் உயரமான மதில் சுவர்கள் சுற்றிவர அமைக்கப்பட்டிருந்தன. அவற்றின் உச்சியில் முட்கம்பி வரிச்சுகள் மூன்று அடுக்குகளுக்கு இழுக்கப்பட்டிருந்தன. 2005இல் அந்த வீடு கட்டப்பட்டது என்று அமெரிக்கர்கள் கூறுகிறார்கள். ஆனால் பாகிஸ்தான் உளவுப் படையினரோ அது 2003இலேயே கட்டப்பட்டது என்கின்றனர்.

அல்-குவைவின் தீவிரவாதத் தலைவர் ஒருவர் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் 2003ஆம் ஆண்டு அந்த வீட்டுக்குள் ஒரு தடவை தாங்கள் தேடுதல் நடத்தினர் என்றும் பின்னர் அது பற்றி அக்கறைப்படவில்லை என்றும் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ சொல்கிறது.

அயலவர்கள் எல்லோரும் தமது வீட்டுக் கழிவுகளை, அந்தப் புகுதி நகரசபை ஊழியர்கள் எடுத்துச் செல்லும் வகையில் வெளியே கொட்ட, இந்த வீட்டில் இருந்தவர்கள் மட்டும் கழிவுகளை வளவுக்குள்ளேயே போட்டு எரித்தார்கள்.

சுற்று மதிலிலும்கூட ஜன்னல்கள் வைத்திருந்தார்கள். வெளியே இரண்டு பெரிய கதவுகள் பலத்த முன்பாதுகாப்புகளுடன் அமைக்கப்பட்டிருந்தன. கிட்டத்தட்ட ஒரு மில்லியன் டொலர் பெறுமதிக்கு மதிக் கப்பட்ட அந்தக் கட்டடத்தின் உள்ளே தொலைபேசி இணைப்புக்களோ இணைய வசதிகளோ ஏதும் இல்லை. வெளிப்புறச் சுவருக்கு உள்ளே பாதுகாப்புக் காரணங்களுக்காக வீட்டு வளவைப் பல பகுதிகளாகப் பிரிக் கும் வகையில் உட்புறச் சுவர்களும் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த அறிகுறிகளும் சமிக்ஞைகளும்தான் அமெரிக்கர்களைக் கவர்ந்திழுத்தன. அவர்கள் கண்கொத்திப் பாம்பாக இடைவிடாது வீட்டைக் கண்காணித்தார்கள்.

ஒரு நாள் இரு நாள்கள் அல்ல இரண்டு வருடங்களாக இடைவிடாது கண்காணிப்புத் தொடர்ந்தது.

தப் பெயர் என்ன என்பது தெரியாது.

### விலகியது மர்மம்

பின்லேடனின் செய்தி காவி யார் என்பதை முதலில் கக்கியவர் காலித் ஷேக் மொஹமட்தான் என்கிறார்கள் அமெரிக்க அதிகாரிகள். அவர் தெரிவித்த அங்க அடையாள விவரங்களைக் கொண்டு ஒருவாறு ஒருவரை அடையாளப்படுத்தியது சிஐஏ. அதனைப் பின்னர் உறுதிப்படுத்தினார் அபு பராஜ் அல் - லிபி.

குறித்த நபர்தான் பின்லேடனின் செய்தி காவிகளில் முக்கியமானவர் என்பதை உறுதிப்படுத்தியதும் அமெரிக்க உளவுத் துறையைச் சேர்ந்தவர்கள் முழு வீச்சில் களமிறங்கினர். பின்தொடர்தல்கள், ஒட்டுக் கேட்டல்கள், கண்காணிப்புக்கள் என்று அந்த செய்தி காவிக்குத் தெரியாமலே அவரைச் சுற்றி டசின் கணக்கானவர்கள் திரிந்தார்கள்.

ஆனாலும் அதிகாரிகளிடத்தில் ஒரு சிறிய சந்தேகம் இருக்கத்தான் செய்தது. தாம் பின்தொடரும் நபர் ஒஸாமாவுக்கு எவ்வளவு தூரம் நெருக்கமானவர்? இவரைப் பின்தொடர்வதன் மூலம் ஒஸாமாவை நெருங்க முடியுமா? என்பதுதான் அது. எனவே அவர்கள் குவாண்டனாமோ தகவல் சுரங்கத்தில் தோண்டும் பணியை நிறுத்தவே இல்லை. தவிர மற்றைய செய்தி காவிகளும் பின்தொடரப்பட்டார்கள்.

ஒரு வழியாகத் தாம் இலக்கு வைத்திருக்கும் நபர், பின்லேடனுக்கு மிகமிக நெருங்கிய, வேண்டிய செய்தி காவி என்பதை அவர்கள் உறுதிப்படுத்திக் கொண்டார்கள். அவரைத் தொடர்வது பயன் தரும் என்று உறுதியாக நம்பத் தொடங்கினார்கள்.

அதைத் தொடர்ந்து ரகசியக் கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப்பட்டன. இலக்கு வைக்கப்பட்ட செய்தி காவியைச் சுற்றி வலைகள் பின்னப்பட்டன. அவரது நடமாட்டத்தின் ஒவ்வொரு அடியும் அங்குலமும் கண்காணிக்கப்பட்டது.

ஆனால், அமெரிக்கர்களைவிட அந்தச் செய்தி காவி திறமைசாலியாக இருந்தார். ''இறுதிவரை அவரது சொந்த இருப்பிடம் எதுவென்பதை எங்களால் கண்டுபிடிக்கவே முடியவில்லை'' என்று தங்கள் தோல்வியை ஒப்புக் கொள்கிறார்கள் அமெரிக்க அதிகாரிகள்.

குறித்த நபர்தான் இலக்கு என்று தீர்மானித்து இரண்டு வருடங்கள் கடந்த போதும் அவர் எந்தப் பகுதியில் தங்கியிருந்து நடவடிக்கையில் ஈடுபடுகிறார் என்பதை அமெரிக்கர்களால் அறிய முடிய

*(தாக்குதலை யார்? எப்படி நிகழ்த்தினார்கள் என்பது நாளை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகம்.... சுகம்...
## இல்லை... சோகம்.... சோகம்



சிலபேர் எதற்காகப் பணம் சேர்க்கிறார்கள்? மேற்கொண்டு அதை வைத்து என்ன செய்யப் போகிறார்கள்? என்பதே புரியாது. ரூபாய்த் தாள்க் கட்டுக்களை செங்கற்களாக வைத்து வீடு கட்டினால் கூட அவர்களிடம் இருகிற பணம் செலவாகாது. அவ்வளவு பணம் வைத்திருப்பார்கள். அதற்குப் பின்னரும் கூட வெறித்தனமாகப் பணம் சேர்ப்பதில் ஈடுபடுவர்கள்.

வட்டிக்கு மேல் வட்டி வாங்குவார்கள். கடன் பத்திரத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு தமது விருப்பத்துக்கு எழுதிக் கொள்வார்கள். ஏழைகளை மேலும் ஏழைகளாக்கி உறிஞ்சுவார்கள்.

எந்தக் கார், எந்த வீடு, எந்தக்காணி எதைப் பார்த்தாலும் தான் வாங்க வேண்டும் என்று போட்டி போடுவார்கள். யாரை வேண்டுமானாலும் மிரட்டி, உருட்டி அவர்கள் சொத்துக்களைத் தம்வசம் சேர்த்துக் கொள்வார்கள். இதில் சிலருக்குக் குழந்தைகள் கூட இருக்காது. யாருக்கு இந்தச் சொத்து என்கிற அறிவே இன்றிச் சொத்துக்களைக் குவிப்பார்கள்.

ஒரு கிராமத்தில் பெரும் பணக்காரர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஏக்கர் ஏக்கராக நிலம் இருந்தது. அந்த நிலத்திற்குப் பக்கத்தில் ஒரு ஏழைக்கு கைக்குட்டை மாதிரி ஒரு சிறிய நிலம் இருந்தது. பணக்காரர் ஒவ்வொரு முறை உழும் பொழுதும் வரம்பு மேட்டை இடித்து ஏழையின் நிலம் மீது எழுப்பி ஓரடி நிலத்தையாவது அபகரித்து விடுவார்.

''இப்படிச் செய்யலாமா? உங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது; இந்த ஏழையின் நிலம் வந்து என்ன ஆகப்போகிறது?'' என்று ஏழை விவசாயி ஒருநாள் அவரைக் கடுமையாகக் கேட்டார். பணக்காரர் துணிவுடன் ''இவ்வளவு நிலமும் எனக்கு எப்படி வந்தது என்று நினைக்கிறீர்கள்?'' இந்த வேலையை என் அப்பா காலத்திலேயே ஆரம்பித்தோம். நானும் செய்தால்தான் என் காலத்தில் என் பிள்ளைக்கு நிலம் சேரும்'' என்றார். இவர்கள் ஈனப்பிறவிகள்; அசுரப் பேய்கள்.

இந்த அசுரர்களை 'அசுபர்கள்' என்கிறது கீதை. அசுபர்கள் என்ற கீதா வாக்கியத்திற்கு உரை சொன்ன ஸ்ரீ வேதாந்த தேசிகர் ''பிறரைக் கெடுத்தது போதாது என்று தன்னைச் சார்ந்தவர்களையும் கெடுப்பவர்கள் என்கிறார். இதைச் செய்யலாமா? கூடாதா? என்கிற விவேகம், பகுத்தறிவு அவர்களிடம் இருப்பதில்லை. தர்மம், அதர்மம் மீது அவர்களுக்கு நம்பிக்கையே இருக்காது. அப்படிப் பட்டவர்களோடு பத்து நிமிடங்கள் இருக்க நேர்ந்தால் அதுவே நரகம்.

அசுர குணத்திற்கு இலக்கணம் சொல்லும் போது அநியாயமான முறையற்ற செயற்பாடுகளை விரும்புபவர்கள் என்கிறது கீதை. இந்த அசுர இயல்பு சாத்திரம், மரபு இவற்றைப் புறக்கணிக்கும், பேரும் புகழுக்காவும் யாகம் செய்ய விரும்பும்.

உரிய நேரத்திற்குப் பூஜை செய்ய வேண்டும் என்று, சில பணக்காரர்கள் வரும்முன் பூசை செய்த குருக்கள் என்ன பாடுபடுவார்கள் தெரியுமா? எனக்கு முதல் மாலையா? அவனுக்கு முதல் மாலையா? என்கிற மோதலில் கடவுள் மாலையைப் போட்டு மிதித்த காடையர்கள் அசுரர்கள்.

எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்றான் என்ற எண்ணமின்றி அவமதித்தும் பலரை இகழ்ந்து மனம் நோக வைப்பதும் அசுரத்தனமே. பதினைந்து வயதுப் பணக்காரச் சிறுவன் எழுபது வயதுப் பெரியவரை ''டேய்'' என்று அழைக்கும் பழக்கம் இன்று உள்ளது. அதுமட்டுமன்றி பிறரை அழைக்கும் போது ஏதாவது ஒரு விலங்கின் பேர் சொல்லி அழைப்பர்; கெட்ட வார்த்தை சொல்பவர்களும் உள்ளனர். இவையாவும் அசுரத் தனங்களே.

ஒரு வழக்கறிஞர் கோபத்தில் எதிர்த்தரப்பு வழக்கறிஞரைப் பார்த்து ''கழுதை'' என்று திட்டினார். அவர் எழுந்து நீதிபதியிடம் சட்டப்படி இது குற்றம்'' என்று எடுத்துரைத்தார். அதை ஏற்று நீதிபதி ''100 ரூபாய் அபராதத் தொகை விதிக்கிறேன்'' என்றார். அபராதத் தொகையைச் செலுத்திய பின் அவர் நீதிபதியைப் பார்த்து ''நீதிபதி அவர்களே! வழக்கறிஞரைக் கழுதை என்பது தவறு என்கிறீர்கள்? நான் ஒரு கழுதையை வழக்கறிஞரே என்று அழைத்தால் அது ''சட்டப்படி குற்றமா?'' என்று விபரீதமாகக் கேட்டார். ''இல்லை'' என்றார் நீதிபதி. ''அப்படியானால் என் எதிர்க்கட்சிக்காரரை வழக் கறிஞரே என்று இனி அழைக்க எனக்கு சம்மதம் '' என்று முடித்தார்.

பிறரைக் காயப்படுத்துகிறோமே என்கிற எண்ணமே இல்லாமல் பலர் நடத்துகொள்கிறார்கள். ''எனக்கு இது பிடித்திருக்கிறது. இது பிடிக்கவில்லை'' என்று முடிவெடுக்காமல் திருக்குறள், நாலடியார்அளவின் படி முவெடுத்துத் தேவநிலை எய்தலாம். மனம் போல் முடிவெடுத்து அரசு நிலை அடையலாமா?.

குளிர்ந்த கடல் நீரில் கிடந்த ஆமையைப் பிடித்து பெரிய பாத்திரத்தில் போட்டு கீழே அடுப்பை மூட்டியதும், இளம் சூடு பரவ ''ஆஹா என்ன சுகம்'' என்று ஆமை ஆனந்தப்படும். அதுவே தன் மரணவாயில் என்பதை அது அறியாது. அப்படியே அசுரர்கள் சொர்க்கம் சொர்க்கம் என்று வாழ்கின்ற வாழ்வே நரகத்தின் நுழைவாயில்.

சுகி.சிவம்

# புனித நட்பு

இளமைக் காலமதில் இன்றியமையாத ஒன்று நட்பு
புரிந்துணர்வை ஏற்படுத்தி நல்வழிப்படுத்துவது நட்பு
முரண்பாடுகள் இருந்தாலும் முறிவடையாதது நட்பு
உறுதியாய் இருப்பின் உடையாதது நட்பு
இனிமையான நினைவுகளைத் தருவதும் நட்பு
துன்பத்தில் தோள்கொடுத்து உதவுவதும் நட்பு
நல்லொழுக்கத்தை ஏற்படுத்தும் நட்பில்
களங்கம் இல்லாதிருப்பின் என்றும் உயர்ச்சியே!

மோ.ரேவதி,
35/4, வாலையம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**இளம் சமுதாயத்தின் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணம்**

தவறான வழிகாட்டலா? ☐ தன்னிச்சையான தீர்மானங்களா? ☐

பெயர்: ........................................
முகவரி: ........................................
........................................
அடையாள அட்டை இல. ........................................

உங்கள் தீர்ப்புக்களை 26.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

இளவல்கள் வட்டம்




## இளம் சமுதாயத்தின் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணம்

### தவறான வழிகாட்டல்

இன்றைய நாகரீக உலகில் இளம் சமூகத்தினர் எதற்கும் அஞ்சாது வாழ்க்கையைத் துச்சமாக மதித்து துணிச்சலோடு எதிர்நீச்சல் போட்டுப் போராடுகின்றார்கள். காரணம் உலகம் விஞ்ஞான வளர்ச்சி காரணமாக எதற்கும் சொந்தக் காலில் நிற்பதில்லை. அதாவது மூளையைப் பாவிப்பது கிடையாது. இயந்திரம், கணினி, தொலைபேசி, தொலைக்காட்சி போன்ற கருவிகளைப் பயன்படுத்துகின்றார்கள்.

அதனால் அவர்கள் பின் விளைவுகளை எதிர்பார்ப்பதில்லை. அவசரமான உலகத்தில் மிகவும் கடுகதியில் தங்களது குறிக்கோளை நிறைவேற்ற முயற்சிக்கின்றார்கள். அதன் பலாபலன் தவறான வழிகாட்டல்கள் தற்கொலைகளின் அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன.

அந்தவகையில் வேலையில்லாத் திண்டாட்டம், பரீட்சையில் எதிர்பார்த்திருந்த பெறுபேறுகள் கிடையாமை, காதலில் தோல்வி இவையெல்லாம் இளைஞர், யுவதிகளின் கோழைத்தனத்தையும் தவறான வழிகாட் டலையுமே காட்டுகின்றன. வேலையைத் துணிவுடன் தாமாகவே தேடிச்சென்றால், பரீட்சையில் பொறுமையுடன் பல தடவைகளில் தோற்றிச் சிறப்பான பலனைப் பெறலாம்.

காதலில் ஒருத்தி ஏமாற்றிவிட்டாளானால் இன்னொருத்தி கிடைப்பாள் தானே என்ற தன்னம்பிக்கையை வளர்த்தால் இளம் சமுதாயத்தினர் வாழ்க்கையைச் சிறப்பாக்க முடியும்.

எனவே இளம் சமுதாயத்தினரின் தவறான வழிகாட்டலே தற்கொலை அதிகரிப்புக்குக் காரணியாக அமைந்துவிடுகிறதென்பது எனது வாதமாகும்.

**கந்தஞானமுத்து,**
கைதடி.

### தன்னிச்சையான தீர்மானங்கள்

தற்போதைய காலத்தில் ஏற்பட்டுள்ள அளவுக்கதிகமான வசதி வாய்ப்புக்களும் குடும்பத்தில் பெற்றோரின் கவனமின்மையும் தான் இளம் சமுதாயத்தின் தன்னிச்சையான தீர்மானங்களுக்கும் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் காரணங்களாக அமைகின்றன.

கல்வி கற்கும் வயதில் கல்வியைக் கற்காமல், பெற்றோரின் சொற்கேட்டு நடக்காமல் எல்லாம் நமக்குத் தெரியும், இவர்கள் யார் எம்மைத் திருத்தவும் கண்டிக்கவும் என்று தன்போக்கில் நடப்பவர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படும் போது அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்று தெரியாமலே போய்விடுகின்றது. பிரச்சினைகளை மற்றவர்களிடம் சொல்லி ஆலோசனையும் கேட்கமாட்டார்கள்.

எல்லாத் தீர்மானங்களையும் தாமே எடுத்துவிடுகின்றனர். போராடி வாழ்ந்து முடிக்க வேண்டிய வாழ்வை தவறாக ஒருமுழக்கயிற்றுக்கும் ஒரு குப்பி நஞ்சுக்கும் கொடுத்து விடுகின்றனர்.

''வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். வாசல் தோறும் வேதனை இருக்கும். வந்த துன்பம் எது என்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை. எதையும் தாங்கும் இதயம் இருந்தால் இறுதிவரைக்கும் அமைதி இருக்கும்'' என மிகவும் அழகாக பி.ஸ்ரீனிவாஸ் பாடியுள்ளார். இறைவன் தந்த வாழ்க்கை இது.

இதைத் தந்தவனே காலம் வரும்போது எடுத்துக் கொள்வான். இடையில் இந்த அவச்ரம் தான் ஏனோ? தற்கொலை செய்வதால் நம் பிரச்சினை மட்டும் தான் தீர்கின்றது.

எம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கு எவ்வளவு பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது என்பதனை ஒரு நிமிடம் சிந்தித்தால் என்ன? மனம் நினைக்கும் எல்லாவற்றையும் நிறைவேற்ற எண்ணினால் எஞ்சுவது குழப்பங்கள் மட்டும்தான்.

......

# என் அப்பாவுக்கு

முதுகில்
சுமையோடு
மூடா இமையோடும்
எதுவரினும்
பொறுமையோடும்
வாழ்ந்து
எனக்கு வாசல் தந்த
என் அப்பாவுக்கு



*ஜே.துசாரா*
*21,ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பத்தாவது விவாதமேடையில் 'இளையோரின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பது குணமே எனும் அணி வெற்றிபெற்றுள்ளது. இதில் குணம் எனும் அணிக்காக 1050 வாக்குச் சீட்டுக்களும் பணம் எனும் அணிக்காக 1024 வாக்குச் சீட்டுக்களும் கிடைத்துள்ளன. இளையோரின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பது குணம் எனும் அணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

**1. கந்த ஞானமுத்து** **2. தி.துஷானி**
**3. ஏ.இந்திரா**

விவாத மேடைக்குச் சிறந்த ஆக்க்ங்களை அனுப்பியோர்.

**ஞானதுவாரகா** **பெனடிற் ஜாகினி மக்ஸ்மலா**
**ஆ.வதனா** **அ.க.பாரீஸ்**
**சி.அனோஜனா** **பு.கோபிகா**
**க.ஜீவன்**

சிறந்த தொடர், சிறந்த கவிதைகளை அனுப்பியோர்.

**க. கலையரசி** **சு.விதுர்ஷன்** **ச.பகீரதன்** **சி.சிவா**
**த.தர்ஜீஸ்** **உ.தக்சாயனி**

சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்
**சா.சிந்துஜா**

## தொட்டாச்சிணுங்கி

**தொட்டாச்சிணுங்கிச் செடி ஸ்பரிசம் பட்டவுடன் உடனே சுருங்குகிறது. இது எதனால்?**

தொட்டாச்சுருங்கி இலைகளைப் பின் மடித்துக் கொண்டு முள்களை புலி நகம் போல் வெளிப் படுத்துகிறது. மேய்வதற்காக முகத்தை நீட்டிய ஆட்டின் மூக்குக்கு ஓர் எச்சரிக்கை விடுகிறது. தொட்டாச்சிணுங்கி இலைகளின் காம்புகளில் நீர் நிரம்பினால் இலைகள் நிமிரும். நீர் வற்றினால் இலைகள் சுருங்கும். இதற்கு நீரை வற்றவிடுவதும் நிரப்புவதும் இலைக் காம்புகளின் உள்ள செல்களே ஆகும்.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

*'இளவல்கள் வட்டம்',*
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :-........................................
முகவரி :- ........................................
........................................
........................ திகதி
........................ கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 82 ஆவது ஆண்டை நிறைவு செய்து வெற்றிப் பாதையில் பயணிக்கும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

(சென்றவாரத் தொடர்ச்சி)

கல்லூரிச் சமூகத்தின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பினால் உயர்ந்த அத்தியார் இந்துக் கல்லூரி தனது 82 ஆவது ஆண்டுக் கல்விப் பணியில் தனித்துவமான முன்னெடுப்புக்களுடன் முன்னேறி வருகின்றது.

கல்லூரியைக் கடந்த காலங்களில் உயர் செந்நெறியில் வழிநடத்திய அதிபர்கள் வரிசையில்:

எஸ். ஜி. அருளானந்தம் 1929 - 1933, எஸ். வெங்கடேஸ்வரன் 1933 - 1935, கே.பொன்னையா 1935 - 1936, எஸ்.ஆறுமுகம் 1936 -1937, எஸ். நவரத்தினம் நெல்சன் 1937 - 1947, வி.சண்முகநாதன் 1948 - 1951, எஸ்.கி.சீவரத்தினம் 1952 - 1954, வி.ஜி.சம்பந்தன் 1954 - 1966, எஸ்.ஸ்ரீனிவாசன் 1966 - 1971, கே.இராஜரத்தினம் 1971 - 1974, கே.சொக்கலிங்கம் 1974, கே.நவரத்தினம் 1974 - 1976, எஸ்.சுவாமிநாத சர்மா 1976 - 1978, கே. இராசரத்தினம் 1979 - 1984, எஸ்.சபாரத்தினம் 1984 - 1986, கே.சிவசுப்பிரமணியம் 1987 - 1988, கே.தங்கராசா 1988, ஏ.கனகசுந்தரம் 1988-1993, வி.கணேசராசா 1993 - 1996, எஸ்.விசுவலிங்கம் 1996 - 2002 வரை கடமையாற்றியுள்ளனர். இ.குணநாதன் 2002 இல் இருந்து கடமையாற்றி வருகின்றார்.

கல்லூரியின் ஆரம்பகாலம் தொட்டு இன்று வரை 20 பேர் அதிபர்களாகப் பதவி வகித்துள்ளனர். 21 ஆவது அதிபராக இ.குணநாதன் பதவியேற்றுச் சிறப்புறக் கல்லூரியின் நோக்கத்தைப் பாடசாலைச் சமூகத்தின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நிறைவு செய்து வருகின்றார்.

பாடசாலைகள் தனித்துவமான முறையில் வளர வேண்டுமானால் பழைய மாணவர்களின் நேரடிப் பங்களிப்பு அவசியமானது. பழைய மாணவர்கள் பாடசாலை என்ற சமூக நிறுவனத்தின் நிரந்தரமான வழிகாட்டிகளாக இருந்து உதவவேண்டும். அத்தகைய கட்டமைப்போடு கூடிய பாடசாலைகள் தான் தற்பொழுது முன்னணிப் பாடசாலைகளாக மிளிர்வதைக் கண்டு கொள்ள முடிகின்றது. அந்தவகையில் அத்தியார் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியிலும் பழைய மாணவர் அமைப்புக்களும் பாடசாலைச் சமூகம்சார் கட்டமைப்புக்களும் தமது பங்களிப்பை நல்கி வருவதைக் கல்லூரி அதிபர் ஆண்டு தோறும் பரிசளிப்புவிழா அறிக்கையில் சுட்டிக் காட்டிப் பாராட்டிவருகின்றார்.

பாடசாலைப் பழைய மாணவர் சங்கம், நீர்வேலி நலன்புரிச் சங்கம் - லண்டன், அத்தியார் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகள் சங்கம் - லண்டன் , நீர்வேலி நற்பணிச் சங்கம் - சுவிஸ், நீர்வேலி நற்பணிச் சங்கம்- கனடா, கொழும்பு பழைய மாணவர் சங்கம், உள்ளூர் நலன் விரும்பிகள் அமைப்பு போன்றவை ஆண்டு தோறும் பெருமளவு நிதி உதவிகளை வழங்கி வருவதோடு, அதிபருடன் நேரடியாகவும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு பாடசாலையின் தேவைகளையும் நிறைவு செய்து வருகின்றனர். இதனை பாடசாலை அதிபர், ஆசிரியர் சமூகம் பசுமையுடன் நினைவு கூர்ந்து பாராட்டுகின்றது.

இரண்டு பரப்புக் காணியில் ஸ்தாபிதம் செய்யப்பட்ட கல்விக் கூடம் இன்று 8 ஏக்கர் காணியைக் கொண்டுள்ளது.

மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டு தமது உறவினர்களின் நினைவாகவும் பல்வேறு ஞாபகார்த்தப் பரிசில் நிதியங்கள் நிறுவப்பட்டுள்ளன. நிரந்தர வைப்புத் தொகையின் வட்டியைப் பயன்படுத்திப் புலமைப் பரிசில் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.




கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் இராணுவ நடவடிக்கைகள், இடப்பெயர்வுகள் பெருமளவு பாதிப்பையும் ஈடு செய்ய முடியாத இழப்புக்களையும் ஏற்படுத்தியுள்ள போதிலும் பாடசாலைச் சமூகத்தின் இடையறாத, தொடர்ச்சியான ஒத்துழைப்பின் மூலம் ஆரோக்கியமான பணி முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆசிரியர் ஆளணிப் பற்றாக்குறை கல்லூரியின் கல்வி முன்னெடுப்புக்களில் தடங்கல்களை ஏற்படுத்திய போதிலும் இந்தக் கல்லூரி, கல்வி அடைவுமட்டத்திலும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் உயர்ந்த அடைவு மட்டங்களைப் பெற்றுத் தனக்கே உரிய தனித்தவத்துடனும் சிறப்புடனும் செயற்படும் பாடசாலைகளின் வரிசையில் முன்னணியில் திகழ்கின்றது. இந்த உயர்நிலையை அடைவதற்கு பாடசாலைச் சமூகமும் அந்தக் கிராம மக்களும் முன்னின்று உழைக்கின்றனர்.

*(தொடரும்)*

**தொகுப்பு- ஞானஆதவன்**

# குதிரையின் காற்றடம் போலக் காட்சியளிக்கும் சங்கிலி மன்னன் நீராடிய கோப்பாய் குதியடிக் குளம்

யாழ்ப்பாண இராச்சியத்துக்கும் வலி. கிழக்குக்கும் நெருக்கமான தொடர்புகள் உண்டு. யாழ்ப்பாண இராச்சியத்தின் போது தமிழ் நாட்டிற்குச் செல்வதற்குப் பாக்கு நீரிணை வழியாகக் கடல் வழி படகுச் சேவை இடம் பெற்றது. இதன் காரணமாக இரு பகுதி மக்களிடையேயும் குடும்ப உறவு மிக நெருக்கமாக இருந்தது.

வலி. கிழக்கின் வடக்கு எல்லையில் பாக்கு நீரிணைக் கடல் இருப்பதால் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்துவந்த யாழ்ப்பாண இராச்சிய மன்னர்கள், பிரதானிகள் என்போர் தமிழ் நாட்டுக்கு நாளாந்தம் சென்று திரும்பியதும் குடும்ப உறவுகளைத் தமிழ் நாட்டுடன் நிலை நிறுத்தி இருந்ததும் வரலாற்று உண்மையாகும்.

நல்லூரின் வடக்குப் புறமாக அமைந்துள்ள வலி. கிழக்குப் பிரதேசம் தமிழ் மன்னர்களின் பாதுகாப்புக்கும் அந்தரங்க அரசியல் நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையனவாகவும் பாதுகாப்பானவையாகவும் இருந்து வந்துள்ளன. இந்த வகையில் வலி. கிழக்கில் உள்ள புராதன ஆலயங்கள் தமிழ் மன்னர்களின் நம்பிக்கைக்குரிய வழிபாட்டுத் தலங்களாகவும் நேர்த்திகளை நிறைவு செய்யும் புனித இடங்களாகவும் திகழ்ந்துள்ளன.

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் நிறுவப்பட்டமையும் அதன் பூசை வழிபாடுகளில் யாழ்ப்பாண இராச்சியத் தமிழ் மன்னர்களும் அமைச்சர்களும் பிரதானிகளும் கலந்துகொண்டு வழிபட்டு வந்தமையும் வரலாற்று ஆதாரங்களால் நிரூபணமாகின்றன. நல்லூர்க் கந்தசாமி கோயிலின் மேற்கு வீதியில்



இருந்து வடக்கு நோக்கிச் சென்று அச்சுவேலியில் முடிவடையும் ''இராசவீதி'' யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்களின் அந்தரங்க வழிப் பாதையாக உபயோகிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழ் நாட்டிற்குச் செல்வதற்கும் இந்த வீதி பயன்படுத்தப்பட்டது. மன்னர்களின் பயன்பாட்டில் இருந்தமையால்தான் ''இராச வீதி'' என்ற நாமம் வந்ததாகவும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாண மன்னர்கள் தமது பாதுகாப்புக் கருதி பல மறைவிடங்களைக் கொண்டிருந்தனர். கோப்பாய் ''மாவடி வளவு'' இது அவர்களது விசுவாசமான பயன்பாட்டுக்கு உரிய இடமாக விளங்கியது. மாவடி வளவில் சங்கிலி மன்னன் தங்கியிக்கும் சந்தர்ப்பங்களில் நீராடுவதற்குப் பயன்படுத்திய தடாகமே குதியடிக்குளம் ஆகும்.

குளத்தின் வடிவமைப்பு குதிரையின் கால் அடிக் குளம்பு போல் காணப்படுவதால் அதற்கு ''குதியடிக்குளம்'' எனப் பெயர் வந்ததாகக் கூறப்படுகின்றது. குதியடிக்குளம் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் கோப்பாய்ச் சந்திக் கும் பிரதேச செயலகத்துக்கும் இடையே வீதிக்குக் கிழக்குப் புறமாக இருக்கும் பரந்த பிரதேசத்தை உள்ளடக்கிய கோப்பாய் சந்திக்கு வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ள உணவகத்துக்கு முன்பாகக் கிழக்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையில் 150 மீற்றர் தூரத்தில் தாமரைகள் நிரம்பிய தடாகமாகக் காணப்படுகின்றது.

குதியடிக் குளத்தைச் சூழவுள்ள பிரதேசம் மக்கள் இயல்பு நிலையில் நடமாட முடியாதவாறு முட்புதர்களால் சூழப்பட்டுக் காணப்படுகின்றது. தற்பொழுது கால்நடைகள் நீர் அருந்துவதற்கு ஏற்றவகையில் மறுசீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. முக்கால் வட்ட வடிவமாகக் குதி அமைப்பில் சிமெந்தினால் சுவர் அமைக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு கமநல சேவைத் திணைக்களத்தினால் நீர்பாசனக் குளங்கள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

நீர் வளமும் நிலவளமும் கொண்ட இந்தப் பிரதேசம் புதர் மண்டிக் காணப்படுகின்றது. யுத்த நடவடிக்கைக்கு உட்பட்ட பிரதேசமாக இருந்தமையால் அந்தப் பிரதேசம் பாதுகாப்புக்கு உட்பட்டதாகவும் இருந்தது. அண்மைக் காலத்தில் இந்த இடத்தில் வெடி குண்டுகள் அகற்றப்பட்டுள்ள போதிலும் பொது மக்களின் இயல்பான பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படாமல் புதர் மண்டிக் காணப்படுகின்றது. அங்கு சமகாலச் சந்ததியினர் அறிய வேண்டிய வரலாற்று உண்மைகள் பல மறைந்து கிடக்கின்றன.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

An ISO 9001:2000 Certified Company

# Spoken English

veta®

ஆங்கில பயிற்சி மையம்

Experts in English Training

Come, let's speak fluent English



Foundation , First Step மற்றும் Next Step க்கான

**புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

veta Foundation ENGLISH — ஆங்கிலத்தை ஆரம்பத்தில் இருந்து கற்க விரும்புவர்களுக்கு

veta Fluent English First Step — இலக்கணத்தை பாடரீதியாக கற்பதைவிட செயல்முறை ரீதியில் கவனம் செலுத்தி வெற்றியளித்த செயன்முறை.

veta Fluent English Next Step — பல்வேறு சூழ்நிலைகளில் தன்னம்பிக்கையுடன் பேச மற்றும் செயற்பட 100 % ஒலி, ஒளி காட்சிகளுடன் கூடிய பாடத்திட்டம்.

இலகுவான முறையில் ஆங்கிலம் பயிலுங்கள்.

ஆங்கிலப் பேச்சுத் தேர்வு உத்தரவாதம்

**UK** Student Visa , Settlement Visa மூலம் U.K செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

City & Guilds Approved Centre

# DMI COMPUTER EDUCATION

| | | |
|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243 |


# காணவில்லை



விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற V.C. சிவஞானத்தின் அன்புத் தாயார்

**திருமதி தங்கம்மா சுப்பிரமணியம்**

கடந்த 15.04.2011ஆம் திகதி தொடக்கம் காணவில்லை. இவர் இறுதியாக வெள்ளை நிறச் சேலையும், வெள்ளை நிறச் சட்டையும் அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல்களினை அறிந்திருப்பின் கீழ்க் கண்ட தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:
சிவஞானம் கபிலன்
0778329499, 0773611208

விளானை, களபூமி,
காரைநகர்.

(3769)

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

**கணபதிப்பிள்ளை கலாமதி** (அபிராமி)
(கணக்காய்வாளர், .இ.போ.ச., யாழ்.,வவுனியா)



அன்னை மடியில்
02.12.1981

ஆண்டவன் அடியில்
05.05.2006



எங்கள் தவச் செல்வி அபிராமியே!
ஆண்டுகள் ஐந்து ஆனதம்மா
ஆறவில்லை எங்கள் உள்ளம்!
அன்று எங்கள் மனை ஒளியானாய்
இன்று எங்கள் உள்ளத்தில் நிறை ஒளியானாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பிற்கு இலக்கணமாய்
கருணையின் ஊன்று கோலாய்
நட்புக்கு எடு கோலாய்
நீர் வாழ்ந்த நினைவுகளுடன்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி
உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அண்ணிமார், மருமகனிகள்.

சி.கணபதிப்பிள்ளை,
இரத்தினபுரம், கிளிநொச்சி.

## உயர் கல்வி வாய்ப்புக்கு பதிவுகள் மேற்கொள்ளல்

யாழ்ப்பாணம், மே5

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் ஜி.சீ.ஈ. சாதாரணதர, உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்தத் தவறிய மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பை வழங்கும் நோக்குடன் முன்பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். கிளையின் கைதடி நிலையக் கேட்போர் கூடத்தில் இது நடைபெறவுள்ளது. மாணவர்கள் அனைவரையும் கலந்துகொண்டு முன்பதிவை மேற்கொள்ளுமாறு இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் இரா. அகிலன் அறிவித்துள்ளார். (எ)

## பரிசளிப்பு விழா

வண்ணை- சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 57 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆலய மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த விழாவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி.பேரின்பநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் விரிவுரையாளர் ச.லலீசனின் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது.

மேற்படி கழகத்தால் நடத்தப்பட்ட சைவ சமய அறிவுப்பரீட்சை, செயல்முறைப்போட்டி ஆகியவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# யா/வட்டு. இந்துக் கல்லூரி
## பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

யா/வட்டு.இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் (புதிய நிர்வாகிகள் தெரிவு) மேற்படி பாடசாலை மண்டபத்தில் 07.05.2011 பி.ப.2.30 மணிக்குப் பாடசாலை அதிபர் சி.சிவகணேசசுந்தரன் தலைமையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பி.ப.4.30 மணிக்குப் பழைய மாணவர் சங்க ஆரம்பக் கூட்டம் (நிர்வாகத் தெரிவு) இடம்பெறும். பெற்றோர், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் யாவரும் தவறாது சமுகம் தருமாறு கேட்கப்படுகின்றனர்.

செயலாளர்.

# குளிர்த்தி அம்மன் பிரதிஷ்டை

வண். வடகிழக்கு கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் தேவஸ்தானத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 06.05.2011 அன்று மு.ப 11மணியளவில் குளிர்த்தி அம்மனைப் பிரதிஷ்டை செய்ய மகாமாரி அம்பாள் திருவருள் பாலித்துள்ளார். அடியார்கள் தொடர்ந்து ஆசார சீலர்களாக ஒன்பது செவ்வாய்க் கிழமைகள் தாங்களாகவே அபிஷேகம் செய்வதன் மூலம் அம்மன் அருளைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ பிரதிஷ்டை- மு.ப. 11.00 மணி ★ எண்ணெய்க்காப்பு- 11.30- 12.00 மணி
★ பக்தர்கள் அபிஷேகம்- 12.00- 12.30 மணி ★ விஷேட அபிஷேகம்- 12.30- 1.00 மணி

அடியார்கள் அனைவரும் கிரியைகளில் பங்குபற்றி அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யவும். குளிர்த்திக் கஞ்சி அனைவருக்கும் வழங்கப்படும்.

-அறங்காவலர்கள்.


# Computer Express
## Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

**Advances Courses**

| | | |
|---|---|---|
| Diploma in Video Editing | 4Months | 1000/= |
| Diploma in Multimedia | 4Months | 1000/= |

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

**Batch I** - 04.05.2011 9Am or 3pm **Batch II** - 06.05.2011 9Am or 3pm
**Batch III** -07.05.2011 11Am or 2pm **Batch Iv** -08.05.2011 11Am or 2pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444



- தபால் மூலம் -

# ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

20

APRIL. 2011 TO SEPT.2011

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: **0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.05.2011





இந்தியாவில் இருந்து தற்போது இறக்குமதி செய்யப்பட்ட இதுவரை இல்லாத அழகிய பலவர்ண டிசைன்களில் திருமண அழைப்பிதழ்கள்

# திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்
# போஸ்கோ

இல.610/3(252),பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக) தொ.பே: 021 222 0370


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டிக்குண்டு பலகையைப் போல் குடாநாட்டு வீதிகள்



தென்னிலங்கையைச் சேர்ந்த மாணவன் ஒருவனும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் மாணவன் ஒருவனும் ஒருநாள் சந்தித்துக் கதைத்துக்கொண்டிருந்தார்களாம்.

''சப்பாத்துக்களில் சில்லுப் பூட்டி எங்கட றோட்டில் ஓடலாம்'' என்றான் தென்னிலங்கை மாணவன், ''நாங்கள் எங்கட றோட்டில் தினமும் மாலைவேளையில் பாண்டிக் குண்டு விளையாடுறனாங்கள்''-என்றான் யாழ்.மாணவன். 'எண்ணெய்ச் செலவு தான் பிள்ளை வளர்த்தியில்லை' என்றதொரு பழமொழியை எம்மவர்கள் அடிக்கடி சொல்லிக் கொள்வார்கள்.

அது எமது வீதிகளுக்கு மிகவும் பொருத்தமாயிருக்கும். ஏனென்றால் வீதிகளின் அபிவிருத்திக்கு வருடந் தோறும் கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக அரசு அறிவித்துக் கொண்டே இருக்கிறது. ஆனால் எங்கள் வீதிகள் இன்னும் அழுது கொண்டேயிருக்கின்றன.

கிலோ மீற்றருக்கு மில்லியன் கணக்கில் ஒதுக்கீடு செய்யப்படுவதாக அரசு அறிவிக்க ''என்ன தங்கத்திலா றோட்டுப் போடுறியள்'' என்று எதிர்க்கட்சியினர் கிண்டல் செய்தமையும் இந்த இடத்தில் நினைவு கூரத்தக்கதாகும்.

ஒவ்வொரு மழைகாலம் முடிந்ததும் எங்கட றோட்டுக்கள் சின்னா பின்னமாகப் பிளந்து கிடக்கும். ஆங்காங்கு குண்டும் குழியும் பரவியிருக்கும். சின்னவயசில் பாண்டிக்குண்டு விளையாடியதை அது ஞாபகப்படுத்தும். அதற்குள் விழுந்தெழும்பி வீதி விபத்துக்கள் நடக்கிற விபரீதமும் நடந்துகொண்டிருக்கின்றன.

குடாநாட்டில் எந்தப் பகுதிக்குப் போனாலும் எந்த வீதிகளில் காலடி எடுத்து வைத்தாலும் துண்டு துண்டாய் கிழிந்து கிடக்கும் வீதிகளைத்தான் காணமுடிகிறது. ஆனால் யாழ்.ஸ்ரான்லி வீதி மட்டும் 'ஸ்ராண்டட்டானகாப்பெற்றால்' காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய வீதிகளுக்கு மீட்சியே இல்லை.

ஏ-9 வீதியின் நிலை அந்ததோ பரிதாபம். அதில் பயணம் செல்வதால் குலுங்கி இடம்மாறும் எங்கள் குடல், தென்னிலங்கையில் உள்ள றோட்டில போய் ஏறினால் தான் வழமையான இடத்தை வந்தடையும். அந்தளவுக்கு படுமோசமான பரிதாபகரமான நிலையில் வீதிகள் காணப்படுகின்றன.

வலிகாமம் பகுதியாயினும், தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளாயினும் வீதிகள் சரி எதுவுமே இதுவரை அபிவிருத்தி செய்யப்பட்டதாக இல்லை.

மழைக் காலங்களில் அந்தக் குண்டும் குழிகளுக்குள் வெள்ளம் தேங்கி நின்று அதனால் விபத்துக்கள் அதிகரித்து உயிர்கள் தான் பறிபோகின்றன.

சில வீதிகள் கற்கள் பறிக்கப்பட்ட பின்னரும் புனரமைப்புக்காக நீண்ட காலமாகத் தவம் கிடக்கின்றன. ஆனால், வீதிகளின் அபிவிருத்தி ஆஹா, ஓஹோ என்று நடக்கிறது என்று ஏதோ கதையளக்கிறார்கள்.

'கந்தையானாலும் கசக்கிக் கட்டு கந்தலானாலும் தைத்துக் கட்டு' என்று சொல்லிக்கொள்வார்கள். ஆனால் இப்போதெல்லாம் தைத்துக் கட்டுகின்ற நிலையில் கூட எம்மவர்கள் இன்றில்லை. புதிதாக ஒன்றை வேண்டிக் கொள்வார்கள். அந்தளவுக்கு நாகரிகம் வளர்ந்து விட்டது.

ஆனால் வீதிகள் மட்டும் முழுமையான முறையில் திருத்தியமைக்கப்படாமல் உள்ளன. சிலவற்றின் குழிகளை நிரப்பிக்கொள்ள ஆங்காங்கே தார் பொட்டலத்தை வைத்துத் தடவிக் கொள்கின்றார்கள். (கிழிஞ்ச சேலையைத் தைத்துக் கொள்வது போல்)

வருடாவருடம் இவர்கள் தடவிவிட்டுப் போய்விடுவார்கள். மாரி காலம் வரும். அது இவர்கள் தடவியதை சுத்தமாகக் கழுவிக்கொண்டு சென்று விடும். பிறகென்ன முருங்கை மரத்தில் மீண்டும் வேதாளம்தான்.

இப்படியே எங்கள் வீதிகளின் விதி மாறிப் போய் விட்டது. இப்போதெல்லாம் மழைக்காலம் கூட வேண்டாம் ஒரு மழை பெய்தாலே போதும் பழைய குருடி கதவைத் திறவடி நிலைதான் அதுவே எங்களின் தொடர் கதையாக நீள்கின்றது.

சில வீதிகளின் குழிகளைத் தார்பொட்டலத்தால் தடவிப் போட்டு வீதியை முழுமையாகத் திருத்தியமைத்துக்கொடுத்துள்ளோம் என்று கூறி எல்லோருக்கும் காதில பூச்சுத்துகிறார்களாம்.

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வீதிகளின் நிலையை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். குறிப்பாக வரலாற்றுப் பெருமை மிக்க நல்லூர்க் கந்தன் எழுந்தருளியுள்ள திருவீதியைப் பாருங்கள். அதனால் ஒரு நாளைக்கு ஆயிரக் கணக்கானோர் பயணம் செய்கின்றனர். ஏ வீதியின் நிலையோ படுமோசமாக உள்ளது.

'' தென்னிலங்கை மக்களின் வாழ்க்கை தங்கத்திலானதாகயிருந்தால், வடக்கு மக்களின் வாழ்க்கை தகரத்திலானதாக இருக்கக்கூடாது'' என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடிக்கடி சொல்லிக்கொள்வார்.

எங்கட வாழ்கை தகரத்திலானது என்றாலும் பரவாயில்லை வீதிகளின் சீர்கெட்ட நிலைமையைப் பார்த்தால் அது நரகத்திலானதாக அல்லவா இருக்கிறது. ஏனென்றால் நகர வீதிகளின் அபிவிருத்தியே இதுவரை முழுமையாக நகரவில்லையென்றால் நகரின் வெளிப்புறப் பிரதேசங்களின் வீதிகளின் அவஸ்தையை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

**கவிநேசன்**

கொடிய போர் எம்மை விட்டு விடை பெற்று 2 வருடங்களை நெருங்கியுள்ளது. ஆனால் என்னதான் அபிவிருத்தியை எம்மக்கள் கண்ணாரக்கண்டு மகிழ்ந்திருக்கிறார்கள்? பூநகரி - சங்குப்பிட்டிப் பாலத்தின் பிரமாண்டமான புனரமைப்பைக் கண்டு புளகாங்கிதம் அடைந்த எம் மக்கள் அந்த வீதியின் கேவலம் அவலம் கண்டு மறுகணமே முகம்சுழித்துப் போனார்கள். இதுவா அபிவிருத்தியின் இலட்சணமென்று சலித்துக்கொண்டார்கள்.

வடக்கின் அபிவிருத்தியை அதன் வண்டவாளத்தைப் பார்த்த உடனே எடை போட்டுக்கொள்ளக் கூடாது. அதைப் பார்க்கப் பார்க்கத் தான் தெரியும் - விளங்கும். அதன் பின்னர்தான் இதுவா அது என்று கோணல் கேள்வியெழும். அண்மையில் நடைபெற்ற யாழ். செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த ஆண்டு குடாநாட்டு வீதிகளைப் புனரமைக்கப் பல மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

''எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது'' என்று பகவத் கீதையில் கிருஷ்ணபராமத்மா கூறிய உபதேசத்தை உள்ளத்தில் நினைத்தபடி எது இனிமேல் நடக்கவேண்டுமோ அதை நடக்க வைப்பதற்கு முடியுமானவரை முயற்சி செய்யுங்கள். இனிவரும் காலத்திலாவது எங்கள் வீதிகளின் தலைவிதியை மாற்றியமையுங்கள்.

வீதிகளின் ஓட்டைகளைப் பொத்தித் தடவுவதற்கு முயற்சி செய்யாமல் முழுமையான முறையில் அவற்றை மாற்றியமைத்து மக்களின் சீரான போக்குவரத்துக்கு ஒழுங்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். இதற்கு உரிய திணைக்களங்கள், அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.




யாழ்ப்பாணம் மே 5

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 1008 சங்காபிஷேகம் இடம்பெறும். இதன் போது கந்தரனுபூதி மனனம் செய்தவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ம-313)

* * *

யாழ்ப்பாணம், மே 5

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 3ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன.

திருவிழாக் காலத்தில் தினமும் மாலை 6 மணிக்கு பிரம்மச்சாரி சிவ.வை.நித்தியானந்தசர்மா 'தேவி மகத்துவம்' எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நிகழத்தி வருகின்றார்.

தொடர்ந்து 15 தினங்கள் திருவிழாக்கள் இடம் பெறும்.

(ம-313)

* * *

யாழ்ப்பாணம், மே 5

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுர திருக்குடமுழுக்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வுகள் அதிகாலை 5 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி மூல மூர்த்திகளுக்கு அபிஷேகப் பூசைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பிரதான கும்பங்கள் வீதிப் பிரதட்சணம் செய்யும் நிகழ்வும் இடம் பெறும்.

(ம-313)

* * *

யாழ்ப்பாணம், மே 5

இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் மணவாளக்கோல சங்காபிஷேகம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு பூர்வாங்கக் கிரியைகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு 1008 சங்காபிசேக விசேட பூசைகள் இடம்பெற்று மாலை 5 மணிக்கு விசேட சதுர்த்திப் பூசைகள், வசந்த மண்டபப் பூசை, திருஊஞ்சல் என்பன நடைபெறும். (ம-313)

## ஆன்மிக உரை

''உலக மயமாக்கலில் ஆன்மிகம்'' என்னும் தொனிப்பொருளில் வைத்திய கலாநிதி சராபவான் யாழ்.பல்கலைக் கழகத்தில் ஆன்மீக உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார்.

வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயிசேவா நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணிவரை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் வரவேற்புரையை நிகழ்த்துவார். அறிமுக உரையை வைத்தியர் திருமதி ஜெ.கணேச மூர்த்தி வழங்குவார்.

வைத்திய கலாநிதி சராபவானின் உரையை யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளி விவரவியல்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.ஸ்ரீசற்குணராஜா மொழி பெயர்த்து வழங்குவார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் இளைஞர்கள் ஐவர் லண்டனில் கைதாகினர்

லண்டன், மே 5

பிரிட்டன் தலைநகரான லண்டனில் வசித்து வந்த பங்களாதேஷ் இளைஞர்கள் ஐந்து பேரை பிரிட்டன் பொலிஸார் தீவிரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்துள்ளனர்.

அவர்களிடம் விசாரணை நடத்தியதில் பிரிட்டனின் வடகிழக்குப் பகுதியைச் சேர்ந்த கம்பிரியா ஹெல்லா பீல்ட் அணுமின் நிலையத்தை தாக்க அவர்கள் முடிவு செய்திருந்தமை கண்டறியப்பட்டது.

அணு உலைகளுக்குத் தேவையான புளுட்டோனியம் இப்பகுதியில் பெருமளவில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இப்பகுதி கடந்த 1940ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டுகொண்டிருக்கிறது.

இப்பகுதியில் மிகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும் கைதுசெய்யப்பட்டுள்ள இளைஞர்கள் அளித்த தகவலால் பிரிட்டிஷ் இரகசிய பொலிஸார் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை அல்-குவைதா தீவிரவாதி ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பின்னர் இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதால் இந்த இளைஞர்களுக்கும் மற்ற தீவிரவாத குழுக்களுக்குமிடையே தொடர்பு ஏதும் உள்ளதா என பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் அணுமின் நிலையத்தை சுற்றிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.



அமெரிக்காவில் தேசிய ஆசிரியர் தினத்தையொட்டி வாஷிங்டனில் உள்ள ரோஸ் மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி ஒபாமா ஆசிரியை ஒருவருக்கு விருது வழங்கி கௌரவிக்கிறார்.

# தீவிரவாதத்துக்கு எதிரான போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை

## பாக்.ஜனாதிபதி சர்தாரி தெரிவிப்பு

வாஷிங்டன், மே 5

பயங்கரவாதத்துக்கு எதிரான எங்களின் போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. எனினும் முடிவுக்கு வருவதற்கான தெளிவான அறிகுறி தென்பட ஆரம்பித்துள்ளது என பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:

''அமெரிக்க சிறப்புப் படையினர்தான், ஒசாமா பின்லேடன் மீது தாக்குதல் நடத்தினர். இதில், பாகிஸ்தான் படையினரும் பங்கேற்றனர் எனக் கூறப்படும் தகவல் தவறானது.

ஒசாமா பதுங்கியிருந்த இடம், பாகிஸ்தான் அரசுக்கு தெரியும் என்றும் அமெரிக்கப் படையினருடன், பாகிஸ்தான் படையினரும் இணைந்துதான் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்றும் சிலர் கூறி வருகின்றனர்.

ஒசாமா பின்லேடன் பதுங்கியிருந்த இடம் குறித்த தகவல், பாகிஸ்தான் அதிகாரிகளுக்குத் தெரியாது. அமெரிக்க இராணுவத்தின் சிறப்புப் படையினர் மட்டுமே, இந்தத் தாக்குதலை நடத்தினர்.

வேறு எந்த நாட்டுப் படையினரும் இதில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. பயங்கரவாதத்தால் பாகிஸ்தான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது மிகப் பெரிய தீமை ஒழிந்திருப்பது, பாகிஸ்தான் உட்பட பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து நாடுகளுக்கும் திருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தீவிரவாதிகளின் தாக்குதலால், பாகிஸ்தானைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸாரும், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி மக்களும் கொல்லப்பட்டுள்ளனர். எங்கள் சந்ததிகளின் சமுதாய வளர்ச்சியையும் இதனால் நாங்கள் இழந்துள்ளோம்.

பயங்கரவாதத்துக்கு எதிரான எங்களின் போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. ஆனால், முடிவுக்கு வருவதற்கான தெளிவான அறிகுறி தற்போது தென்பட ஆரம்பித்துவிட்டது.

இவ்வாறு சர்தாரி கூறினார்.

"ஒசாமா பதுங்கியிருந்த இடம், பாகிஸ்தான் அரசுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கக்கூடும் என தனிப்பட்ட முறையில் நான் கருதுகிறேன்'' என இது குறித்து அமெரிக்க முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் ஜேம்ஸ் ஜோன்ஸ் கூறியுள்ளார்.

# பாகிஸ்தானில் 6 அல் குவைதாவினர்; அமெரிக்க புலனாய்வுக் குழு தகவல்

வாஷிங்டன், மே 5

''பாகிஸ்தானில், ஆறு அல்-குவைதா தீவிரவாதிகள் தங்கியுள்ளனர்'' என அமெரிக்க புலனாய்வு நிரந்தரத் தேர்வுக் குழுத் தலைவர் மைக் ரோஜர்ஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, வாஷிங்டனில் அவர் அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:

இஸ்லாமாபாத் அருகில், எப்படி அல்-குவைதா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா வசித்து வந்தார் என்ற கேள்விக்கான பதிலை பாகிஸ்தானிடம் கேட்கிறோம். அவர்கள் உதவி செய்தனரா? இல்லையா? என்ற யூகத்திற்கு நான் வரவில்லை.

ஆனால், இந்தக் கேள்வியை கேட்போம். அமெரிக்க மக்களுக்கு இதைத் தெரிந்துகொள்ளும் உரிமை உள்ளது.

நம் நாட்டின் பாதுகாப்புக்கு ஊறுவிளைவிப்பவர்கள் இன்னும் பாகிஸ்தானில் உள்ளனர் என்பதை மறந்துவிடக்கூடாது. நம்பத்தகாத, மோசமான மக்கள் இன்னும் பாகிஸ்தானில் உள்ளனர்.

பாகிஸ்தானிடம் கடுமையான கேள்விகள் கேட்காமல் விட்டுவிடுவோம் என்று கருதவேண்டாம். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஜனாதிபதியாக ஜோர்ஜ் புஷ் இருந்தார். அப்போதிருந்தே தகவல்கள் திரட்டும் பணி இடம்பெற்றுவந்துள்ளது.

ஒசாமா பின்லேடனை பிடிக்கச் செய்த சூழ்ச்சி மிகவும் தந்திரம் வாய்ந்தது.- ரோஜர்ஸ் தெரிவித்தார்.


## சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்

05.05.2011 ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் எமது பாடசாலை சங்கீத ஆசிரியை

திருமதி மணிவதனம் திருஞானசம்பந்தன்

SLTS 2.1 (சங்கீத வித்துவான்)

அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் இன்று (05.05.2011) 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்

ஏழாலை. யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்.

(3837)



## தவறிவிட்டது

பிரம்படி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியுடைய இராசேந்திரம் சசிந்தன் என்பவரது தே.அ.அட்டை (803665409V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் பஸ்ஸில் பேர்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.: 0776366027


# ஆர்ஜென்டினாவில் ரயிலுக்கு தீ வைப்பு

பியூனாஸ் ஏர்ஸ், மே 05

ஆர்ஜென்டினா தலைநகர் பியூனாஸ் ஏர்ஸ் புறநகரில் அலுவலகங்கள் உள்ளன. இங்கு பணிபுரியும் ஊழியர்கள் ரயிலில் சென்று வருகின்றனர்.

அப்பகுதியில் ஒரு ரயில் தடம் புரண்டது. இதைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை அங்கு பயணிகள் ரயில் வருகை தாமதமானது. இதனால் ஆத்திரமடைந்த பயணிகள் ஹீடோ, ரமோஸ், மெஜியா, கியூடாடெலா ஆகிய 3 ரயில் நிலையங்களில் தகராறில் ஈடுபட்டனர்.

ரயில் நிலைய அலுவலகங்களின் மீது சரமாரியாகக் கல்வீசி தாக்கினர். இதில் ரயில் என்ஜின் சாரதியும், டிக்கெட் பரிசோதகரும் காயமடைந்தனர். மேலும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில்களுக்கு தீ வைத்தனர்.

இதில் 3 ரயில் நிலையங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 8 ரயில் பெட்டிகள் எரிந்து சேதமடைந்தன.. தகவல் அறிந்ததும் பொலிஸார் அங்கு விரைந்து சென்று அமைதியை ஏற்படுத்தினர்.


## கேள்விப் பத்திர அறிவித்தல்

### இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

### கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியில் உள்ள சைவ உணவகத்தினை குத்தகை அடிப்படையில் நடத்துதல்

01. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் நிர்வகிக்கப்படும் கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியில் அமைந்துள்ள சைவ உணவகத்தினைக் குத்தகை அடிப்படையில் நடத்துவதற்குத் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02.கேள்விப்பத்திரங்கள், உணவகத்தை நடத்துவதற்கான நிபந்தனைகள்,கேள்விப்பத்திரத்திற்கான கட்டணத்தொகை தொடர்பான அனைத்து விவரங்களையும் இல 248, 1/1, காலி வீதி, கொழும்பு- 04 என்ற முகவரியில் அமைந்துள்ள எமது திணைக்களத்தில், உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) நிர்வாக உத்தியோகத்தர் இடமிருந்து நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்விப் பத்திரங்கள் 2011 மே மாதம் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

04. மேலதிக விவரங்களை 011-2555403/ 011-2554975 என்ற தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,
248, 1/1, காலி வீதி, கொழும்பு-4

சாந்தி நாவுக்கரசன்,
பணிப்பாளர்.

(சி/378133)



## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

03.05.2011

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2389

வெற்றி எழுத்து: F

வெற்றி எண்கள்: 7 0 8 3 2 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | F | 7 | 0 | 8 | 3 | 2 | 9 | ரூபா.11,251,859/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 7 | 0 | 8 | 3 | 2 | 9 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 0 | 8 | 3 | 2 | 9 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | | | | 8 | 3 | 2 | 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 132 |
| 4 பரிசுகள் | | | | | 3 | 2 | 9 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1283 |
| 5 பரிசுகள் | | | | | | 2 | 9 | ரூபா. 100/= | பரிசுகள் 12563 |
| 6 பரிசுகள் | | | | | | | 9 | ரூபா. 20/= | பரிசுகள் 125087 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 7 | 0 | 8 | 3 | 2 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | | 7 | 0 | 8 | 3 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 129 |
| 9 பரிசுகள் | | 7 | 0 | 8 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1270 |
| 10 பரிசுகள் | | 7 | 0 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12390 |
| 11 பரிசுகள் | F | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 50225 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 11,561,040.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 12,348,391.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை

234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்லேடன் கொல்லப்பட்டதை நிரூபிக்க உடலின் படத்தை வெளியிட அமெ.முடிவு

வாஷிங்டன்,மே5

பின்லேடன் கொல்லப்பட்டது உண்மைதானா என்ற சந்தேகம் வலுத்து இருப்பதை அடுத்து அவரின் படத்தை வெளியிட அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தானில் பதுங்கி இருந்த பின்லேடனை அமெரிக்க படைகள் கடந்த திங்கட்கிழமை சுட்டுக் கொன்றன. பின்னர் பின்லேடன் பிணத்தை எடுத்து சென்ற அமெரிக்க படையினர் அதை கடலில் மூழ்கடித்து அடக்கம் செய்து விட்டதாக கூறினார்கள்.

பின்லேடன் கொல்லப்பட்டதும் அவரது பிணம் படம் ஒன்று இணைய தளங்களில் வெளியானது. அது போலி படம் என தெரிய வந்தது. ஆனால் பின்லேடன் பிணத்தின் படத்தை இதுவரை அமெரிக்கா வெளியிடவில்லை. எனவே உண்மையிலேயே பின்லேடன் கொல்லப்பட்டு விட்டாரா? இல்லையா? என்ற சந்தேகம் உள்ளது.

இந்தச் சந்தேகம் பாகிஸ்தானில் பலமாகவே எழுந்துள்ளது. பாகிஸ்தானைச் சேர்ந்த பலரும் பின்லேடன் கொல்லப்படவில்லை உயிருடன்தான் இருக்கிறார் என்று கூறி வருகின்றனர். பின்லேடன் படம் மிகவும் கோரமாக இருந்தது. இதை வெளியிட்டால் ஒரு தரப்பு மக்களின் மனது புண்படும் என்பதால் தான் வெளியிடவில்லை என்று அமெரிக்க



அதிகாரிகள் கூறினார்கள்.

ஆனால் இப்போது பின்லேடன் கொல்லப்பட்டது உண்மைதானா என்ற சந்தேகம் வலுத்து இருப்பதை அடுத்து படத்தை வெளியிட முடிவு செய்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ. இயக்கநர் லியோன் பெனட்டா கூறும் போது, பின்லேடன் படத்தை வெளியிடுவதா என்பது குறித்து இதுவரை இறுதி முடிவு எடுக்கவில்லை.

ஆனால் படம் வெளியிட வேண்டியது அவசியமானது என்று கருதும் நிலை வந்திருப்பதால் படத்தை வெளியிட ஆலோசித்து வருகிறோம். ஆனால் எப்போது வெளியிடுவோம் என்பதை இப்போது தெரிவிக்க முடியாது - என்றார்.

இதற்கிடையே அமெரிக்க ஜனநாயக கட்சி செனட் உறுப்பினர்கள் 2 பேர் பின்லேடன் படத்தை வெளியிட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்து உள்ளனர்.

வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறும்போது -

பின்லேடனின் பிணமாக கிடக்கும் 3 பிரிவான படங்கள் எங்களுக்கு கிடைத்து உள்ளன. அதில் முதல் பிரிவு படங்கள் இறந்து கிடப்பது பின்லேடன் தான் என்பதை தெளிவாகக் காட்டுகின்றன. அவருடைய தலை மேல் பகுதி வெடித்து சிதைந்து உள்ளது. 2 கண்களிலும் காயம் உள்ளது. மொத்தத்தில் படம் கோரமாக உள்ளது. இந்தப் படம் பத்திரிகைகளுக்கு உகந்ததாக இல்லை. அடுத்து அவரது உடல் கடலில் அடக்கம் செய்யும் படமும் உள்ளது - என்றார்.

அமெரிக்க செனட் சபை தேசிய பாதுகாப்புக் குழுத் தலைவர் ஜோ லிபர்மன் கூறும்போது -

பின்லேடன் படத்தை வெளியிடுவது அவசியமானது என்று கருதினால் நிச்சயம் வெளியிடுவோம். ஆனால் பின்லேடன் சாகவில்லை என்று அல் குவைதா இயக்கத்தினர் அறிவித்தால் கொல்லப்பட்ட பின்லேடனின் படத்தை நாங்கள் நிச்சயம் வெளியிட்டு பின்லேடன் மரணத்தை உறுதி செய்வோம் - என்றார்.

## கடாபியின் புதல்வரின் உடல் அடக்கம்

திரிபோலி, மே 05

விமான குண்டு வீச்சில் கொல்லப்பட்ட கடாபி புதல்வர் உடல் அடக்கம் செவ்வாய்க்கிழமை நடந்தது.

லிபியாவில் ஜனாதிபதி மும்மர் கடாபிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். போராட்டக்காரர்களை ஒடுக்க கடாபி இராணுவத்தைப் பயன்படுத்தி வருகிறார்.

இதனால் லிபிய இராணுவத்தினர் மீது அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் குண்டு வீசி தாக்கி வருகின்றன. நேட்டோ படைகள் குண்டு வீச்சில் லிபிய ஜனாதிபதி மும்மர் கடாபியின் புதல்வர் இறந்தார்.

அவருடைய உடல் அடக்கம் செவ்வாய்க்கிழமை தலைநகர் திரிபோலி அருகே உள்ள அல்-ஹனி இடுகாட்டில் நடந்தது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

அவர்கள் ''கடாபி வாழ்க, கடாபி எங்களுக்கு வழி காட்டவேண்டும்'' என்று கோஷமிட்டனர். அப்போது ஒரு கறுப்பு நிற அம்புலன்ஸில் கடாபி புதல்வர் உடல் கொண்டுவரப்பட்டது.

கடாபியின் தந்தை உடல் அடக்கம் செய்யப்பட்ட இடம் அருகே கடாபி புதல்வர் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அப்போது அங்கு கூடியிருந்த மக்கள் ''அல்லாஹூ அக்பர்'' என்று முழக்கமிட்டனர். சிலர் துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## அனு ஆலைப் பரிசோதகர் இராஜினாமா?

சுவிஸ் அணு ஆலை பாதுகாப்பு பரிசோதகர் தற்காலிக அடிப்படையில் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.


தமக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து தன்னார்வ அடிப்படையில் அணு ஆலைப் பரிசோதகர் பீட்டர் ஹப்சிச்மிட் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அணு ஆலை நிறுவனத்துடன் பரிசோதகருக்கு நெருங்கிய தொடர்பு காணப்படுவதாக முன்னணி பத்திரிகையொன்று குற்றம் சுமத்தியிருந்தது.

அணு ஆலைகளின் பரிசோதகராக இதுவரை காலமும் துணை பரிசோதகராக கடமையாற்றிய எனி எக்ச்சார்ட் சிசெக் கடமையாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆலை பரிசோதகருக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சக்தி வள அமைச்சு அறிவித்துள்ளது.

## வரவேற்பு....



ஜோர்ஜியா வந்திருந்த லிதுவேனிய ஜனாதிபதி டாலியாகிரைபோஸ்கைட்டை (வலது) தலைநகர் திப்பிலிசி நகரில் இராணுவ மரியாதையுடன் ஜோர்ஜிய ஜனாதிபதி மைக்கேல் ஷகாஸ்வாலி வரவேற்கிறார்.

## ஒசாமாவின் இறுதிச் சடங்கு குறித்து இஸ்லாமிய தலைவர்கள் கேள்வி

கெய்ரோ, மே. 05

அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பின்னர் அவருக்கு செய்யப்பட்ட இறுதிச் சடங்குகள் குறித்து இஸ்லாமியத் தலைவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட பின்லேடனை கடலில் அடக்கம் செய்தமை இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு விரோதமானது என்று இஸ்லாமிய மதத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் செயலால் அல்-குவைதா அமைப்பினர் மேலும் பழிவாங்கும் செயல்களில் ஈடுபட வாய்ப்புள்ளது என அவர்கள் அச்சம் தெரிவித்தனர்.

இறந்த பின்லேடனின் உடலை கடலில் அடக்கம் செய்ததன் மூலம் இஸ்லாமியக் கோட்பாடுகளை அமெரிக்கர்கள் அவமதித்துள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# பின்லேடன் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் சபதத்தை முடித்துக்கொண்ட பள்ளி ஆசிரியர்

ஒசாமா பின்லேடன் பிடிபடும் வரை தாடியை மழிக்க மாட்டேன் என சபதம் மேற்கொண்டு, இப்போது அவர் சுட்டுக் கொல்லப்பட்டதால் சபதத்தை முடித்துக்கொண்டார் அமெரிக்காவைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர் ஒருவர்.

அமெரிக்காவின் கிழக்கு வெனாச்சே பகுதியைச் சேர்ந்தவர் கேரி வெட்லி. எப்ராதா என்ற இடத்திலுள்ள நடுநிலைப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி தீவிரவாதிகள் அமெரிக்காவைத் தாக்கியதில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்தனர். இச்சம்பவம் வெட்லியை பெரிதும் பாதித்தது. அன்று அவர் ஒரு சபதம் மேற்கொண்டார்.

அல்-குவைதா தீவிரவாதி பின்லேடன் பிடிபடும்வரை முகச்சவரம் செய்ய மாட்டேன் என்பதே அந்தச் சபதமாகும்.

ஆனால் பின்லேடன் எளிதில் பிடிபடவில்லை. சுமார் 10 ஆண்டுகள் கடந்துவிட்டதால் வெட்லி முகத்தில் தாடி பெரியளவில் வளர்ந்துவிட்டது. அவர் பின்லேடன் போல காட்சியளித்தார். இந்த நிலையில்தான் பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதுகுறித்து வெட்லி நிருபர்களிடம் கூறுகையில், அமெரிக்கா நகரம் தாக்கப்பட்டதும், பின்லேடனைப் பிடிக்க அமெரிக்க அரசு தீவிரமாகச் செயல்பட்டது. எனவே அவர் ஒரு மாதத்திலோ அல்லது 2 மாதங்களிலோ பிடிபட்டுவிடுவார் என்று நினைத்தேன்.

அதன்பின்னர் தாடியை எடுத்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்திருந்தேன். ஆனால் 10 ஆண்டுகள் கடந்துவிட்டன. பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட தகவல் அறிந்ததும் சப்தமாகக் கூச்சலிட்டு எனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டு [illegible] என்றார் அவர்.

## அபோதாபாத் வீட்டைக் கட்டிய நபருக்கு பொலிஸார் வலைவீச்சு

இஸ்லாமாபாத், மே5

அபோதாபாத் வீட்டை ஐந்தாண்டுகளுக்கு முன்னர் கட்டிய, வசிரிஸ்தான் பகுதியைச் சேர்ந்த நபரை, பாகிஸ்தான் பாதுகாப்புப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

* பின்லேடன் தங்கள் நாட்டில்தான் இருந்திருக்கிறார் என்பதைக் கூட, பாகிஸ்தான் அரசால் கண்டுபிடிக்க முடியவில்லையே என அந்நாட்டுப் பத்திரிகைகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

* ''பாகிஸ்தான் அரசு, தன் மண்ணில் வாழ்ந்த பின்லேடனைத் தானே வேட்டையாடியிருக்க வேண்டும். அல்-குவைதாவால் அமெரிக்கா மட்டுமல்லாமல் பிற நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன'' என்று ஒரு பத்திரிகை கூறியுள்ளது.

* ''பல ஆண்டுகளாக பாகிஸ்தான் அரசு மறுத்துவந்த போதிலும் இறுதியில் பின்லேடன் பாகிஸ்தானில்தான் கண்டுபிடிக்கப்பட்டார். இன்னும் பல நகரங்களில் முக்கிய தீவிரவாதிகள் தங்கியிருக்கக்கூடும்'' என மற்றொரு பத்திரிகை தெரிவித்துள்ளது.

* பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திலுள்ள தனது தூதரகத்தையும், பெஷாவர், லாகூர், கராச்சி ஆகிய நகரங்களிலிருந்த துணைத் தூதரகங்களையும் அமெரிக்கா இழுத்து மூடிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன
05 மே 2011 வியாழக்கிழமை

# மரண அறிவித்தல்



## திருமதி
## கந்தசாமி இராசமலர்

வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை வீதி, வட் டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி இராசமலர் (மைனா) (02.05.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை கந்தசாமி (இ.போ.ச.) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பிறேமநிதி மற்றும் ரஞ்சன் (கனடா), மோகனதாஸ் (சுவீடன்), விஜயதாஸ் (லண்டன்), சற்குணராசா (லண்டன்), செல்வமலர் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசேந்திரம், வாணி, சுமதி, வத்சலா, யசோதா, வசீகரன், நாகப்பிரபா - கிரிந்தன், சித்திராரூபி-சுகிதன், ஷாமினி-வெங்கடேஷ், காலஞ்சென்ற ஜீவதாசன் மற்றும் மாலினி, ஜீவரேகா, ரூபமோகன், ஜீவராஜன்- மோகனா, ஜீவகௌரி-சிவகுமார், சுபத்திரா காலஞ் சென்ற தணிகாசலம் ஆகியோரின் மாமியும் சுதா, ரொபின்சன், கோபாலகிருஷ்ணர் கவிதா, ரூபன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் காலஞ்சென்றவர்களான சந்திரன், துரைராசா மற்றும் சகுந்தலாதேவி, ராணி, கனகேஸ்வரி, இந்திரன், காலஞ்சென்ற ஜீவரட்ணம் மற்றும் சிதம்பரநாதன் சுசீலாதேவி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, ஸ்ரீநகுல மீரா, சண்முகநாதன், நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுதர்சன், நிரோசன், நிலக்ஸன், ரொபினா, அனுஷன், அபிவர்சினி, நிதுஷன், துஷானா, விதுஷன், யதுஷன், பிரனுகா, பிரசாத், டிசாத், ஆகாஸ், ராகவி, ரித்திகா, கமலதர்சி, ஆரனியா, சாருஜன், சாருஹான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2011) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தெல்லிப்பழை விதி சங்கரத்தைச் சந்தி,*
*வட்டுக்கோட்டை. தொ.பே.: 0213211384, 0758088137*

(48,20,24)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் கனிமொழிக்கு அழைப்பாணை

புதுடில்லி,மே 5

2ஜி அலைக்கற்றை வழக்கு தொடர்பாக நாளை நேரில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு முதல்வர் கருணாநிதியின் மகளும் மாநிலங்களவை தி.மு.க. சட்டசபை உறுப்பினருமாகிய கனிமொழிக்கு அமுலாக்கத்துறை நேற்றுமுன்தினம் அழைப்பாணை அனுப்பியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இதே வழக்கில் தொடர்புடைய கலைஞர் ரி.வி. நிர்வாக இயக்குநர் சரத்குமார், ஸ்வான் தொலைத்தொடர்பு மேம்பாட்டாளர் உஸ்மான் பால்வாவின் சகோதரர் ஆசிஃப் பால்வா, குசேகாவோன் பழங்கள் மற்றும் காய்கறிகள் நிறுவனத்தின் இயக்குநர் ராஜீவ் அகர்வால், சினியுக் நிறுவன இயக்குநர் கரீம் மொரானி ஆகியோருக்கும் அழைப்பாணைகள் அனுப்பபப்பட்டுள்ளன.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பாக பண மோசடித் தடுப்புச் சட்டத்தின் (பி.எம்.எல்.ஏ.) கீழ் இந்த அழைப்பாணை அனுப்பபப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பணப்பரிவர்த்தனைகள், வருவாய் ஆதாரங்கள், சொத்துகள் பற்றிய ஆவணங்களையும் கனிமொழி உள்ளிட்டோரிடம் அமுலாக்கத்துறை கேட்டிருப்பதாகத் தெரிகிறது. 2ஜி ஒதுக்கீட்டால் முறைகேடாக லாபமடைந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் டி.பி.ரியால்டி நிறுவனத்திடமிருந்து சினியுக் நிறுவனத்தின் வழியாக கலைஞர் ரி.வி.க்கு 200 கோடி ரூபா பணம் கைமாறியதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக கலைஞர் ரி.வி.யில் தலா 20 சதவீத பங்குகளை வைத்திருக்கும் கனிமொழி, சரத்குமார் ஆகியோரிடம் அமுலாக்கத்துறை அதிகாரிகள் விசாரிப்பார்கள் எனத் தெரிய வருகிறது. இந்த வழக்கை ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்பில் சி.பி.ஐ. அமைப்பும் விசாரித்து வருகிறது.

இதன் பின்னர் கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி தாக்கல் செய்த துணைக் குற்றப்பத்திரிகையில், 2ஜி முறைகேடு தொடர்பான சதியில் உடந்தையாக இருந்ததாக கனிமொழி மீது சி.பி.ஐ. குற்றம்சாட்டியது. சரத்குமார், மொரானி உள்ளிட்ட 5 பேரின் பெயர்களும் துணைக் குற்றப் பத்திரிகையில் இடம்பெற்றிருந்தன.

இவர்கள் 5 பேரும் நாளை சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று அழைப்பாணை அனுப்ப சி.பி.ஐ. நீதிபதி ஓ.பி.சைனி அப்போது உத்தரவிட்டார். இந்த நிலையில் இவர்கள் 5 பேருக்கும் அமுலாக்கத்துறையும் அழைப்பாணை அனுப்பியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# அவதூறுச் செய்தி வெளியிட்ட அ.தி.மு.க. நாளேடு மீது வழக்கு

சென்னை, மே. 5

உண்மைக்கு மாறாகவும் தமிழக மக்களைத் திசை திருப்பி குழப்பம் ஏற்படுத்தவும் மக்கள் மத்தியிலும் வாக்கு எண்ணிக்கைக்குச் செல்ல இருக்கும் அலுவலர்கள் மத்தியில் பீதியை உருவாக்கவும் திட்டமிட்டு வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் செய்தி வெளியிட்ட நமது எம்.ஜி.ஆர். நாளேட்டின் மீதும் சம்பந்தப்பட்டவர்கள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக முதலமைச்சர் கருணாநிதி கண்டன அறிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

ஜெயலலிதாவை நிறுவுநராகக் கொண்டு வெளிவரும் அ.தி.மு.க.வின் நமது எம்.ஜி.ஆர். நாளேட்டில், 3.5.2011 அன்று வாக்கு எண்ணிக்கையைச் சீர்குலைக்கத் திட்டமா? தேர்தல் ஆணையம் கடும் அதிர்ச்சி என்று தலைப்பிட்டு தி.மு.க. மீது அவதூறுச் செய்தி வெளியிடப் பட்டுள்ளது.

### கருணாநிதி கண்டனம்

இந்தக் சதிக்கூட்டம் பற்றி தேர்தல் ஆணையத்திற்கு தகவல் கிடைக்கவே, உண்மைகளைக் கண்டறியும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதென்றும் சொல்லப்பட்டுள்ளது.

நாளேட்டில் வெளியிடப்பட்ட செய்தியில், தேர்தல் ஆணையத்தையும் இணைத்து, உண்மைகளைக் கண்டறியும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் அப்படி முயற்சி மேற்கொண்டு, உண்மையைக் கண்டறிந்திருந்தால், அதனை உடனடியாக அந்த ஆணையம் வெளியிடும் என்றும், உண்மைக்கு மாறானது என்று உணர்ந்தால், தேர்தல் ஆணையம், சம்மந்தப்பட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் என்றும் நம்புகிறேன், தமிழக மக்களும் அதனையே எதிர்பார்க்கிறார்கள்.

இவ்வாறு அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (வ)

# பாகிஸ்தானுக்குள் அமெரிக்கா அத்துமீறி நுழைந்துள்ளது

### திருமாவளவன்



சென்னை,மே 5

அமெரிக்கப் படையினர் பாகிஸ்தானுக்குள் நுழைந்து அல்குவைதா தலைவர் ஒசாமா பின் லேடனை கொலை செய்தமை அத்துமீறிய செயல் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சென்னையில் நேற்று செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந்தச்செயல் அமெரிக்க அரச பயங்கரவாதம் என்றும், இன்னொரு நாட்டின் இறையாண்மையில் தலையிடும் அமெரிக்காவின் இத்தகைய போக்கைக் கண்டிப்பதாகவும் அவர் கூறினார். (வ)

### சந்திப்பு...



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல்கலாம் மற்றும் பீகார் முதல்வர் நிதிஸ் குமார், ரவீந்திர பவனில் நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினர் குழு நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# சுப்பிரமணிய சுவாமியின் கோரிக்கையை ஏற்க சி.பி.ஐ.அடியோடு மறுப்பு

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் தன்னை அரசு வழக்கறிஞராக நியமிக்க வேண்டும் என்ற ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணிய சுவாமியின் கோரிக்கை சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என சி.பி.ஐ. தனது பதில் மனுவில் தெரிவித்துள்ளது.

அரசு வழக்கறிஞராக நியமிக்க வேண்டும் என்ற சுவாமியின் கோரிக்கை சட்டத்துக்கு உட்பட்டதல்ல. அவரது தனிப்பட்ட முறைப்பாட்டைத் தனியாக விசாரிக்கலாம் என சி.பி.ஐ. நீதிபதி ஓ.பி.சைனியிடம் சி.பி.ஐ. தெரிவித்தது.

மூத்த வழக்கறிஞர் யு.யு. லலித்தை 2ஜி வழக்கில் சிறப்பு வழக்கறிஞராக உச்சநீதிமன்றம் ஏற்கனவே நியமனம் செய்துள்ளது என்று சி.பி.ஐ. தனது பதிலில் குறிப்பிட்டுள்ளது.

# ஹெலியுடன் காணாமற்போன அருணாச்சல முதலமைச்சர் மரணம்; சிதைவுற்ற நிலையில் உடற்பாகங்கள் கண்டுபிடிப்பு



இட்டாநகர்,மே.5

ஹெலியுடன் காணாமல் போன அருணாச்சல பிரதேச காங்கிரஸ் முதலமைச்சர் டோர்ஜி காண்டு மரணமடைந்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதல்வர் இறந்து 4 நாள்களுக்கு மேல் கடந்துவிட்டதால் உடல்கள் உருக்குலைந்த நிலையிலேயே மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து மேலும் மீட்புப் படை வீரர்கள் அங்கு அனுப்பபப்பட்டனர். அவர்கள் ஹெலிகாப்டரின் சிதைந்த பாகங்களுக்கு இடையில் இருந்து 3 உடல்களை மீட்டனர். அது யாருடைய உடல்கள் என அடையாளம் காணப்பட்டு வருகிறது. ஏனைய 2 உடல்களையும் மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அமைச்சர் கடந்த 30 ஆம் திகதி தவாங் என்ற இடத்தில் இருந்து இட்டா நகருக்கு ஹெலிகொப்டரில் புறப்பட்டார். இது 4 இருக்கைகளுடன் ஒரு என்ஜின் மட்டுமே கொண்ட ஹெலிகொப்டர் ஆகும். முதலமைச்சர் அவரது பாதுகாப்பு அதிகாரி யெஷி சோட்டக், பைலட்டுக்கள் ஜே.எஸ்.பப்பர், டி.எஸ். மமிக், தவாங் எம்.எல்.ஏ. டிசெவாங் டோன் டுப்பின் சகோதரி யெஷி லாமு ஆகிய 4 பேர் பயணம் செய்தனர்.

ஹெலிகொப்டர் புறப்பட்ட 20 நிமிடங்களில் சீன எல்லையையொட்டி செலாபாஸ் என்ற இடத்தில் சென்றபோது தரைகட்டுப்பாட்டு நிலையத்துடனான தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. சீலாபாஸ் என்ற இடம் 13,700 அடி உயரமுள்ள மலைப்பகுதியாகும். தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்ட பின்பு ஹெலிக்கொப்டர் மாயமாகிவிட்டது. அது எங்கு சென்றது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதனையடுத்து விமானப் படை ஹெலிகொப்டர்கள், மத்திய துணைப்பொலிஸ் படை, எல்லைப் பாதுகாப்பு படை வீரர்கள் 3 ஆயிரம் பேர் கூட்டாக சேர்ந்து மலைப் பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். மலைப் பகுதியில் எங்காவது ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கிக் கிடக்கிறதா என்று தேடினார்கள்.

மத்திய துணைப் பொலிஸ் படையில் மலை ஏறும் பயிற்சி பெற்ற அதிரடிப்படை வீரர்களும் அடர்ந்த மலைப்பகுதியில் சென்று தேடினார்கள். 4 நாள்களாகியும் மாயமான ஹெலிகொப்டர் கிடைக்கவில்லை.

சில வருடங்களுக்கு முன் ஆந்திர முதலமைச்சர் ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டி சென்ற ஹெலிகொப்டரும் இதுபோல் மாயமாகி கடைசியில் அது மலையில் நொறுங்கிக் கிடந்தது. அந்த இடம் இந்திய விமானப் படையின் அதிநவீன சுகாய் விமானம் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. அது போல் டோர்ஜி கொண்டு சென்ற ஹெலி கொப்டரையும் தேடும் பணியில் சுகாய் விமானம் ஈடுபடுத்தப் பட்டது. ஆனால் மோசமான வானிலை காரணமாக சுகாய் விமானம் தேடும் பணியில் ஈடுபட முடியவில்லை.

நேற்று 5 ஆவது நாளாகத் தேடும் பணி நடந்தது. அப்போது இஸ்ரோ செயற்கை கோள் படம் எடுத்து அனுப்பிய 3 இடங்களில் ஒன்றான நாகார்ஜி என்ற இடம் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஹெலிகொப்டர் மாயமான செலாபாஸ் அருகே உள்ள அடர்ந்த மலைப் பிர தேசம் ஆகும். அங்கு எப்போதும் மழை பெய்து கொண்டே இருக்கும். பனிப்பொழிவும் அதிகம் இருக்கும்.

ஹெலிகொப்டர் செல்ல முடியாத அந்த இடத்துக்கு விசேட பயிற்சி பெற்ற மீட்புக் குழுவினர் கயிறு கட்டி இறங் கினார்கள். அங்கு ஹெலிகொப் டர் நொறுங்கிக் கிடப்பதை கண்டுபிடித்தனர். அந்த ஹெலி கொப்டரில் சென்ற முதலமைச்சர் டோர்ஜி காண்டுவும் மற்ற 4 பேரும் பிணமாகக் கிடப்பது தெரிய வந்தது.

ஹெலிகொப்டர் மாயமான செலாபாஸ் என்ற இடத்தில் இருந்து 3 உடல்கள் மீட்கப்பட்ட விவரத்தை உள்துறை அமைச்சகமும், அருணாசலப்பிரதேச முதல்லமைச்சர் அலுவலகமும் உறுதி செய்தது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. செயலாளர் நாயகத்திடம் நிபுணர் குழுவினர் வழங்கிய அறிக்கை

## பகுதி - 06

53. நம்பகமானவை என அது காணும் குற்றச்சாட்டுக்களை, கூடிய அளவிலான அவற்றின் சூழ்நிலைப் பொருத்தம் மற்றும் சகல அம்சங்களையும் வழங்குவதற்காக சட்ட வகுதிகளின் கீழ் அவற்றை வரிசைப்படுத்தாமல் சொற்றொடர் விளக்கமாகச் சமர்ப்பிப்பதை குழுதெரிவுசெய்துள்ளது. இந்த விளக்கத்தை நிரூபிக்கப்பட்ட உண்மை எனக் கொள்ளலாகாது என்பதோடு, குறிப்பான பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கான ஏதும் முயற்சி மேலும் உயர் நிலையிலான ஓர் அமைப்பைத் தேவைப்படுத்தும்.

ஆ. இராணுவ உத்திகள் மற்றும் நடவடிக்கைகளின் பின்னணி

54. இவ்வத்தியாயத்தின் இ முதல் ஊ பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ள நம்பகமான குற்றச்சாட்டுக்களைப் புரிந்து கொள்வதற்கான அவற்றின் சூழ்நிலைப் பொருத்தத்தைப் பெறுவதற்காக, யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போதான அரசாங்கத்தின் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் மற்றும் இராணுவ உத்திகள் அத்துடன் கொள்ளளவுகளைக் குழு ஆராய்ந்தது. பொதுவான உத்தியின் பகுப்பாய்வுக்காக, பகிரங்கமாகக் கிடைக்கக்கூடிய அரசியல் மற்றும் இராணுவ பகுப்பாய்வுகள், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் மற்றும் ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் இராணுவ அலுவல்களுக்கான சர்வதேச இராணுவ நிபுணர்கள் போன்ற பல்வேறு மூலங்களில் குழு சார்ந்திருந்தது. குறிப்பான குற்றச்சாட்டுக்களைக் குழு ஆராயும் போது, அடிப்படை மூலங்களை அடிப்படையாகக் கொண்டு அதனை அதுமேற்கொண்டது.

1. இலங்கை அரசாங்கம்

55) தோல்வியில் முடிவடைந்த சமாதானச் செயற்பாட்டைத் தொடர்ந்து 2006 இல் தமிழீழ விடுதலைப்புலியினரைத் தோற்கடிப்பதற்காகப் பல முனை கொண்ட முழுமையான தொரு உபாயத்தை இலங்கை அரசாங்கம் திட்டமிட்டது. இராஜதந்திர மற்றும் அரசியல் அம்சங்கள், யுத்த வலயம் பற்றிய தகவல் மற்றும் அதற்கான பிரவேசத்தை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அத்துடன் மிகவும் கண்டிப்பான இராணுவ அம்சங்களை இவ்வுபாயம் உள்ளடக்கியது.

21)

56. இராஜதந்திர ரீதியில், 'பயங்கரவாதம் மீதான யுத்தத்தின்' சூழ் நிலைப் பொருத்தத்தில் பல நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காகச் சாதகமான உலகளாவிய சூழலை அரசு பயன்படுத்தியதோடு, ராஜீவ்காந்தியை தமிழீழ விடுதலைப்புலிகள் படுகொலை செய்த காரணத்தால், இந்தப் பிராந்தியத்தில் இந்திய அரசாங்கத்தின் கூடிய ஒத்துழைப்பையும் அது பெற்றுக்கொண்டது. ஒரு முக்கிய உதாரணமாக, தமிழீழ விடுதலைப்புலிகள் கடல் மூலம் அதன் விநியோகத்தைப் பேணுவதற்காக வைத்திருந்த மிதக்கும் களஞ்சியங்களை இடைமறிப்பதில் இலங்கைப் படையினருக்கு இந்திய கடற்படை நேரடியாக உதவியது.

57. உள்நாட்டு ரீதியில், ஒன்றுபட்ட அரசியல் மற்றும் இராணுவத் தலைமைத்துவத்தை அரசாங்கம் உறுதிப்படுத்தியது. ஜனாதிபதி தன்னையே பாதுகாப்பு அமைச்சராக நியமித்து, தனது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவை பாதுகாப்புச் செயலாளராக நியமித்தார். பின்னர் லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவத் தளபதியாக நியமித்தார். பாதுகாப்புச் செயலாளர் மற்றும் இராணுவத் தளபதி ஆகிய இருவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான பரவலான யுத்த அனுபவம் இருந்ததோடு, 2006 இல் இருவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் படுகொலை முயற்சிகளில் இருந்து தப்பிக்கொண்டவர்களாவர். தொடர்ந்து இராணுவ வரவு-செலவுத்திட்டத்தில் பாரிய அதிகரிப்புக்கான நாடாளுமன்ற அனுமதியை ஜனாதிபதி பெற்றுக்கொண்டார். 2008 இல் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அது அதிகரித்ததோடு, தேசிய வரவு-செலவுத்திட்டத்தில் சுமார் 20 சதவீதத்தை அது பிரதிநிதித்துவப்படுத்தியது.

58. இராணுவத்தைப் பொறுத்தவரையில், லெப்டி னன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா இலங்கை இராணுவத்தை நன்றாக உற்சாகப்படுத்தி அதற்கு ஆற்றலை வழங்கினார். ஆயுதப்படையினரின் எண்ணிக்கை 3 லட்சம் என மும்மடங்காக அதிகரிக்கப்பட்டு கிரமமான சுழற்சி மூலம் யுத்தமுனைக்குப் புதிய படையினர் தொடர்ச்சியாக அனுப்பப்பட்டனர். புதிய உபகரணங்கள் மற்றும் ஆயுதங்களை இராணுவம் கொள்வனவு செய்ததோடு, பல்குழல் ஏவுகணை செலுத்திகள், மோட்டார் மற்றும் ஹோவிட்சர்கள், எம்ஐ ஜி 29 உலங்கு வானூர்திகள், கிபிர் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர், துப்பாக்கி தாங்கிய விமானங்கள் ஆகியவற்றைக் கொண்டு அதன் போர்க்கருவிகளை அது பலப்படுத்தியது. இலங்கை விமானப்படை ஆளற்ற பறக்கும் கலன்களை வேவுபார்ப்பதற்காக, இலக்குகளைக் கண்டுபிடிப்பதற்காக மற்றும் அதனைத் தொடரும் யுத்த சேதத்தை மதிப்பீடு செய்வதற்காகப் பெற்று சேவையில் ஈடுபடுத்தி யது.

59. சளைக்காத தாக்குதலை பல முனைகளில் மேற்கொள்வதற்காக, இலங்கை இராணுவம் அதன் சிறந்த ஆயுதங்கள் மற்றும் படையினர் எண்ணிக்கை அத்துடன் ஆகாயத்தில் அதன் ஆதிக்கம் ஆகியவற்றில் தங்யிருந்ததோடு, அவற்றைத் தமிழீழ விடுதலைப் புலிகளால் சமாளிக்க முடிய வில்லை. பேச்சுகளுக்கான சகல முயற்சிகளும் நிராகரிக்கப்பட்டதோடு, யுத்த நிறுத்தமொன்றை மீண்டும் அணி திரள்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் பாவிக்கும் என்று அரசு வாதிட்ட தால், யுத்த நிறுத்தம் எதுவும் வழங்கப்படவில்லை.

60. வளைந்து கொடுக்கக் கூடிய, உளவுத் தகவலால் உந்தப்பட்ட மற்றும் கெரில்லா செயல் முறை போன்றவற்றை காலாட்படையை முன்னடத்திச்சென்று எதிரிக்கு ஆகக் கூடிய சேதத்தை விளைவிப்பதற்காக இலங்கை இராணுவம் பிரயோகித்தது. இதற்காக, கொமாண்டோ நுட்பங்களில் தேர்ச்சி பெற்ற தன்னிறைவுள்ள சிறப்புக் காலாட்படை நட வடிக்கைக் குழுக்களை அமைப்பதை உள்ளிட்டவாறு, இராணுவத் தளபதி தனது படையினரை மறுசீரமைத்து அவர்களுக்கு மீள் பயிற்சி அளித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி மாத்தயாவுடன் முன்பு சம்பந்தப்பட்டிருந்த தமிழ் போராளிகளை உள்ளடக்கிய ஆழ ஊடுருவும் அலகுகளை எதிரிகளின் அணிகளுக்குப் பின்னால் சடுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் வேவுபார்ப்பதற்காகவும் இலங்கை இராணுவம் பிரயோகித்தது. முன்னேறிச்செல்லும் போது இராணுவத்தினரிடையே காயமேற்படுவதைக் குறைப்பதற்காகக் களத்தை எளிதாக்குவதற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பாதுகாப்பு அ[illegible] காக கனரக பீ[illegible] துமான சில இலங்கை இராணுவ நடவடிக்கைகளும்வடிவமைக்கப்பட்டிருந் தன. மனிதாபிமான நடவடிக்கை யொன்றின் மூலம் அப்பிரதேசத்தில் இருந்து பொதுமக்களை விடுவிப்பதற் காக மற்றும் அச்செயற்பாட்டின்போது பூஜ்ய பொது மக்கள் பாதிப்புக்கான அதன் முயற்சிகள் பற்றி அரசாங்கம் கூறி வந்த அதேவேளையில், முன்னேறிச் செல்லும் போது பீரங்கிகளைப் பிரயோகிப்பது பற்றித் தீர்மானம் எடுப்பதற்கான கணிசமான தன்விருப்புரிமை களத்திலுள்ள படையினருக்கு வழங்கப்பட்டிருந்ததாகவும் தெரிகிறது.

61. செல்வெடிகளைச் செலுத்து முன், இலக்குகளை இனங்காண்பதற்காக ஆளற்ற பறக்கும் கலன்கள் அதிகமாகப் பாவிக்கப்பட்டன. அவற்றி லிருந்து தொடர்ச்சியாக படங்கள் புவிச் செயற்பாட்டுத் தளங்களுக்கு அனுப்பப்பட்டதோடு, தாமதமின்றி தீர்மானம் எடுப்பதற்காக அத்தகவலை தளபதிகள் பிரயோகிக்கக் கூடியதாகவிருந்தது.

62. கொழும்பிலுள்ள இணை நடவடிக்கைகள் தலைமையகத்தில் இருந்து யுத்த முன்னெடுப்புக்கு லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமை தாங்கியதோடு, நடவடிக் கையை நடத்திச் செல்வதற்காக அனுபவமிக்க தளபதிகளை அவர் தேர்ந்தெடுத்தார். வன்னி பாதுகாப்புப் படையினருக்கு வன்னியில் தலைமையகம் அமைத்து மேஜர் ஜெனரல் ,ஜகத் ஜயசூரிய தலைமை தாங்கினார். மேலும், யாழ்ப்பாண தீபகற்பத்திலிருந்து தெற்கு நோக்கி முன்னேறிச் சென்ற (மேஜர் ஜெனரல் கர்மல் குணரத்ன தலைமையிலான) 53 ஆவது பிரிவு, (பிரிகேடியர் பிரசன்ன சில்வா தலைமையிலான) 55ஆவது பிரிவு, (மேஜர் ஜெனரல் குணரத்ன தலைமையிலான) 56 ஆவது பிரிவு, (மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் தலைமை யிலான) 57 ஆவது பிரிவு (பிரிகேடியர் சவேந்திர சில்வா தலைமையிலான) 58 ஆவது பிரிவு மற்றும் (மேஜர் ஜெனரல் நந்தன உடபத்த தலைமையிலான) 59 ஆவது பிரிவு ஆகியவற்றை உள்ளிட்ட 6 முக்கிய படைப்பிரிவுகள் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது செயலாற்றின. அவை அனைத்தும் தெற்கில் இருந்து தென்மேற்குத் திசையில் முன்னேறின. சிறப்புப் படைகள் மற்றும் கொமாண்டோக்களும் முக்கியமானதொரு பங்கினை வகித்தன. வலுவான தலைமைத்துவம், புதிய பயிற்சி மற்றும் காரியம் சாதிப்பதற்கான உறுதிப்பாடு, பல வெற்றிகளுக்கு வழிவகுத்து, கைவிட்டுச் செல்பவர்களின் வீதத்தைக் குறைத்து இலங்கை இராணுத்தினரிடையே மனத்தைரியத்தை மேம்படுத்தின.

63. அதன் கிரமமான இராணுவ நடவடிக்கைகளுக்குப் புறம்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பான மறைவிடங்களைக் கண்டுபிடிப்பதற்காக, தெற்கில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் வலைப்பின்னல் களைச் சிதைப்பதற்காக மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர் களை அகற்றுவதற்காக அரசு இரசியமான நடவடிக்கைகளைப் பிரயோகித்தது. இந்த நடவடிக்கைகளின் ஆற்றல் மிக்கதொரு சின்னமாக 'வெள்ளைவான்' இருந்தது. அரசை விமர்சிப்பவர்களை அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு உள்ளவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவர்களைக் கடத்துவதற்காக மற்றும் அநேகமாக மாயமாகச் செய்வதற்காக மற்றும் பொதுவாக மக்கள் மனதில் பயத்தை ஏற்படுத்து [illegible] வான்கள் பாவிக்கப் [illegible] இந்த வெள்ளை வான் நடவடிக்கை களைப் பொலிஸ் விசேட அதிரடிப் படைகளின் விசேட அலகொன்று நடத்தி யதாகச் சம்பந்தப்படுத்தப்பட்டது. அவ்வாறாகக் கடத்தப்பட்டவர்கள் இரகசிய இடங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டு மற்றும் பல்வேறு விதமாகச் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார்கள். பலர் கொலை செய்யப்பட்டு அவர்களின் சடலங்கள் இரகசியமாக அப்புறப்படுத்தப்பட்டன. 'புலிகளின் ஆதரவாளர்கள்' எனக் குற்றம் சாட்டப்பட்ட மனித உரிமைகள் ஈடுபாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோரும் இவ்வலைக்குள் சிக்கினர். 2006 முதல் யுத்தம் முடி வடைவதற்கு இடைப்பட்ட காலப் பகுதிக்குள் 66 மனிதாபிமான ஊழியர்கள் காணாமல் போனார்கள் அல்லது கொலை செய்யப்பட்டார்கள்.

64)

இந்த உபாயம் ஊடகம் மற்றும் தகவலின் ஓட்டம் மீது மேலும் கண்டிப்பான கட்டுப்பாடுகளை விதித்து, ஊடக இருட்டடிப்பைத் திணித்து யுத்த முன்னெடுப்புக்களை விமர்சிக்கும் கருத்துக்களை நசுக்குவதையும் கொண்டிருந்தது. 2006 முதல் சுயாதீன ஊடகவியலாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களுக்குச் செல்வது தடுக்கப்பட்டதோடு, சில ஊடகவியலாளர்களை 'புலிகளின் ஆதரவாளர்கள்' என பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் குறிப்பிட்டது. யுத்தம் பற்றி அறிக்கை விடுவது தொடர்பாக 2008 இல் மேலும் விரிவான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. இந்தச்சட்டங்களுக்குக் கீழ்ப்படியாத ஊடகவியலாளர்கள் அல்லது வேறு விதத்தில் அரசாங்கத்தை விமர்சித்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள் அல்லது கடுமையான அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார்கள். ஜூன் 2008 இல் பாதுகாப்புச் செயலாளர், அசோசியேடட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிடெட் இனைச் சார்ந்த பிரபலமான இரு ஊடக வியலாளர்களை நேரடியாக அச்சுறுத்தினார். பின்னர் அவர்களுள் ஒருவரான போத்தல ஜயந்த என்பவர் ஜூன் 2009 இல் வெள்ளை வானில் ஏற்றிச் செல்லப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டார். 2009 ஜனவரி 8 ஆம் திகதி, பிரபல பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொழும்பில் வைத்து இனங்காணப்படாதவர்களால் கொலை செய்யப்பட்டார். பாதுகாப்புச் செயலாளர் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இரா ணுவக் கொள்வனவுகளின் ஊழலை வழக் கொன்றின் மூலம் பகிரங்கப்படுத்துவதற்காக அவர் தகவலைச் சேகரித்தார். அதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் சுயாதீன மகாராஜா தொலைக்காட்சி ஒளிபரப்புப் பின்னலை ஆயுததாரிகள் தாக்கி பாதுகாப்பு ஊழியர்களைத் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தி அங்குள்ள உபகரணங்களை நொறுக்கினர்.

இந்தச் சம்பவங்கள் எதுவும் புலனாய்வு செய்யப்படவில்லை. 2006 மற்றும் 2009 ஆரம்பத்துக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குறைந்த பட்சம் 10 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டார்கள். இத்தணிக்கை நடவடிக்கைகளின் திரண்ட விளைவாக மற்றும் கொலை செய்யப்படுவோமா அல்லது தாக்கப்படுவோமா என்ற அச்சமும் ஊடகத்தின் சுயாதீன மேற்பார் வைப்பங்களிப்பில் தீங்கானதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது. 'என்னிடம் இரு குழுக்கள் மாத்திரமே உள்ளன- அவை பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடும் மக்களும் பயங்கரவாதிகளுமே' என பாதுகாப்புச் செயலாளர் கூறியதாக மேற்கோள் காட்டப்பட்டிருந்தது

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகம் நடத்தும் கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,மே5

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியை யாழ். பல்கலைக்கழகம் முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

இந்தச் சுற்றுக்போட்டியின் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டிக்குக் கொழும்பு, பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்களும் பங்கு பற்றுகின்றன.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கலாநிதி எஸ். சிறிசற்குணராசா கலந்துகொண்டு போட்டியை ஆரம்பித்து வைப்பார். (த-313)

# சிங்கள விளையாட்டு அலுவலர் நியமனம்



யாழ்ப்பாணம்,மே5

மத்திய அரசின் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தால் யாழ். மாவட்ட செயலகத்துக்கு எம்.கே.ஏ.சஞ்ஜீவ என்ற பெரும்பான்மை இன இளைஞர் விளையாட்டு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த மாதம் 28ஆம் திகதி தனது கடமையைப் பொறுப்பேற்றார். (ம-23)

# பருத்தித்துறை பிரதேச செயலகம் சம்பியன்

யாழ்ப்பாணம்,மே5

மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக பெண்கள் அணி சம்பியனானது.

கடந்த வாரம் கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக பெண்கள் அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக பெண்கள் அணி மோதிக் கொண்டது.

இதில் பருத்தித்துறை பிரதேச செயலக பெண்கள் அணி எதிர்த்து விளையாடிய தெல்லிப்பழைப் பிரதேச செயலக பெண்கள் அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ம-23)

# பாடசாலைகளின் பூப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மே5

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயது பிரிவின் கீழ் ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (ம-23)

# தெல்லிப்பழை யூனியன் சம்பியன்

வலிகாமம் கல்வி வலய பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல் லூரி வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

கடந்த 2ஆம் திகதி திங்கட்கிழமை மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர்ப்புக்காட்டிய போதிலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மிகவும் இலகுவாக வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

முதல் பாதி ஆட்டத்தில் யூனியன் கல்லூரி 19:07 புள்ளிகள் என்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறைவுபெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் யூனியன் கல்லூரியின் கைகளே மைதானத்தில் மீண்டும் ஓங்கிக் காணப்பட்டது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் யூனியன் கல்லூரி 16:05 என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. (ம-86)



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைசாலைக்கிடையிலான தடகளப் போட்டிகளில் மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றது. வீர, வீராங்கணைகளுடன் வித்தியாலய அதிபர் வே. சுந்தரலிங்கம், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியை திருமதி ஞா.குமாரசாமி உப அதிபர் உட்பட ஆசிரியர்கள் உள்ளனர். (207)

# தென்மராட்சி வலய மட்ட மெய்வன்மைப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம்,மே5

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்டப் மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன.

மற்றும் முடிவுகள் வருமாறு:-

**17 வயதுப் பிரிவு - பெண்கள் - 100 மீற்றர் ஓட்டம்**

இ.மிதிலா - வரணி ம.வி., த.தரஷிகா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி, க.ரியாழினி - கச்சாய் ம.வி.

**200 மீற்றர் ஓட்டம்**

இ.மிதிலா-வரணி ம.வி., சி.பைரவி - சாவகச்சரி இந்துக் கல்லூரி, க.ரியாழினி - கச்சாய் ம.வி.

**400 மீற்றர் ஓட்டம்**

க.ரியாழினி - கச்சாய் அ.த.க. பாடசாலை, சி.கீர்த்தனா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ப.உசாலினி - வரணி ம.வி.

**800 மீற்றர் ஓட்டம்**

சு.சர்மினி - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. த.தர்சிகா கொடிகாமம் அ.த.க பாடசாலை, ச.ஜனனி சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**1500 மீற்றர் ஓட்டம்**

அ.சிவயோதிகா - விடத்தற்பளை கமலாசனி ம.வி.

க.சர்மினி - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., ப.உசாலினி - வரணி ம.வி.

**100 மீற்றர் தடை தாண்டல்**

மு.துஷ்யந்தி - மீசாலை விக்னேஸ்வரா ம.வி, கு.கலைமகள் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, க.துளசிகா - மீசாலை வீரசிங்கம் ம.வி.

**கோல் ஊன்றிப் பாய்தல்**

தி.சயிந்தா, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, வி.தேனுஜா - கச்சாய் அ.த.க.பாடசாலை.

**நீளம் பாய்தல்**

இ.மிதிலா-வரணி ம.வி., ப.கார்த்திகா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, த.தர்சிகா - கொடிகாமம் அ.த.க.பாடசாலை.

**உயரம் பாய்தல்**

செ.ஸ்ரீனுயா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, த.யசிந்தன் - இடைக்குறிச்சி சிறிசுப்பிரமணியம் வித்தி, கி.சயிந்தா கொடிகாமம் திருவுநாவுக்கரசு ம.வி.

**முப்பாய்ச்சல்**

த.சுபேதா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சி.சேருசா - மீசாலை வீரசிங்கம் ம.வி., ப.கார்த்திகா சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**குண்டுபோடுதல்**

நா.நிதர்ஷா, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, ப.வசந்தரோசா - கச்சாய் அ.த.க. பாடசாலை,

**தட்டெறிதல்**

நா.நிதர்ஷா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி, க.கவிநிலா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, த. தர்சிகா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**ஈட்டியெறிதல்**

ப.வசந்தரேகா - கச்சாய் அ.த.க.பாடசாலை, க.கவிநிலா, சாவக்சசேரி இந்துக் கல்லூரி, செ.சரோசா - குடமியன் அ.த.க. பாடசாலை.

4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வரணி ம.வி., கச்சாய் அ.த.க. பாடசாலை.

4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் - வரணி ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கச்சாய் அ.த.க. பாடசாலை

(தொடரும்)
(ம-23)

# எல்லே போட்டிகள் இன்று வட்டுக்கோட்டை மைதானத்தில்

வலி.வடக்கு,மே5

யாழ்.மாவட்டக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையேயான ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த அளவெட்டி அருணோதயக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்,

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்,

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், வடமராட்சி மணல்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை,

தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும் கலந்துகொள்ளவுள்ளன. (த-86)

# புதிய விளையாட்டு மைதானம் திறப்பு

நாவலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக புதிய மைதானத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் ஞா.அன்றூ கிறேசியன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் நா. நவரத்தினராசா, யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளை, நவாலி கிழக்கு கிராம சேவையாளர் ரி.நித்தியானந்தம் ஆகியோரும் கலந்துகொண்டார்கள். (ம-86)





யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த [illegible] பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் ஆண், பெண் இருபாலாரும் 100 மீற்றர் ஓட்டத்தில் பங்குபற்றுகின்றனர். (ம-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,மே5

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாவட்ட மட்ட ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றீஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஜ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிராக்டர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

பூநகரி வடக்கு பிரதேச உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பூநகரி பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பூநகரி வடக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (எ)

ஆங்கிலம் கற்பது இலகுவானது.
ஆங்கில அறிவின் அவசியத்தை பாடசாலையில்,பரீட்சையில், நேர்முகத்தேர்வில்,பயணிக்கும்போது இன்னும் வாழ்வின் பல சந்தர்ப்பங்களிலும் உணர்ந்திருக்கிறீர்களா?

தனிப்பட்ட/குழு வகுப்புக்கள்*** அடிப்படையிலிருந்து ஆங்கிலம்
தனிப்பட்ட கவனிப்பில்,அலுப்புத்தராத சுவாரசியமான சர்வதேச கற்பித்தல் முறையில் உங்கள் நிலைக்கேற்ப ,நவீன மல்டிமீடியா மற்றும் செயன்முறைகள் மூலம் (உங்களுக்கு முன்னைய ஆங்கில வகுப்புக்களில் ஏற்பட்ட துன்பநிலை இல்லாமல்) கற்கலாம் என்றால்.....நீங்கள் தயாரா ? Local and UK Certificates for Each Level
14 வயதிலிருந்து 60 வயது வரை அனைவர்க்கும்
A1/B1/B2 Training Specialists
திருமணமாகி யு.கே செல்வோருக்கான ஆங்கில வகுப்பும் பரீட்சையும்.
City and Guilds UK Approved Centre in Jaffna !
ESOL L1
ESOL L2
ESOL L3
எமது எளிமையான கற்பித்தல் முறை நீங்கள் எந்த நிலையிலிருந்தாலும்.. முன்னேற்றம்..ஒருமுறை வந்து பாருங்கள்.
Spoken English(KU/C&G) புதிய பிரிவுகள் விரைவில்..
IELTS/A1/B1/B2 பேசலாம் வாங்க !
City & Guilds Approved Centre
Web Site with full info: WWW.KUGROUP.INFO
இலவச நேரடி கலந்துரையாடலும் நெறிப்படுத்தலும் தற்போது வழங்கப்படுகிறது சந்திக்கும் நேர ஒதிக்கீட்டுக்கு அழையுங்கள்.
0776458253/0213208342 புதிய பிரிவுகள் ஆரம்பம்
Knowledge Universe
Malaysian College of Business and ICT
City and Guilds Qualifications are accepted by BRITISH COUNCIL
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

இதோ விற்பனையாகின்றது
DVD மூலமாக 12 மாத காலத்தில் ஆங்கிலத்தை சரளமாகப் பேசுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு
இந்த DVD Australia வில் SCIENCE & CHEMISTRI ஆசிரியராகக் கடமையாற்றுபவரால் தயாரிக்கப்பட்டது.
DVD க்களை நீங்கள் பெற்றுக் கொள்ளும் நிலையங்கள்
1) பூபாலசிங்கம் புத்தகசாலை- யாழ்ப்பாணம்.
2) அன்னை புத்தகசாலை- யாழ்ப்பாணம்.
3) துர்க்கா புத்தகசாலை- சுன்னாகம்
4) மன்னார் தொடர்புகளுக்கு- 0778907313
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண் - 0779507264, 0778907313 விலை ரூபா 852.50 முந்துங்கள் கையிருப்பு உள்ளவரை. ~~1100.00~~ - 852.50

## துயர் பகிர்கின்றோம்




மொறட்டுவை பல்கலைக்கழக
பொறியியல்பீட மாணவன்
நா. குகதாசன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
பார்வதிதேவி நாகராசா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மொறட்டுவை பல்கலைக்கழகம்
பொறியியல்பீட மாணவர்கள்; (E-08)

## மரண அறிவித்தல்



### முத்துக்குமாரசுவாமி நமசிவாயம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

புலோலி கிழக்கு, கனயந்தோட்டம், பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தை 18, ஹாமர்ஸ் அவனியுவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. மு. நமசிவாயம் அவர்கள் செவ்வாய்க்கிழமை 03. 05. 2011 அன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி, பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசரத்தினத்தின் அன்புக் கணவரும், இராமகிருஷ்ணன் (அவுஸ்ரேலியா), கோபாலகிருஷ்ணன் (லண்டன்), ராதாகிருஷ்ணன் (கனடா), ராதாலட்சுமி (லண்டன்), சுந்தரலட்சுமி (கொழும்பு), ஜெயலட்சுமி (கனடா), விஜயலட்சுமி (டென்மார்க்), முத்துலட்சுமி (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு : 2508119, 0773102216

## பூநகரியில் பாம்புக்கடிக்கு இலக்கான இரு பெண்கள்

நள்ளிரவில் உறக்கத்தில் இருந்த வேளை பாம்பு தீண்டிய பெண்கள் இருவர் வேரவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் பூநகரி - கிராஞ்சிப் பகுதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த ஜெ.லோகேஸ் (வயது - 20), த. கமலவேணி (வயது - 56) ஆகியோரே பாம்புக்கடிக்கு இலக்கானவர்கள் ஆவர். (ஒ-ரி)

## குறுந்தூர பஸ் கட்டணத்தை ரூ. 8ஆக உயர்த்தக் கோரிக்கை

கொழும்பு, மே 05

பஸ் கட்டணத்தை 15 சதவீதம் அதிகரிக்கும்படி தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறுந்தூர பஸ் கட்டணத்தை ஆறு ரூபாவில் இருந்து எட்டு ரூபாவாக அதிகரிக்கும்படியும் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

டீசல் விலை கடந்த மாதம் அதிகரித்ததை அடுத்து பஸ் கட்டணத்தை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார். (ஒ-சி)

## பதில் அமைச்சராக காதர்

கொழும்பு, ஏப்.05

சுற்றாடல் பதில் அமைச்சராக ஏ.ஆர்.எம். ஏ. காதர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். சுற்றாடல் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா வெளிநாடு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-01)

தேவை
1) காலை, மாலை வேளைகளில் கடமையாற்றுவதற்கு அனுபவம் வாய்ந்த வைத்தியர்கள் உடன் தேவை.
(தங்குமிட வசதிசெய்து கொடுக்கப்படும்.)
2) இரவு நேரக் காவலாளி- வயோதிபர்களைப் பராமரிப்பதற்கு ஆண், பெண் உடன் தேவை.
* பயிற்சி நெறியின் 2ஆம் பிரிவு ஆரம்பம்
அடிப்படை தாதியர் பயிற்சி நெறியின் 2ஆம் பிரிவு ஜூன் 1ஆம் திகதி ஆரம்பமாகின்றது. உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.
தொடர்பு கொள்ளவேண்டிய
தொ.பே. இலக்கம்
0212226179, 0212226180.

படிவம்
... மாகாண பொதுச் சேவைக்கு அலுவலக பணியாளர் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை விண்ணப்ப படிவம் விற்பனைக்கு உண்டு.
பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தேவை
மலேசியாவில் உள்ள வைத்திய கலாநிதியின் வீட்டுக்கு வீட்டுப் பணிப்பெண் தேவை
0716479625

மணமகள் தேவை
யாழ். கௌரவமான R.C. பெற்றோர் தமது 38 வயதுடைய கொழும்பில் கல்வி கற்று கௌரவமான தொழில்புரியும் மகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். தொடர்பு - 0786175610.

வீசா சேவை
UK, Student Visaவில் செல்வதற்கான Colleges, Universities அனுமதி Financial Sponsorship மற்றும் அனைத்து [illegible] Student Visa ஆலோசனை Refuse Reapply என்பன
தொடர்பு: 0779218444.

இறுதி அழைப்பு : இன்னும் 6 ஆசனங்கள்
மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு04)
கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சி நெறியை தவற விட்ட மாணவர்கள் எதிர்வரும் 08/05/2011 மாலை 4.00 மணிவரை தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
வேலைவாய்ப்புடனான கற்கை நெறி.
After O/L

(O/L ஏதாவது நான்கு பாடங்களில் சித்தியுடன் கற்கலாம்.)
MBBS வைத்திய விரிவுரையாளர்களால் லாவா வைத்தியசாலையில் செயல்முறையுடன் கற்பிக்கப்பட்டு தொழில் வழங்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.
Knowledge Universe
Malaysian College of Business and IT
Tel: 0776458253 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் பணியாற்றும் வ. சிவகுமார் அவர்களின் பாசமிகு சகோதரன்

**அமரர் வல்லிபுரம் சிவானந்தவேல்**

*உள்ளத்தில் உறைந்துவிட்ட உத்தமரே*
*கள்ளம் இல்லாக் கனிவானவரே*
*அன்புடன் எம்மை எல்லாம் ஆதரித்தீர்*
*பண்புகள் கூறி மக்களை பாரினில் உயர வைத்தீர்*
*இடையிலே எம்மை விட்டு எங்குதான் சென்றீர்*
*விடைதனைக் கூறாது விரைந்து தான் சென்றீரோ!*

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மீன் எழுச்சித் திட்டம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

பிரதித் திட்டப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள்.

(3867)(25-27)

## இரண்டாம் ஆண்டு நினைவு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1955 | 2009 |
| 03 | 04 |
| 24 | 27 |



### அமரர் சுப்பிரமணியம் அழகரத்தினம்

அன்பு மொழி பேசி எம்மை ஆதரவாய் அரவணைத்து இன்ப வாழ்வில் எம்முடன் இதயம் மகிழ வந்தவரே துன்ப சுவடே தெரியாமல் அன்புடனே வளர்த்தீரே தூய உள்ளமே! எம்மை விட்டுப்பிரிய மனம் வந்ததெப்படி?

இடைநடுவில் எம்மெல்லோரையும் ஏங்கித் தவிக்கவிட்டு நீங்கள் சென்றதெங்கே. உடல் தான் மறைந்தாலும் உருவம் மறையாமல் ஈராண்டு ஆயிற்றோ...

உங்கள் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பேராலை, பளை.

மனைவி, பிள்ளைகள், மருமகன்.

## மரண அறிவித்தல்

### நடராஜா கெங்கேஸ்வரன்



அராலி தெற்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், ஜேர்மனியில் வசித்தவரும் தற்போது அராலி தெற்கு, வட்டுக்கோட்டையில் வசித்தவருமான நடராஜா கெங்கேஸ்வரன் கடந்த 02.05.2011 திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சந்திரசேகரமூர்த்தி (கனடா), புனிதவதி, ஞானவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகிழ்மலர் (கனடா), சுந்தரலிங்கம், சிறிரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2011) வியாழக்கிழமை சுன்னாகத்திலுள்ள (மயிலனி பாடசாலைக்கு அண்மையில்) அவரது மைத்துனரின் இல்லத்தில் நடைபெற்று, ந.ப. 12 மணியளவில் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
சுந்தரலிங்கம் (அப்பன் 0213209363.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் இணைப்புச் செயலாளருக்கு 16ஆம் திகதி வரை விளக்கமறியல்

பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் பொதுமக்கள் விவகார அமைச்சின் முன்னாள் இணைப்புச் செயலாளர் புத்தி ஜயசிங்கவை மே 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திருமதி லங்கா ஜயரட்ன நேற்று உத்தர விட்டார்.

2006 ஆம் ஆண்டு 9.85 மில்லியன் ரூபா மோசடி செய்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டதாக புத்தி ஜய சிங்க மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இவ்வழக்கில் அவர் முதலாவது சந்தேக நபராக சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, முதலாவது சந்தேக் நபரின் நெருங்கிய உறவினரான இரண்டாவது சந்தேக நபர் யூ.ஜி.எம். ஹீனபண்டாவை கைது செய்வதற்காக தாம் தொடர்ந்தும் விசாரணை நடத்திவருவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

அவ்வேளையில், இரண்டாவது பிரதிவாதி நீதிமன்றிற்கு சமுகமளித்திருப்பதாகவும் அவர் சரணடைய விரும்புவதாகவும் அவரின் வழக்கறிஞர் ஜயந்த வீரசிங்க தெரிவித்தார்.

அதையடுத்து இரண்டாவது சந்தேக நபரையும் மே 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

பாகிஸ்தான் நாட்டவரான அமெரிக்கப் பிரஜையொருவர் செய்த முறைப்பாட்டின் பேரில் இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இம்மனுதாரர் நுவரெலியாவில் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு முதலீட்டுச் சபை அனுமதி வழங்கியிருந்தது. அத்திட்டத்தில் முதலீட்டு ஊக்குவிப்பு அதிகாரியாக செயற்பட்ட முதலாவது சந்தேக நபரை முதலீட்டுச் சபை நியமித்திருந்தது.

இந்நிலையில் இச்சந்தேக நபர், மனுதாரருக்குச் சொந்தமான வங்கிக் கணக்கிலிருந்து காசோலைகளில் போலிக் கையெழுத்திட்டு நிதி மோசடி செய்ததாகவும் அக்காசோலைகள் இரண்டாவது சந்தேக நபரின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டதாகவும் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

முதலாவது சந்தேக நபர் இவ்வருடம் மார்ச் 31 ஆம் திகதிவரை பொதுமக்கள் தொடர்புகள், பொதுமக்கள் விவகார அமைச்சின் இணைப்புச் செயலாளராக பணியாற்றியுள்ளார்.

# இஸ்ரேலிய அமைச்சர் குழு இலங்கை வருகை

கொழும்பு, மே 5

இஸ்ரேலிய விவசாய அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் நேற்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு இணங்கவே அவர்கள் நேற்று இலங்கை வந்தனர்.

விவசாயத்துறை தொடர்பில் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கிலேயே இந்த விஜயம் அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விஜயத்தின் மூலம், விவசாய வசதிகளை மேம்படுத்துவதற்கான தொழிநுட்பம், விவசாய கொள்கைகள் மற்றும் அனுபவங்கள் என்பன பரிமாற்றிக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## நிபுணர் குழு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக்க கூறியுள்ளார்.

இந்த செயற்பாடுகளுக்கு மேற்குலக நாடுகள் சில ஒத்துழைப்பு வழங்குகின்றன என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

(ஒ-சி)

## நிபுணர் குழு அறிக்கை தெளிவற்றது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பின்போது அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெயர்ந்தவர்களின் வாழ்க் கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக அமெரிக்கா மேற்கொண்ட பணி பாராட்டத்தக்கதாகும். இலங்கை - அமெரிக்க உறவு தொடர்ந்து உறுதியாக இருக்கவேண்டியது அவசியம்.

இலங்கை அரசு மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு ஆகிய செயற்பாடுகளில் மிகவும் வெற்றிகரமாக முன்னேறிக்கொண்டு போகின்றது. அதேபோல், அரசியல் தீர்வு தொடர்பாக எமது அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி வருகின்றது.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. நிபுணர் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஐ.நா. நிபுணர் குழுவுக்கும், ஐ.நாவுக்கும் இடையில் உள்ள வித்தியாசங்கள் தெளிவாகக் கூறப்படவேண்டும்.

இலங்கை அரசுக்கும், ஐ.நாவுக்கும் இடையில் நீண்ட உறவு உள்ளது. நாம் தொடர்ந்தும் ஐ.நாவுடன் இணைந்து செயற்படுவோம் - என்றார்.

இந்தச் சந்திப்பின்போது ரொபேர்ட் ஓ பிளேக் கூறியவை வருமாறு:-

அமெரிக்க அரசு இலங்கையுடன் தொடர்ந்தும் நல்லுறவைப் பேணவே விரும்புகின்றது. கடற்பாதுகாப்பு, கடற்கொள்ளை தடுப்பு, பயங்கரவாத ஒழிப்பு ஆகிய விடயங்களில் இலங்கை அமெரிக்காவுக்கு மிக முக்கியமான நாடாக விளங்குகின்றது.

இந்த விடயங்களுக்காக அமெரிக்கா இலங்கையுடன் இணைந்து செயலாற்றவேண்டி உள்ளது - என்றார். (ஒ-சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அறுபதாம் அகவையில் ஓய்வுபெறும் எமது சங்கீத ஆசிரியை

திருமதி

மணிவதனம் திருஞானசம்பந்தன்

அவர்களின் சேவைக்கால அரும்பணிகளை பாராட்டுவதோடு, சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் அமைதியும் ஆரோக்கியமும் நிறைந்து வாழவேண்டும் என்று இன்றைய பிறந்த தினத்தில் வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

(3855)

## மகஸின் கைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஸ்தாப கைதி நேற்றுடன் ஒன்பதாவது நாளாக உண்ணாவிரதம் இருந்து வந்தார். இதனால் அவரின் உடல்நிலை கவலைக்கிடமாக 'இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையிலேயே நீதியமைச்சர் சார்பில் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரும், அமைச்சின் ஊடகச் செயலாளரும் நேற்று சிறைச்சாலைக்குச் சென்று கைதியைப் பார்வையிட்டனர்.

அதேவேளை, குறுகிய காலத்தில் உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தரப்படும் என்றும் கோரிக்கைகள் நீதியமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என்றும் அவர்கள் உறுதி அளித்தனர். அத்துடன் பால் வழங்கி கைதியின் உண்ணாவிரதத்தையும் முடித்துவைத்தனர்.

நீண்டகாலமாக எதுவித வழக்கு விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தன்னை விடுதலை செய்யுங்கள் அல்லது பிணையிலாவது விடுவியுங்கள் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த மாதம் 25ஆம் திகதி முதல் குறித்த கைதி உண்ணாவிரதம் இருந்து வந்தார்.

இதனையடுத்து கைதியின் தாயார், நீதியமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு மகனின் விடுதலை தொடர்பில் கடிதம் அனுப்பி வைத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தினர்.

அரியநேந்திரன் எம்.பி. அறிக்கை விடுத்திருந்தார். அதேவேளை, சரவணபவன் எம்.பி. சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் மற்றும் நீதியமைச்சர் ஆகியோரிடம் கைதியின் விடுதலை தொடர்பில் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் மனிதாபிமான முறையில் சிறைச்சாலைக்கு தூதுக்குழுவொன்றை அனுப்பி வைத்தார். நீதியமைச்சின் இந்த நடவடிக்கைக்குத் தமிழ் அரசியல் கைதிகள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றனர்.

வவுனியா குட்செட் வீதியைச் சேர்ந்த அன்டனி அஞ்சலோ மரியதாஸ் (வயது - 27) என்ற தமிழ் அரசியல் கைதியே உண்ணாவிரதம் இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## போர்க் குற்றங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறும் விடயத்தில் கவனம் செலுத்தப்படும் என்று இலங்கை உறுதியளித்திருக்கின்றது என்றும் அவர் அப்போது தெரிவித்தார்.எனினும் ''உறுதி மொழிகளில் அல்லாமல் செயலில் காட்ட வேண்டும்'' என்றும் பிளேக் தெரி வித்தார்.

உள்ளூர் அதிகாரிகள், போர்க் குற்றங் களுக்குப் பொறுப்புக்கூறும் தமது கட மையைச் சரிவரச் செய்யத் தவறுவார்களாயின், சர்வதேச பொறிமுறை ஒன்றின் மூலம் அதனை நிறைவேற்ற வேண்டி வரும் என்றும் பிளேக் எடுத்துக் கூறினார்.

முதலில் விசாரணைக்கான பொறுப்பை இலங்கை அரசு எடுத்துக் கொள்கிறதா என்பதை அமெரிக்கா கூர்ந்து கவனிக்கும் என்றார் அவர். (உ)

## வலி.வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிகாமம் வடக்கில் மாவிட்டபுரம், மாவிட்டபுரம் தெற்கு, தந்தை செல்வாபுரம், தெல்லிப்பழை, வறுத்தலைவிளான், கொல்லங்கலட்டி, கீரிமலை ஆகிய இடங்களில் இதுவரை விடுவிக்கப்படாத பகுதிகளிலும் பளை, வீமன்காமம் வடக்கின் ஒரு பகுதி, பளை வீமன்காமம் தெற்கின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மக்கள் மீள்குடியமர்வதற்கான உத்தியோகபூர்வமான அறிவித்தலை இராணுவம் வழங்கியுள்ளது.

''மீள்குடியமர்வுக்கான ஏற்பாடுகளை எதிர்வரும் 9ஆம் திகதிக்குப் பின்னர் மேற்கொண்டு இம்மாத இறுதிக்குள் எப்போதாவது மக்களை மீள்குடிமர்த் தலாம் என்று இராணுவத் தளபதி அறி வித்துள்ளார்.

''இப்பிரதேசங்களில சுமார் 2ஆயிரத்து 750 குடும்பங்கள் மீள்குடியமர்வுக்குத் தயாராக உள்ளன. மீள்குடியமர்த்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் யாழ். மாவட்டச் செயலகம் மேற்கொண்டதன் பின்னர் ஓரிரு வாரங்களில் அப்பகுதியில் மக்கள் மீள்குடிமர்த்தப்படுவர்'' என் றும் அரச அதிபர் தெரிவித்தார்.

இவேளை - வடமராட்சி கிழக்கில் இதுவரை மீள்குடியமர்த்தப்படாத போக் கறுப்பு, முள்ளியான் ஆகிய பகுதிகளிலும் மக்களை மீள்குடியமர்த்த இராணுவத் தளபதி அனுமதி வழங்கியுள்ளார் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

(உ-9)

## மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று நாடாளுமன்ற அமைச்சு தொடர்பான ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான அ.விநாயகமூர்த்தி அமைச்சரிடம் இந்த விடயம் தொடர்பாகக் கேள்வி எழுப்பினார்.

வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் நாங்கள். எங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப் படுகின்றது. ஆனால் எமது பிரதேசத்தில் நடைபெறும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு நாம் அழைக்கப்படுவதில்லை. அழைப்புகளும் கிடைப்பதில்லை என்று விநாயகமூர்த்தி சுட்டிக்காட்டினார்.

இதனை அவதானமாகக் கேட்டுக்கொண்ட அமைச்சர் ஜோன் செனவிரத்ன யாழ். மாவட்டத்தில் எந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ள விரும்புகின்றீர்கள் எனக் கேட்டார்.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி யாழ். மாவட்டத்தில் உள்ள எல்லா பிரதேச சபைப் பிரிவுகளின் பெயர்களையும் கூறினார். எல்லா சபைகளையும் நீங்களே கேட்டால் மற்றவர்களுக்கு வேண்டாமா என அமைச்சர் நகைச்சுவையாகக் கேட்டார்.

ஐயா, நாங்கள் யாழ். மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள். எல்லாக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளவேண்டும். நான் இல்லாவிட்டாலும் மற்றவர்கள் கலந்துகொள்வார்கள். எனவே கலந்து கொள்ளும் உரிமை உண்டு என்று விநாயகமூர்த்தி எம்.பி. பதில் அளித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர் இனிவரும் கூட்டங்களுக்கு உங்களுக்கும் அழைப்பு விடப்படும் என உறுதியளித்துள்ளார். (ஒ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணியம்மா காங்கேசு

*(இளைப்பாறிய ஆசிரியை - வேவி ரீச்சர்)*

சாவகச்சேரி, மீசாலை, ஐயாகடையடியைச் சேர்ந்த திருமதி இராசமணியம்மா காங்கேசு கடந்த 03.05.2011 அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பிப்பிள்ளை (ஐயாண்ணை), நல்லம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு காங்கேசுவின் (இளைப்பாறிய செயலாளர், நகரசபை, சாவகச்சேரி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருச்செல்வத்தின் சகோதரியும், கனடாவில் வசிக்கும் சபேசன், றஞ்சிதா, ஞாணச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07.05.2011) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்திரன் - 4167214166,*
*றஞ்சிதா - 6133895364.*

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

### இன்றைய வானிலை

32⁰ C

| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யா | | 32⁰c | 28⁰c | |
| மன் | | 31⁰c | 28⁰c | |
| வவு | | 34⁰c | 26⁰c | |
| முல் | | 33⁰c | 27⁰c | |
| கிளி | | 33⁰c | 27⁰c | |

அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

# வடக்கு - கிழக்கில் அதிகாரிகளுக்கு சில அமைச்சர்களால் அச்சுறுத்தல்

## ஸ்ரீ ரங்கா எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மே 5

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள சிவில் நிர்வாக அதிகாரிகள் அமைச்சர்களின் மிரட்டல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகி உள்ளனர். இந்தப் பிரதேசங்களில் சிவில் நிர்வாகம் நடக்கிறது என்று கூறப்பட்டபோதும் நிர்வாக சேவை அதிகாரங்கள் உட்பட அரச அதிகாரிகள் எவரும் சுதந்திரமாகச் செயல்பட முடியாத நிலையில் இருக்கின்றனர்.

- இப்படிக் கடும் தொனியில் தெரிவித்தார் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜெ.ஸ்ரீரங்கா.

பொது நிர்வாக உள்ளூராட்சி அதிகார சபைகள் அமைச்சர் ஜோன் செனவிரத்னவின் கவனத்துக்கும் இதனைக் கொண்டு வந்தார்.

''இந்தப் பிரதேசங்களில் கடமையாற்றும் அரச அதிகாரிகள் எந்த ஒருவிடயத்தையும் சுதந்திரமாகச் செய்யமுடியவில்லை. அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்த முடியவில்லை.

சகல விடயங்களிலும் இந்தப் பகுதிகளை ஆழ்கிறார்கள் எனக் கூறிக்கொள்ளும் ஒரு சில அமைச்சர்கள் தலையிடுகின்றனர். அமைச்சர்களின் கட்டளைப் படியே செயலாற்ற வேண்டியுள்ளது. பல நிர்வாக சேவை அதிகாரிகள் அமைச்சர்களில் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.'' என்று பொரிந்து தள்ளினார் ஸ்ரீ ரங்கா.

மிகவும் அவதானத்துடன் விடயத்தைக் கேட்டுக்கொண்ட அமைச்சர், ''அரச அதிபர்கள் உட்பட அனைத்து நிர்வாக சேவை அதிகாரிகளும் எமது நிர்வாக அமைச்சின் நேரடிப்பிரதிநிதிகள். எமது நிர்வாக உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் சுற்றறிக்கையின் படி இந்த நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அவர்கள் பயன்படுத்துவதை எவரும் தடுக்க முடியாது. எந்த அமைச்சர்களும் அதிகாரிகளை அச்சுறுத்தவும் முடியாது. இந்த அதிகாரிகள் எமது அமைச்சுக்கு மட்டுமே கட்டுப்பட்டவர்கள்.'' என்று திட்டவட்டமாகக் கூறினார்.

இதுவரை இப்படியான முறைப்பாடு தனக்குக் கிடைக்கவில்லை என்றும் எனினும் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார் அவர். (உ-2)

# புங்குடுதீவு பாடசாலை பவளவிழா இன்று

யாழ்ப்பாணம், மே 5

புங்குடுதீவு, கமலாம்பிகை வித்தியாலயத்தின் பவளவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

பவளவிழாவை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படும். கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (ம-7)

# நள்ளிரவு ஜன்னலை உடைத்து 33 பவுண் தங்க நகை திருட்டு

## புலோலி வீடொன்றில் கைவரிசை

வடமராட்சி, மே 5

நள்ளிரவுவேளை புலோலி வட. மேற்கு காந்தியூரில் உள்ள வீடொன் றில் இனந்தெரியாதோரால் 33 பவுண் பெறுமதியான தங்கநகைகள் திருடப்பட்டுள்ளன.

கே.முரளிதரன் என்பவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வீட்டில் உள்ளோர் இரவு 12.30 மணிவரை தொலைக்காட்சி பார்த்துவிட்டு உறங்கிவிட்டனர். இந்நேரம் வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாதோர் வீட்டின் கரையோரத்தில் இருந்த ஜன்னலை உடைத்து உட்சென்று அங்குள்ள அறை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த சுமார் 33 பவுண் பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

திருடப்பட்ட நகைகளில் சுமார் 16 பவுண் நகை அடகு வைக்கப்பட்டு, அன்றைய தினம் வங்கியிலிருந்து மீட்டு எடுத்து வரப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸில் புகார் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (த-236-190)

# போதையில் மக்களுக்கு இடையூறு; மூன்று இளைஞர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 5

மதுபோதையில் நின்று வீதிகளில் அட்டகாசம் புரிந்து பொது மக்களுக்கு இடையூறுவிளைவித்த இளைஞர்கள் மூவருக்கு யாழ். நீதிமன்றம் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

கடந்த 2 ஆம் திகதி மாலை வேளை குருநகர், யாழ். மடம் வீதி ஆகியவற்றில் மதுபோதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த இளைஞர்கள் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா குறித்த 3 இளைஞர்களுக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

இதில் கொழும்பைச் சேர்ந்த முகமட் றிஸ்வான், குருநகரைச் சேர்ந்த சி.அருள்ராஜ், யாழ். மடம் வீதியைச் சேர்ந்த ப.ராஜ்குமார் ஆகியோருக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (ம-9)

# அடி வாங்கிய மாணவி மயக்கம் அடித்த ஆசிரியருக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், மே 5

ஆசிரியரிடம் அடி வாங்கிய மாணவி மயக்கமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, தண்டனை வழங்கிய ஆசிரியருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டது.

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. தரம் 8 இல் கற்கும் மாணவி ஒருவர் வீட்டுப் பாடம் செய்யாமல் வந்ததன் காரணமாக ஆசிரியரால் தண்டிக்கப்பட்டார்.

சம்பவத்தைத் தொடர்ந்து அழுது கொண்டிருந்த மாணவி திடீரென மயங்கி வீழ்ந்தார் என்றும் பின்னர் அவர் அவசரமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் பாடசாலைத் தகவல்கள் கூறின.

சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவி, அவசர முதலுதவியின் பின்னர் வீடு திரும்பினார்.

''மாணவிக்கு முட்டு வியாதி இருந்துள்ளது. ஆசிரியரிடம் அடி வாங்கிய பின் தொடர்ந்து அவர் அழுததால் திடீரென மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். நாம் அவரை உடனடியாக வைத்தியசாலையில் சேர்ப்பித்தோம்'' என்று தெரிவித்தார் பாடசாலை அதிபர்.

சம்பவம் குறித்து வலயக் கல்வித் திணைக்களத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை அடுத்து ஆசிரியரை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வேறு பாடசாலைக்கு இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்தது. (உ-15)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் மோசடிகள், நிர்வாக குறைபாடுகள்

## எதிர்காலம் கேள்விக்குறி என்கிறார் அனுரகுமார எம்.பி.

கொழும்பு, மே 5

அதிக வருமானம் ஈட்டும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எதிர்காலம் நிர்வாகச் சிக்கல், நிதி, திட்டமிடலில் குறைபாடுகள் காரணமாக கேள்விக் குறியாகியுள்ளது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தில் இடம்பெறும் ஊழல் தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எரிபொருள் துறை முன்னர் இரண்டு நிறுவனங்களாக காணப்பட்டன. ஆனால் இன்று துண்டு துண்டுகளாக்கப்பட்டுள்ளன. 2002 ஆம் ஆண்டு தனியார் மயமாக்கலில் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் மூன்றில் ஒரு பகுதி ஐ.ஓ.சிக்கு கொடுக்கப்பட்டது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது இலங்கையில் பெரிய நிறுவனமாகும். மாதாந்தம் 70 மில்லியன் ரூபாவுக்கும் அண்மித்த வருமானத்தையும் வருடாந்தம் 840 மில்லியன் வருமானத்தை இந்த நிறுவனம் பெறுகின்றது. நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விளங்குகிறது.

இந்த நிலையில், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பல்வேறு மோசடிகளும், நிர்வாகக் குறைபாடுகளும் உள்ளன.

இது இவ்வாறிருக்க, பெற்றோலிய பிரதியமைச்சர் கொழும்பிலிருந்து பொலனறுவைக்குச் சென்றால் கொலன்னாவ மத்திய நிலையத்திலேயே வாகனத்துக்கு பெற்றோல் நிரப்பிவிட்டுச் செல்கிறார். அத்துடன் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குரிய ஜீப் இன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் உள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் சேவைபுரிந்த ஆரிய சேன என்ற ஓய்வுபெற்றவர் தற்போது ஸ்ரீ.சு.கட்சியின் அலுவலகத்தில் உள்ளார். ஆனால் அவருக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்தே சம்பளம் வழங்கப்படுகிறது. அவரது மேலதிக நேரக் கொடுப்பனவு அட்டையில் ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் கையெழுத்திடுகிறார். அத்துடன், பெற்றோலிய வளத்துறை அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அமைச்சின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அன்றி அலுவலகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் எனப் பெயரிட்டு சம்பளம் வழங்கப் படுகிறது. இவ்வாறு மக்களின் பணம் விரயமாக்கப்படுகிறது.

இதேவேளை, அநுராதபுரத்தில் களஞ்சியசாலை ஒன்று உள்ளது. கஹட்ட கஸ்திதிலியவிலுள்ள ஜயவர்தனவுக்கு அது பொறுப்பாக வழங்கப்பட்டுள்ளது. அவர் அங்கு சென்று 'சரி' என்ற அடையாளம் இடவும் ஒரு லீற்றருக்கு 20 சதமும் வழங்கப்படுகிறது. இப்படி ஏப்ரல் மாதத்தில் 53 மில்லியன் லீற்றருக்கு 106 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு எயார் லங்கா 2 பில்லியன் ரூபா, இராணுவம் 5 பில்லியன் ரூபா, கற்படை 10 பில்லியன் ரூபா, சி.ஜி.ஆர். 3 பில்லியன் ரூபா, ஆர்.டி.ஏ. பில்லியன் ரூபா, இலங்கை போக்குவரத்துச்சபை 8 பில்லியன் ரூபா கடன் இன்னும் செலுத்தப்படாதுள்ளன. அத்துடன், இலங்கை வங்கிக்கு 170 பில்லியன் ரூபாவும், மக்கள் வங்கிக்கு 57 பில்லியன் ரூபாவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடன்விட்டுள்ளது. இந்த நிலைமையில், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும் - என்றார். (ஒ-5)

# பிரதேச செயலகங்களில் விற்பனைக்கு வெசாக் வாழ்த்து அட்டைகள்

## கலாசார உத்தியோகத்தர்கள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், மே. 5

யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்வதற்காகப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள வெசாக் வாழ்த்து அட்டைகளை விற்பனை செய்ய முடியாத நிலையில் பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தர்கள் திண்டாடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கலாசார அமைச்சின் கீழ் உள்ள கலாசார அலுவல்கள் திணைக்களம் கிராமிய மாவட்ட கலாசார சபைகளின் செயல்திட்டத்தின் கீழ் ஐந்து லட்சம் ரூபா வருமானத்தை ஈட்டும் பொருட்டு வெசாக் வாழ்த்து அட்டைகளை விற்பனைக்காக அனுப்பியிருந்தது.

பெரும் இழப்புகளைச் சந்தித்த துயரில் இருந்து இன்னமும் மீளமுடியாத நிலையில் உள்ள மக்கள் தமது முக்கிய கொண்டாட்டங்களுக்கான வாழ்த்து அட்டைகளைக்கூட தமது உறவுகளுக்கு அனுப்பாத நிலை தொடர்பில் வெசாக் அட்டைகளை எப்படி யாருக்கு விற்பனை செய்ய முடியும் எனக் கேள்வி எழுப்பப்படுகிறது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லசந்தவின் படுகொலையுடன் பொன்சேகாவை இணைக்க முயற்சி

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கு சரத் பொன்சேகாவே பொறுப்பு என்று குற்றம் சுமத்துவதற்கான திட்டம் பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

சரத்பொன்சேகாவுக்கு எதிராக வாகரை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய இடங்களில் பணியாற்றும் எட்டுப் படையினர் சாட்சிகளாகப் பயன்படுத்தப்படவுள்ளனர்.

இந்தப் படையினருக்கு அவர்கள் பணியாற்றும் முகாம்களில் சிறப்பு வசதிகளை செய்து கொடுக்குமாறும், அவர்களின் குடும்பத்தினருக்கு நிதி உதவிகள் வழங்குமாறு கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தத் திட்டத்தை இரகசியமான முறையில் நிறைவேற்றுவதற்காக வடக்கில் பணியாற்றிய இராணுவ அதிகாரி ஒருவர் அண்மையில் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் இந்தத் திட்டத்தின் படி, இரண்டு அல்லது மூன்று படையினர் கைது செய்யப்படவுள்ளனர்.

இவர்களின் கைது தொடர்பாக ஊடகங்களில் பெரியளவில் பரப்புரைகளை செய்வதற்கு இந்தத் திட்டத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரியே ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளார். கைது செய்யப்படும் படையினர் மூலம் சாட்சியங்களைப் பெற்று சரத் பொன்சேகாவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவுள்ளது.

இதன்போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்று சாட்சிகளுக்குத் தற்போது பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும், ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கு பொறுப்பானவர் யார் என்பது தான் அறிந்துள்ளதாகவும், விரைவில் இவ்விடயம் வெளியில் வரும் என்றும் பாதுகாப்புச் செயலாளர் வாராந்த பத்திரிகை ஒன்றிற்கு அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-10)
(தமிழ் ஈ.என்.என்.)

## திருமண ஜோடிகளுக்கு இனிமேல் இரத்தப் பரிசோதனை

தலசீமியா நோய் பரவுதலை தடுப் பதற்காக திருமணம் செய்யவுள்ள ஜோடிகளுக்கு இரத்த பரிசோதனை கட்டாயமாக்கப் படவுள்ளதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் கூறினார்.

தலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக குரு நாகல் பொது வைத்தியசாலையில் தேசிய தலசீமியா நிலையத்தினால் கண்டறியப்பட்டுள்ளது என அமைச்சின் பேச்சாளர் டபிள்யூ.எம்.டி. வன்னிநாயக்க கூறினார்.

1,600 தலசீமியா நோயாளிகள் நாட்டில் காணப்படுவதாகவும் இதில் 160பேர் சிறுவர்கள் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நோயை மாற்ற முடியாது. இதற்க வாழ்நாள் முழுதும் மருந்து வழங்க வேண்டும். இந்த நோயாளிகளை தொடர்ந்து அவதானிக்க வேண்டும்.

இந்த நோயை கட்டுப்படுத்துவதற்குள்ள ஒரேயொரு வளி தலசீமியா காவிகளாகவுள்ள இருவர் திருமணம் செய்வதை தடுப்பதாகும். பெற்றோர் இருவரும் தலசீமியா காவிகளாக இருப்பின் பிள்ளைகள் நிச்சயமாக தலசீமியா நோயாளிகளாக வருவர் என்றும் அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

திருமணம் செய்யவிருக்கும் ஜோடிகளுக்கு அரச வைத்திய சாலைகளில் தலசீமியா நோய்க்கான இந்தப் பரிசோதனை இலவசமாக செய்யப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் தலசீமியா நோய்க் காவிகள் இருவர் திருமணம் செய்வதை தடுக்க முடியும். சுகாதார அமைச்சு ஆண்டுதோறும் 350 மில்லியன் ரூபாவை தலசீமியா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக செலவளித்து வருகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

(தமிழ்மிரர்) (த-10)

## இணையச் செய்திகள்

### ஐ.நா. போர்க்குற்ற அறிக்கை: தமிழ்நாட்டில் விவாத அரங்கு

ஐ.நா. போர்க்குற்ற அறிக்கை தொடர்பாக தமிழ்நாட்டின் பல்வேறு சமூக தளங்களிலும் விவாதங்கள்முன்னெடுக்கப்படுகின்றன.

அவ்வகையில் தமிழ்நாட்டில் இருந்து வெளியாகும் 'உலகத் தமிழ் இதழ்' என்னும் மகுடத்துடன் வெளியாகும் காலச்சுவடு மாதஇதழ் விவாத அரங்கு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

'ஈழம்: சிங்கத்தின் நகங்கள்' எனத் தலைப்பிடப்பட்டிருக்கும், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், செயற்பாட்டாளர்கள் பங்கேற்கும் இவ்விவாத அரங்கு எதிர்வரும் 08.05.2011 அன்று சென்னையில் இடம்பெறுகின்றது.

(புதினப்பலகை)(த-10)

### சனல் - 4 வீடியோ தொடர்பாக இரகசிய சாட்சியம்

மொரட்டுவை பல்கலைக்கழக கணினி விஞ்ஞான மற்றும் பொறியியல் திணைக்கள சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சத்துர டி சில்வா கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் நேற்று புதன்கிழமை இரகசியமாக சாட்சியமளித்தார்.

இவர் சனல் - 4 வீடியோ காட்சி தொடர்பாக சாட்சியமளிக்கவுள்ளதாக நல்லிணக்க ஆணைக்குழு அறிவித்திருந்தது.

ஆணைக்குழுவின் தலைவர் சீ.ஆர்.டி. சில்வா தலைமையில் இடம்பெற்ற இன்றைய அமர்வில் தனது பல்கலைக் கழகத்தின் ஆலோசனைக்கிணங்கவும் தனது பாதுகாப்பு காரணங்களுக்காகவும் தான் இரகசியமாக சாட்சியமளிக்க வுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்பட்டனர்.

(தமிழ்மிரர்) (த-10)

# ஐ.நா.வின் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளத் தயார் - பொன்சேகா

ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள சிறிலங்கா இராணுவத்துக்கு எதிரான குற்றசாட்டுகளை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

தனது கட்டளையின் கீழ் செயற்பட்ட இலங்கை படையினர் ஒருபோதும் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறையில் தண்டனை அனுபவித்து வரும் அவர் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வைத்து செய்தியாளர்களிடம் பேசிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தனது கட்டளையின் கிழேயே படையினர் செயற்பட்டதாகவும், அவர்களின்

செயற்பாடுகளுக்குத் தானே பொறுப்பு என்றும் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

இலங்கையின் ஆயுதப் படைகளின் மீது குற்றம் சாட்டியுள்ள பான் கீ மூனின் அறிக்கையை எதிர்கொள்வதற்கு தான் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நாவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைத் தான் ஏற்றுக் கொள்வதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பின்லேடன் மீதான தாக்குதல் ஒரு திறமையான படை நடவடிக்கை என்று குறிப்பிட்டுள்ள, சரத் பொன்சேகா இதற்காக அமெரிக்கப் படைகளுக்கு வாழ்த்துக் கூறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பின்லேடனைக் கொன்றதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனது கட்அவுட்களை வொஷங்டனில் வைக்கமாட்டார் என்றும், இராணுவத் தளபதியை வீட்டுக்கு அனுப்பமாட்டார் என்றும் தான் கருதுவதாகவும் சரத் பொன்சேகா மேலும் கூறியுள்ளார்.

(த-10)
(புதினப்பலகை)

# கடல் மார்க்கமாக இலங்கைக்கு அகதிகளை அனுப்பியவர்கள் கைது

இந்தியாவிலிருந்து நாடு திரும்ப விரும்பிய இரு இலங்கை அகதிகளிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு கடல் மார்க்கப் பயணத்துக்கு ஏற்பாடு செய்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை அகதிகள் இருவரிடம் இருந்தும் சுமார் 40 ஆயிரம் இந்திய ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு இராமேஸ்வரம் கடற்பரப்பின் ஊடாக அவர்களை சட்டவிரோதமாக இலங்கைக்கு அனுப்பிவைத்துள்ளதாக விசாரணைகளில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை தலைமன்னாரைச் சேர்ந்த பீ.சேகர் (31) மற்றும் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த எம்.உமயேஸ்வரன் ஆகியோரே நேற்றுமுன்தினம் இந்தியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தமிழ்நாடு பொலிஸ் அத்தியட்சகர் அனில் குமார் கிரி தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி இரவு இரு இலங்கையர்கள் இராமேஸ்வரம் கடற்பரப்பின் ஊடாகக் கச்சதீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டவர்களைக் கச்சத்தீவிலிருந்து சிலர் பொறுப்பேற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட தலைமன்னாரைச் சேர்ந்த சேகர் எனப்படுபவர் சில வருடங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு அகதியாகச் சென்றவராவார். இவர் திருச்சியில் உள்ள வாழவந்தான் கோட்டையிலுள்ள அகதிகளுக்கான முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

இரு இலங்கை அகதிகளான குமார் மற்றும் ராஜு ஆகியோர் மீண்டும் நாடு திரும்பத் தன்னிடம் உதவி கோரியதாகவும் அதனால் தான் அவர்களுக்கு உதவி செய்ததாகவும் கைது செய்யப்பட்ட சேகர் பொலிஸ் விசாரணைகளின் போது வாக்கு மூலம் அளித்துள்ளார்.

(த-10)
(தமிழ்வின்)



முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக்கொடி வழக்கு நேற்று புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பிரதிவாதி [illegible] பெரும் பாதுகாப்புக்கு மத்தியில் அழைத்து வரப்படுவதையும் அவர் [illegible] நோக்கி கையசைப்பதையும் படங்களில் காணலாம்.
(தமிழ்மிரர்)

## ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக மிலிந்த மொறகொட

முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளதை ஜனாதிபதி செயலகம் உறுதிப்படுத்தியது.

இவருக்கான நியமனம் இந்த வாரம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக மேலதிக செயலாளர் டி.எஸ். குணரத்ன தெரிவித்தார்.

மொறகொட எந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கவுள்ளார் என்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கப்படவில்லைஎன அவர் குறிப்பிட்டார்.

இவர் அடுத்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளதாக குணரத்ன மேலும் தெரிவித்தார்.

கடந்த 2001ஆம் தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரை மிலிந்த மொறகொட கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததுடன் நீதி மற்றும் சுற்றுலா அமைச்சராகவும் கடமையாற்றியுள்ளார்.

(தமிழ்மிரர்) (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ஆசிரியர் இடமாற்றங்கள் இன்றுமுதல் உடனடியாக நடைமுறைக்கு

வடமாகாண ஆசிரியர் இடமாற்றங்கள் அனைத்தும் உடனடியாக மீண்டும் இன்று வியாழக்கிழமை முதல் அமுல்படுத்தப்படுவதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அறிவித்துள்ளார்.

## ஆளுநர் சந்திரசிறி பணிப்புரை

இந்த விடயம் தொடர்பாக வடமாகாணக் கல்வி அமைச்சின் பதில் செயலாளர் ஆர்.இரவீந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் தலைமையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் -

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் 25 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2011 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவிருந்து பிற்போடப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான ஆசிரியர் இடமாற்றங்கள் யாவும் ஆளுநரின் பணிப்புக்கு அமைய உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்படுகின்றது.

இதன்படி வன்னி மாவட்ட வலயங்களிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் உரிய வலயக் கல்விப்பணிப்பாளர்களுடன் தொடர்புகொண்டு தமக்கு வழங்கப்படும் பாடசாலையில் உடன் கடமையேற்கலாம்.

அதேபோன்று யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களிலிருந்து வன்னி வயலங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களும் உனடியாக அந்தந்த வலயங்களில் கடமையேற்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

இந்த இடமாற்றங்களை ஏற்றுக் கொள்ள முடியாமல் மேன்முறையீடு செய்பவர்கள் தமது மேன்முறையீடுகளை நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு முன்னர் தகுந்த ஆதாரங்களுடன் தத்தமது வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். இந்த மேன்முறையீடுகள் யாவும் எதிர்வரும் 8 ஆம் திகதி வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி முன்னிலையில்இடமாற்ற சபையூடாகப் பரிசீலிக்கப்படவுள்ளன. (த-15)


தமிழ் கீர்த்திராஜன் A/L 2013 Sat,Sun 9-10Am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

அளவையியல் கமல்தாசன் A/L 2013 Sat,Sun 11-12Am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

இந்துநாகரீகம் ஸ்ரீஸ் A/L 2013 Sat,Sun 10-11Am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

புவியியல் பாலா A/L 2013 Sat,Sun 8-9Am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

அரசியல் றொபின்சன் A/L 2013 Sat,Sun 12-1Pm NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

வரலாறு ஆனந்தன் A/L 2013 Sat,Sun 10-11Am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

நாட.அரங் ரமேஸ் A/L 2013 Sat,Sun 8-9Am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

விவசாயம் கிரி A/L 2013 Sat,Sun 8-9Am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கிறிஸ்தவம் திலக் A/L 2013 Sat,Sun 10-11Am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கணக்கீடு பகீரதன் A/L 2013 Sat,Sun 9-10Am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

வணிகக்கல்வி யசோதரன் A/L 2013 Sat,Sun 8-9Am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

பொருளியல் கஜீதரன் A/L 2013 Sat,Sun 10-11Am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

புள்ளிவிவரவியல் S.சயந்தன் A/L 2013 Sat,Sun 8-9Am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


## 2 ஆம் ஆண்டு நினைவு நாள்



**அமரர் நடராசா யோகராசா**
(ராசன் - பரந்தன்)

பிறப்பு 04.04.1965 — இறப்பு 27.04.2009

06.05.2011 அன்று வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.103, அம்பாள்குளம்,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.


"புதியதோர் உலகம் செய்வோம்"
**உயர் கல்விச் சேவை வளாகம்**
முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)

இம் மாதம் 15ம் திகதி ஆரம்பமாவுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பொதுக் கலைமாணித் தேர்வுக்கான (B.A Fainal)

**கருத்தரங்கு**

பிரபல விரிவுரையாளர்கள் பங்குபற்றுகின்றனர்

முதற் கருத்தரங்கு

**பொருளியல் S.வரதராஜன்**

06- 05 -12 வெள்ளி 1.00 - 5.00 அச்சிடப்பட்ட பாடக்குறிப்புக்கள் வழங்கப்படும்.

வைகாசி 6 இல் "புதியதோர் உலகம் செய்வோம்"
உயர் கல்விச் சேவையில் புதியதோர் உதயம்
**உயர் கல்விச் சேவை வளாகம்**
முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)

யாழ்ப்பாண, பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்

புதிய கல்வியாண்டிற்கான வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகின்றன.

மாணவர்களின் பதிவு, விரிவுரைகள் பற்றிய விபரங்கள் 7ம் திகதி வெளிவரும்.

**SUBRA (14)** 2013 A/L புதிய பிரிவு — 05 : 05 : 2011 மாலை 4.00

| | சித்தங்கேணி | வட்டுக்கோட்டை |
|---|---|---|
| தமிழ் | யசீதரன் | நாக.தமிழீந்திரன் |
| இ.நாகரிகம் | சந்திரன் | சிறீஸ் |
| வரலாறு | R.R.ஆனந்தன் | பத்மன் |
| அரசியல் | அசோக் | அசோக் |
| அளவையியல் | E.S.பவன் | E.S.பவன் |
| நாடகம் | கணேஸ் | வினோ |
| புவியியல் | ஐங்கரன் | செல்வா |
| இலகு கணிதம் | கஜன் | கஜன் |
| விவசாயம் | சசி | சசி |
| பொருளியல் | ஜெயக்குமார் | S.S.சிறி |
| வணிகக் கல்வி | நந்தீஸ் | விஷ்னு |
| கணக்கீடு | சுபேஸ், சீலன் | D.Sam |
| பௌதீகவியல் | அனபாயன் | வர்ணன் |
| இரசாயனவியல் | சிவகரன் | பெனோ |
| இணை. கணிதம் | கெங்காதரன் | ரமேஸ் |
| உயிரியல் | சசிதரன் | தயாபரன் |
| G.I.T. | | அம்பி |

* கடந்த காலத்தின் சிறந்த பெறுபேறுகளை எமது மாணவர்கள் பெற்றிருந்தமை எமது திறமையின் வெளிப்பாடு.
* அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**1st in Com, G.A.Q** யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

* A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
* பேராதனை பல்கலைக்கழகத்துக்குரிய பதிவுகள் நடைபெறுகின்றன.
* புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

குறிப்பு: யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கடந்தமாதம் PART I பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான கலைமாணி இறுதி யாண்டு (B.A) விரிவுரைகள்.

ஆரம்பம் 07.05.2011 காலை 8 மணி

விவரங்களுக்கு: S.அருள்நங்கை (நிர்வாகி)

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**பிரத்தியேக வகுப்பு** 215 பழைய பூங்கா வீதி யாழ்ப்பாணம் (யாழ் கச்சேரிக்கு அருகாமையில்)
**பொருளியல்**
S. வரதராஜன் B.A (Hons)

| A/L 2012 | 07 | A/L 2013 |
|---|---|---|
| தேர்ச்சி - 5 | - | தேர்ச்சி - 2 |
| தேசிய கணக்கீடு | 05 | சந்தைச் செயற்பாடு |
| ஆரம்பம் 07 - 05 - 12 | - | ஆரம்பம் 07 - 05 - 12 |
| சனி, ஞாயிறு 3.00 – 4.00 | 12 | சனி, ஞாயிறு 2.00 – 3.00 |

**மலிவு விலையில்...**
புத்தம் புதிய அழகிய டிசைன்களில்
**திருமண அழைப்பிதழ்கள்**
பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ளலாம் 10% கழிவு வழங்கப்படும்
ANDRA DIGITAL PRINTING
356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
6D, உப்புமடம் சந்தி, K.K.S வீதி, கோண்டாவில்.
Tel:021222 8929, 0776622981,0750404144

**கடைகள் விற்பனைக்கு**
பண்டத்தரிப்பு சந்தைக்கு முன்பாக அமைந்துள்ள (N.N.R) கடைத் தொகுதி (மூன்று மாடிக் கட்டடம்) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு- 0771726564


**கொள்முதல் செய்யப்படும்**
பழைய இரும்பு, பித்தளை, செம்பு, அலுமினியம் தரகர் இன்றி நேரடியாக எவ்வளவு தொகையானாலும் நல்ல விலைக்கு கொள்முதல் செய்யப்படும்.
தொடர்புகளுக்கு: 0777769869, 0757846846, 0772357667

**ஆர்கி என்ரப்பிறைசஸ்**



தானியங்களை உடைத்து, தீட்டி, அரைத்து, நொருக்கி, பிழியும் இயந்திரங்கள் நம்பமுடியாத விலையில்... 2 வருட உத்தரவாதம்
150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (46)

அக்ஷய திருதியை நாளான (05.05.2011, 06.05.2011) அன்பளிப்புக்களும் காத்திருக்கின்றன.
**சிறீராம் ஜுவல்லர்ஸ்**
தர உத்தரவாதத்துடன் தங்க நகைகளை வாங்கி உங்கள் வாழ்க்கையில் ஐஸ்வர்யங்கள் அனைத்தையும் பெற எம்மை நாடுங்கள்.



உங்கள் தங்க நகைகளின் தரத்தினை தர நிர்ணய உத்தரவாதம் செய்தும் பெற்றுக்கொள்ளலாம்.
இல. 193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0212228334


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத் திருநாள் சிறப்பு மலர்

அக்ஷய திருதியை மே 06

# குறைவில்லாமல் வாழ வழி செய்யும் அட்சய திருதியை தினம்

அள்ள அள்ளக் குறையாமல் உணவை அள்ளித் தந்தது அட்சய பாத்திரம். பாண்டவர்கள் வனவாசம் செய்த நேரத்தில் அவர்களுடைய ஒரு நேர உணவுக்கு பெரிதும் உதவியது ஒர் அட்சய பாத்திரம் என்பது அனைவருக்கும் தெரியும்.

பஞ்சபாண்டவர்களுக்கும் அவர்களுடன் இருந்தவர்களுக்கும் மற்றும் அதிதிகளுக்கும் தினந்தோறும் இந்த அட்சயபத்திரத்திலிருந்து உணவு எடுத்து அதைப் பரிமாறுவது திரௌபதியின் வழக்கம். தானும் உணவருந்தியபின் அதனை கழுவி வைத்து விடுவாள். கழுவி வைத்தபின் அன்றைய தினம் மீண்டும் உணவு எடுக்கமுடியாது. மறுநாள் காலையில்தான் திரும்பவும் அதிலிருந்து உணவை எடுக்கமுடியும்.


ஒருநாள் மதியம் பாண்டவர்கள் இருக்கும் இடத்துக்கு கிருஷ்ண பரமாத்மா வந்தார். வந்தவுடன் அவரை பாண்டவர்கள் வரவேற்று உபசாரங்கள் செய்து இருக்கையில் அமரச்செய்தனர். பரமாத்மாவானவர் திரௌபதியைப் பார்த்து 'சகோதரியே எனக்குப் பசியாக இருக்கிறது. உண்ணுவதற்கு ஆகாரம் கொடு' என்று கேட்டார். திரௌபதியோ தான் உணவருந்திய பின் பாத்திரத்தைக் கழுவி வைத்துவிட்டாள்.

திரௌபதி தயங்குவதைப் பார்த்த பரமாத்மா என்ன தயக்கம்? திரௌபதி பாத்திரத்தைக் கழுவி வைத்தாலும் பரவாயில்லை. அதை எடுத்து ஒரு பருக்கை அளவு உணவு அதில் ஒட்டியிருந்தாலும் அதனை உண்ண என் வயிற்றுப் பசியும் தணிந்து விடும் என்றார்.

**பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக் குரு**
பிரதம குரு,
ஸ்ரீ வல்லிபுரக் கோயில், புலோலி.

திரௌபதியும் உடனே சென்று பாத்திரத்தை எடுத்துப் பார்த்தாள். அதில் ஒரு பருக்கையளவு உணவு ஒட்டியிருந்தது. அதனைப் பக்குவமாகத் தன் கையால் எடுத்து வந்து பரமாத்மாவிடம் கொடுக்க அவரும் அதை அன்புடன் வாங்கிச் சாப்பிட்டார். உடனேயே அவரது வயிற்றுப் பசியும் நீங்கியது. இந்த நிகழ்ச்சி நடந்த நாள் தான் 'அட்சய திருதியை'.

ஒரு பருக்கையளவு உணவு உண்டவுடனேயே பரமாத்மாவுக்கு உணவிலே நிறைவு கிடைத்த நாள் இது. இன்று ஆரம்பித்துச் செய்யப்படும் எல்லாக்காரியங்களும் குறைவில்லாமல் நடக்கும் என்று இதனால்தான் எல்லோரும் நம்புகிறார்கள்.



குசேலர் கிருஷ்ண பரமாத்மாவை சந்தித்ததும் 'அட்சய திருதியை' தினத்திலன்றுதான். அந்த நாளில் பரமாத்மாவை குசேலர் சந்தித்தபடியால் பெரும் செல்வத்துக்கு அதிபதியானார்.

வைகாசி மாதத்திலே வருகின்ற வளர்பிறைத் திருதியை திதி 'அட்சய திருதியை' என்று அழைக்கப்படுகின்றது.

திரேதாயுகம் ஆரம்பமான நாளே திரேதாயுகாதி எனப்படும். அந்த நாளில்தான் பரசுராமர் அவதாரம் செய்தார். இந்தச் சுபதினமானது அன்றைய தினம் மதியம் வரை திருதியை திதி இருக்ககூடியதாக அமைந்திருக்க வேண்டும். அன்றைய தினத்தில் துவிதியைத் திதியின் வேதை இருக்கக்கூடாது. சூரியோதயத்தில் திருதியைத் திதிதான் இருக்க வேண்டும். குறைவில்லாமல் வாழ வழி செய்யும் இந்தநாளில் புண்ணிய காரியங்களைச் செய்யவேண்டும். தான தருமங்கள்

( IV ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத் திருநாள் சிறப்பு மலர்

அக்ஷய திருதியை மே 06

## குறைவில்லாச் செல்வம் தரும் அக்ஷய திருதியை

வருடந்தோறும் சித்திரை மாதத்து வளர்பிறைத் திருதியை நாளை அட்சய திருதியைத் திருநாளாக மக்கள் கொண்டாடுகின்றார்கள். இந்த நன்நாளில் ஒரு சிறிய அளவு தங்கமோ, வெள்ளியோ வாங்கினால் அது வாழ்வில் நிறைவையும் மனமகிழ்வையும் தரும். மேன்மேலும் செல்வச் சிறப்புக்கள் வளரும். எனவேதான் அக்ஷய திருதியை அன்று மக்கள் தங்கமோ வெள்ளியோ சிறியளவிலாவது வாங்கவேண்டும் என விரும்புகின்றார்கள்.

இந்த அக்ஷய திருதியை நன் நாளில் இந்தியாவின் புனிதநதியாகிய கங்கை சொர்க்கத்திலிருந்து மண்ணுக்கு வந்ததாகவும் இந்து இதிகாசங்களின் படி திரேதா யுகம் ஆரம்பமானதாகவும் மகாவிஷ்ணுவின் அவதாரமான பரசுராமர் அவதரித்தாகவும் மகாவிஷ்ணுவின் சிறப்பான கண்களாகவும் பலவாறாகப் போற்றப்படுகின்றது.

அக்ஷய திருதியைத் திருநாளிலேதான் தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து காமதேனுவும் கற்பகவிருட்சமும் தோன்றியதாகவும் புராணங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன.

அக்ஷயம் என்றால், வளருதல் என்று பொருள் சித்திரை மாதம், வளர்பிறையில் வரும் திருதியை நாள் அக்ஷய திருதியை. இந்த நாளில் எந்தப் பொருள் வாங்கினாலும் சிறப்புதான். அன்று, தான தர்மம், புதுக்கணக்கு ஆரம்பம், வித்தியாரம்பம், விரதம், தெய்வ வழிபாடு ஆகியவற்றை மேற்கொள்வது உத்தமம். இப்படிப்பட்ட அக்ஷய திருதியைப் பற்றி புராணக் கதைகள் பல உண்டு.

ஏழ்மையில் வாடிய ஸ்ரீ கிருஷ்ணரின் நண்பர் குசேலர், ஒரு படி அவலை எடுத்துத் தனது கிழிந்த மேலாடையில் முடிந்து கொண்டு ஸ்ரீ கிருஷ்ணரை சந்திக்கச் சென்றார். குசேலரை வரவேற்று உபசரித்த கண்ணன், அந்த அவலை எடுத்துச் சாப்பிட்டபடி, ''அக்ஷயம்'' என்றார். உடனே, குசேலரின் குடிசை, மாளிகை ஆனது; குசேலர் குபேர சம்பத்து பெற்றார். குசேலருக்கு, கண்ணன் அருள் புரிந்தது அக்ஷயத் திருதியை திருநாள் ஆகும்.

இந்த நன்னாளில் சிவபார்வதி, ஸ்ரீமன் நாராயணன், ஸ்ரீலட்சுமி ஆகியோரை பூஜித்தால் சகல சௌபாக்கியங்களும் கிட்டும். அன்று பக்தர்களுக்கும், மறைந்த முன்னோருக்கும் சிராத்தம், பூஜை செய்தால் பாவ விமோசனம் பெறலாம்.

ஸ்ரீ பரசுராமர் அவதரித்ததும், கிருத யுகம் தோன்றியதும் இந்த அக்ஷய திருதியைத் திருநாளில்தான். அக்ஷய திருதியை அன்று ஏழைக்கு ஆடை, தானம் அளித்தால் மறுபிறவியில் ராஜ வாழ்வு கிட்டும், என்பது நம்பிக்கை. தயிர்சாதம் தானம் செய்தால், ஆயுள் பெருகும். இனிப்புப் பொருள்கள் தானம்

நீர்வை மணி

கொள்வனவு செய்வதால் தமது வாழ்வும் வளமும் சிறக்கும் என நம்புவதில் தவறேதும் காண இயலாதல்லவா?

சித்திரை மாதத்து அக்ஷய திருதியை நாளன்று தங்கம் வாங்குவது, அது சிறியதோ

( III ஆம் பக்கம் பார்க்க)



அக்ஷய திருதியை தங்கத் திருநாள் மே 6

அக்ஷய திருதியை தினத்தில் நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளைச் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.

ஸ்ரீ குமரன்ஸ் நகையகம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

177G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். TP: 021 2224509



தெய்வீகத் தன்மை வாய்ந்த இந்நாளில் தங்க நகைகளை வாங்கி உங்கள் ஐஸ்வர்யத்தையும் அதிர்ஷ்டத்தையும் பெருக்கிக்கொள்ளுங்கள்.

சிறி மதனா நகைமாளிகை

155/M கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 7772

கிளை நிறுவனம் :

மதனா ஜீவல்லறி

177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 5526



அக்ஷய திருதியை தங்கத் திருநாள்


ஹரன் ஜீவல்லர்ஸ்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தங்கத்திருநாள் வாழ்த்துக்கள்.

மே 6 தங்கம் வாங்க சிறந்தநாள் இத்தினத்தில் தங்கம் வாங்கி உங்கள் ஐஸ்வர்யத்தையும் அதிர்ஷ்டத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

205, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

TP : 021 2226083, 0714182480



அக்ஷய திருதியை பவுண் கொள்வனவு செய்வதற்கு உகந்தநாள். அன்று பவுண் கொள்வனவு செய்பவர்களுடைய வாழ்க்கை மேலும் சிறப்படையும். பொருள்கள் சேரும் என்பது தொன்று தொட்டு இருந்து வரும் நம்பிக்கையும் நடைமுறைகளுமாகும்.
எதிர்வரும் 06.05.11 வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் அக்ஷய திருதியையை முன்னிட்டு நகைகள் கொள்வனவு செய்வதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதனைத் தெரியப்படுத்துகின்றோம்.
எமது அன்பான வாடிக்கையாளர்கள் அக்ஷய திருதியையில் பவுண் கொள்வனவு செய்து சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

எமது ஸ்தாபனத்திற்கு வேறு எங்கேயும் கிளைகளோ இணை ஸ்தாபனங்களோ இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு:
அதிநவீன டிஜிற்றல் கருவி மூலம் நகைகள் தரம் பரிசோதித்து தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

வினோ நகைப்பூங்கா



185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5394/ 021 222 9494/ பக்ஸ்: 021 222 2824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத் திருநாள் சிறப்பு மலர்
## அக்ஷய திருதியை மே 06

## குறைவில் .....

( II ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரியதோ ஏதாவதொரு தங்கநகை வாங்குவது அந்த ஆண்டு முழுவதும் தமது குடும்பத்துக்கு தன லாபத்தையும், மகிழ்ச்சியான வாழ்க்கையையும் தரும் என்பதும் இந்து மதத்தவர்களது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

அந்த வகையில் நமது ஈழத்திருநாட்டில் வாழும் இந்து மதத்தவர்கள் மத்தியிலும் இத்தகைய நம்பிக்கை மேலோங்கி இருப்பதன் காரணமாக இந்த ஆண்டின் சித்திரைத் திருதியை நாளான நாளைய தினம் தத்தமது வசதி வாய்ப்புக்கு ஏற்ற விதத்தில் சிறியதோ, பெரியதோ, ஏதாவதொரு தங்க நகை வாங்கி விட வேண்டுமென்பதில் எமது இந்து மதப் பெண்கள் ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்க முடிகிறது. வாழ்க்கையின் ஆதாரமே நம்பிக்கை தானே? இன்று உலகம் நவீனத்துவத்தில் எவ்வளவோ தூரம் முன்னேறிச் சென்று விட்டுள்ள போதிலும், தமது இனமத பாரம்பரிய பழக்க வழங்கங்களையும் நம்பிக்கைகளையும் கட்டிக் காத்துப் பேணிவரும் தமிழ் மக்கள் - இந்து மதத்தவர் நாளைய சித்திரைத் திருதியை தினத்தன்று தங்கம் தந்தால், திருமணத் தடை அகலும். உணவு தானியங்களை தானம் செய்தால், விபத்துகள் அகால மரணம் போன்றவை சம்பவிக்காது. கால்நடைகளுக்குத் தீவனம் அளித்தால் வாழ்வு வளம் பெறும்.

அக்ஷய திருதியை 06.05.2011
நாளை வெள்ளிக்கிழமை தங்கம் வாங்குவதற்கு விசேட தினமாகும். எம்மிடம் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட அன்பளிப்புகள் வழங்கப்படும் என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.
அக்ஷய திருதியில் தங்கம் வாங்குவதற்கு லெட்சுமி கடாட்சமான ஸ்தாபனம்
அலங்கார் நகை மாளிகை
21/7,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். TP:021 2222920



அக்ஷய திருதியை தங்கத் திருவிழா மே 6
தெய்வீகத்தன்மை வாய்ந்த இந்நாளில் தங்கநகைகளை வாங்கி உங்கள் ஐஸ்வர்யத்தையும் அதிஷ்டத்தையும் பெருக்கிக்கொள்ளுங்கள் இத்தருணத்தில் விஷேட கழிவுகள் வழங்கப்படும்.
செல்வி நகையகம்
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)
நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள், நல்ல முறையில் உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்.




அக்ஷய திருதியை தங்கத் திருநாள் மே 6
தங்கம் வாங்குவதற்கு சிறந்த நாள் ஆகிய இத்தினத்தில் எம்மிடம் தங்கம் வாங்கும் உங்களுக்காக விசேட விலைக் கழிவுகளும் வழங்கப்படும்.
வெளிநாடுகளிலுள்ள உங்கள் உறவுகளுக்கு பொருளகளை அனுப்ப நம்பிக்கையான ஒரே இடம்
விக்னேஸ்வரா நகைப்பூங்கா
205/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 34 D கந்தசாமி கோயில் வீதி, வவுனியா.



அக்ஷய திருதியை தங்கத் திருவிழா மே 6
சிங்கப்பூர் ஜுவல்லறி
றெடிமேட் நகைக்கான சாம்ராஜ்யம்
அக்ஷய திருதியையில் (06.05.2011) வெள்ளிக்கிழமை நகை வாங்குபவர்களுக்கு சகல ஐஸ்வர்ய சிறப்புக்கள் உண்டாகும். இப்புனித நாளிலே தங்கத்தினை கொள்வனவுசெய்து தனவந்தராகுங்கள்.
SINKAPOORE JEWELLERY
இல.93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 4590260



அக்ஷய திருதியை தினத்தில்..
நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்
ஸ்ரீ வாணி நகை மாடம்
173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P : 222 3225
தங்கப்பவுண் நகை வியாபாரம்





நவீன அழகிய தங்க ஆபரணங்களை உத்தர வாதத்துடனும், குறித்த தவணையிலும்பெற்றுக் கொள்ள எம்மிடம் வாருங்கள்.
நியூ பிரியாங்கா நகைமாளிகை
இல.69, யாழ். வீதி,(கச்சேரி முன்பாக) கிளிநொச்சி. 0212285433, 0213208611
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0212225644
நகைப் பிரியர்களுக்கு ஓர் நற்செய்தி!
அக்ஷய திருதியை திருவிழா எதிர்வரும் 06.05.2011 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது அன்றைய தினம் தங்க நகைகள் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக் கழிவில் விற்பனை செய்யப்படும். இவற்றுடன் நினைவுச் சிறப்புப் பரிசில்களும் எமது வாடிக்கைப் பெருமக்களுக்கு வழங்கவுள்ளோம் என்பதை மனமகிழ்வுடன் தெரியப்படுத்துகின்றோம்.
"உடன் விரையுங்கள்"



அக்ஷய திருதியை தங்கத் திருநாள்
வாடிக்கையாளர்களே!
அக்ஷய திருதியை முன்னிட்டு நாளை (6.05.2011) வெள்ளிக்கிழமை அன்று புதிய நகைகளைக் கொள்வனவு செய்யும்போது புதியபொருள் சேரும் என்று ஒரு ஐதீகம் உண்டு. எனவே நீங்களும் எங்களிடம் தங்க நகை ஒன்றை வாங்கி அக்ஷயதிருதியையின் பலனை அடைந்து கொள்ளுங்கள்.
பிரசாத் நகை அகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.
177 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் .தொ.பே: 021 2225906
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத் திருநாள் சிறப்புமலர்
## அக்ஷய திருதியை மே 06

**குறைவில்லாமல் ...** ( I ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆற்றவேண்டும். ஆலய தரிசனம் இறைவழிபாடுகள் செய்யவேண்டும். புண்ணியத்தைத் தேடுங்கள். ஏழைய எளியவர்களுக்கு நீர், மோர், பானம், உணவு, உடை போன்றவற்றை வழங்குங்கள். ஒரு நிமிடமாவது இறை தியானம் செய்யுங்கள்.

இப் புனித நாளிலே நகையினை
கொள்வனவு செய்து ஐஸ்வர்யம் பெறுக
தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
நியூ பிரசாந்தி
ஜுவல்லறி
95, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3015





ஐஸவர்யம் பொங்கும்
அக்ஷய திருதியை நட்சத்திர நாளான
மே.06 ஆம் திகதி பொன், பொருள்
கொள்வனவொன்றை செய்து உங்கள்
இல்லத்தின் செல்வச்செழிப்பை மேலும்
பெருக்கிட அன்றைய தினத்தில் உங்களை
அன்புடன் அழைக்கின்றனர்.
யாழ்.நகரின் கஸ்தூரியார் வீதியில்
சானுகா நகை மாடத்தினர்
1995 முதல் மனங்கவர் தங்க நகைகளை
உயரிய தரத்தில் தரச்சான்றிதழுக்கு ஏற்ப
செய்து கொடுப்பதில்
ராசியான நகைமாடம்
சானுகா
நகைமாடம்
இல.200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 3700



அக்ஷய திருதியை தங்கத் திருநாள்
தெய்வீகத்தன்மை வாய்ந்த இந்நாளில் தங்கநகைகளை வாங்கி உங்கள்
ஐஸ்வர்யத்தையும் அதிர்ஷ்டத்தையும் பெருக்கிக்கொள்ளுங்கள்
ஓடர் நகைகள்
குறித்த தவணையில
செய்து
கொடுக்கப்படும்
பிறேம் நகைமாடம்
பெறுமதியான நகைகளை வாங்குபவர்களுக்கு பரிசில்கள் காத்திருக்கின்றன
PREM NAGAI MAADAM
உரிமையாளர் : இ.பிறேம்குமார்
No.171, Prem Plaza, Jaffna Road, Manipay. T.P:0777241485, 0773089572





அக்ஷய திருதியை தங்கத் திருநாள் மே 6
ஐஸ்வர்யம் நிறைந்த தங்கத் திருநாளில்
தங்க நகைகளைக் கொள்வனவு
செய்யும்போது தங்க ஐஸ்வர்யம் உங்
களுடன் நிரந்தரமாக நிலைத்திருக்கும்
அனைவரும் வருக! தங்க ஐஸ்வர்யம்
பெறுக இத்தினத்தில் கொள்வனவு
செய்பவர்களுக்கு விசேட கழிவும் பரிசுப்
பொருள்களும் வழங்கப்படும்.
தொ.பே: 2227985
நிஷானந்தா
ஜுவல்லறி
இல.6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.





அக்ஷய திருதியை தங்கத் திருநாள் மே 06
சிறி சிவாஞ்சனா
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
நகையகம்
இப் புனித நாளிலே நகையினை
கொள்வனவு செய்து ஐஸ்வர்யம் பெறுக
இல.149A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 9227



தெய்வீகத் தன்மை வாய்ந்த இந்நாளில் தங்க நகைகளை வாங்கி உங்கள் ஐஸ்வர்யத்தையும் அதிர்ஸ்டத்தையும் பெருக்கிக்கொள்ளுங்கள்.
சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 222 6972, Fax. No: 222 8869
இணை நிறுவனம்:
சாரங்கா ஜுவல்லறி
சிவா நகைமாடம்
இல.14, கண்டி வீதி,
நவீன சந்தை, சாவகச்சேரி.
தொ.பே: 021 4922398
இல.55, செட்டித்தெரு, கொழும்பு - 11,
TEL: 2434971. FAX: 0112434071



அட்சய திருதிய தங்கத் திருநாளில் சங்கானை நகரில்....
புதிய விநோ
நகைமாடம்
இத்தினத்தில் (06.05.2011) எம்மிடம் தங்கம் வாங்கும் உங்களுக்காக
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.
ஐஸ்வர்யம் உங்கள் இல்லத்தில் நிலைத்திட அட்சய
திருதியையில் தங்கம் வாங்கிச் சென்றிட கைராசியானதும்
நம்பிக்கையானதுமான ராசியான நகைக்கடை.....
புதிய விநோ
நகைமாடம்
பிரதான வீதி, சங்கானை. (செலான் வங்கிக்கு அருகில்)
தொ.பே: 0215672588, 0776002588.
இணை நிறுவனம்:
மொபைல் பிளாஷா
பிரதான வீதி, சங்கானை.
(HNB Bank அருகில்)
தொ.பே:0779352902.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org